குண்டூசி

ஏப்ரல் 58. 75 சதம்

796



விரைவில்
வருகிறது
விஜயாவின்
கடன் வாங்கி
கல்யாணம்
டைரக்ஷன்: பிரசாத்
தயாரிப்பு: நாகிரெட்டி & சக்ரபாணி

28 MAY 1958

ஜெமினியின்

மகத்தான சித்திரம்

வஞ்சிக்கோட்டை வாலிபன்

ஏப்ரல் 11உ

தமிழ்நாடெங்கும் வெளிவருகிறது

வருகிறது
பி.எஸ்.வி.பிக்சர்
பிள்ளைக் கனியமுது
டைரக்ஷன்
M.A.திருமுகம்
கதை
K.P.கொட்டாரக்கரா
வசனம்
S.அய்யாப்பிள்ளை
சங்கீதம்
K.V.மஹாதேவன்
பாடல்கள்
A.மருதகாசி
கேமரா
C.V.மூர்த்தி
ஸ்டூடியோ
பாரமவுண்ட்
Balan

சமூகப் படங்கள் பலவற்றைத் தயாரித்து வெற்றி கண்ட எம். ஏ. வி. பிக்சர்ஸார் புராணப் படத் தயாரிப்பிலும் அதே வெற்றியை நிலைநாட்டப் போகிறார்கள். புவி உள்ளளவும் புகழ் மங்காத மாபெரும் காவியமான ராமன் கதையை படமாகத் தயாரித்துள்ளனர். எம். ஏ. வி. பிக்சர்ஸின் இந்த பிரம்மாண்டத் தயாரிப்பிலே லட்சக் கணக்கிலே பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள். எல்லாம் **சம்பூர்ண ராமாயணம்** பூர்ணமாக ரசிகர்களை திருப்திப் படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தான். தெலுங்கு ராமனும் கேரள சீதையும் நடிக்கும் இப்படம் தமிழ் வருடப் பிறப்பன்று வெளிவருவது, கலைக்கு எந்த வேறுபாடும் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவது போல அமைந்திருக்கிறது.

இந்த ஊசியில்

ஏப்ரல் - '58

மாலை - 1] [மலர் - 3

★

வேறு வழியில்லையா ? ... 5
சினிமா உலகில் ... 8
இது செய்தி ... 10
எனக்குப் பிடித்த வேஷங்கள் ... 16
திரையில் தவறுகள் ... 21
சாரு 24
பொதுஜனம் பேசுகிறார் ... 35
இப்படிப் பேசுவார்களா ? 38
சென்னை மேடையில் சென்ற மாதம் ... 40
சந்திரபாபுவுடன் ஒரு நாள் 41
கேளுங்கள் ... 51
பதி பக்தி (பட அனுபந்தம்) 53
பாடகியின் மகள் ... 57
நுனிப்புல் ... 66
வட நாட்டில் ... 68
தற்கால நாடகங்கள் ... 70
வாழ்க்கை (வி)சித்திரம் ... 71
நேயர் விமர்சனம் ... 74
ஐரோப்பாவில் பரதக் கலை 79
வளரும் படங்கள் ... 84
கலைக் கூடங்களில் கடந்த மாதம் ... 87
வஞ்சிக் கோட்டை வாலிபன் ... 95
சம்பூர்ண ராமாயணம் ... 99
(பட அனுபந்தங்கள்)
திரைக் கதை வசனம் ... 103

★

வர்ணப் படங்கள் :

வில்லன்; பார்வதி; பரத நாட்டியம்; மார்வாரிப் பெண் எல்லாம் ராகினியே.

வஞ்சிக் கோட்டை வாலிபனில் பத்மினி — வைஜயந்திமாலா.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. யாரையும் குறிப்பிடுபவன அல்ல.

சில அறிஞர்கள், பெரியோர்களது ஏச்சுக்கும் பேச்சுக்கும் தப்பி மலையாக வளர்ந்து, நிலைத்துவிட்ட சினிமாத் தொழிலை "ஒழித்தே தீருவேன்" என்று குழந்தை அம்மாள் எம். எல். ஏ. சமீபத்தில் பேசினர்.

406

வேறு வழியில்லையா?

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதுபோல, வரி போடும் தேவை முளைக்கும் போதெல்லாம் சர்க்காருக்கு சினிமா நினைவு வந்து விடுகிறது!

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சரிக்கட்ட சினிமாவின் தலையில் கை வைத்திருக்கின்றனர் சென்னை சர்க்கார்!

அவர்களாகவே நினைத்துக் கொண்டார்கள். சினிமாவுக்கு வரி போடத்தான் வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்கள். "ஏழைகளுக்கு இருக்கும் ஒரே உல்லாச சாதனம் சினிமாவாயிற்றே! ஏற்கெனவே சினிமாக் கட்டணம் உயர்ந்து போயிருக்கிறதே; இன்னும் அதை உயர்த்துவது முறையா?" என்றெல்லாம் நினைத்துப் பார்க்கவும் நேரமில்லை அவர்களுக்கு.

"நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால் தான் மக்கள் இன்பத்தோடு வாழும் சாதனம் பெருகும்" என்று சொல்லிக் கொண்டே தமாஷாவரித் திருத்த மசோதாவைக் கொண்டு வந்து கம்பீரமாக நிறைவேற்றியும் விட்டார்கள்.

உண்மையில் சினிமாவுக்கு வரி போட்டது இன்பத்துக்கு வைத்த வேட்டு; ஏழைகளின் தலையில் மேலும் ஏற்றிய சுமை என்பதே நமது கருத்து.

மக்களின் பொழுது போக்கில் மிகுந்த அக்கறை இருப்பது போலப் பேசிக் கொண்டே சினிமாவுக்கு வரி போட்ட விசித்திரப் பேச்சை, மாய்மாலச் சொற்களை என்ன என்பது!

மக்களின் இன்பம் பெருக உண்மையில் சென்னை சர்க்கார் எதுவும் செய்யா விட்டாலும் போகிறது. உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு என்று ஆகாமல் இப்போதுள்ள சினிமாக் கட்டணத்தை உயர்த்தாமல் இருந்தாலே பெரிய உபகாரமாக இருந்திருக்கும்! அதற்குப் பதிலாகப் பொன் முட்டையிடும் வாத்தின் வயிற்றைக் கிழித்துப் பார்க்க வரி என்ற கத்தியைக் கையிலே தூக்கிக் கொண்டு விட்டார்கள்.

சென்னை சினிமா உலகம் பரம சாது, சிறிது முணுமுணுத்து விட்டுச் சும்மா இருந்து விடும் என்ற துணிவோடும் தான் இதைச் செய்ய சென்னை சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறோம்.

அது ஓரளவு உண்மைதான்! தீவிரமாக எதிர்க்க சென்னைப் படவுலகப் பிரமுகர்களில் யார் முன் வந்தார்கள்? பெயருக்கு தென்னிந்திய சினிமா வர்த்தக சபை என்று ஒன்று இருக்கிறது. அது வழக்கம் போல ஒரு கண்டனத் தீர்மானம் போட்டு விட்டு ஓய்ந்து விட்டது! அது ஒன்றுதான் அதனால் முடியும். இன்னும் சற்றுச் சுறு சுறுப்புக் காட்டவேண்டுமானால் அமைச்சர்களைக் கண்டு பேச ஒரு சிலரைப் பொறுக்கி அனுப்பிவைக்கும். அவர்கள் போவார்கள்; வருவார்கள். இவை எல்லாம்தான் இதுவரையில் 'வெற்றிகரமாக' நடந்திருக்கின்றன!

உண்மையில் ஒவ்வொருவருக்கும் இந்தப் புது வரிச் சுரண்டலில் நெஞ்சு முட்டக் குறையும் வருத்தமும் ஏற்பட்டிருக்கின்றன.

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல சினிமாவுக்கு வரியை விதித்து நாடகங்களுக்கும் நாட்டியங்களுக்கும் வரிச் சலுகை அளித்துக் கருணை புரிந்திருக்கிறார்கள் சர்க்கார்.

இதைத்தான் விஜயாவின் அதிபர் திரு நாகி ரெட்டி, 'இனிச் சினிமாப் படங்கள் எடுப்பதைக் கை விட்டுவிட்டு நாடகம், நடனங்களில் இறங்கி விடத்தான் வேண்டும் போல இருக்கிறது!' என்று ஹாஸ்யமாக, தன் மன எரிச்சலைக் கூறாமல் கூறி இருக்கிறார்.

வரவு செலவை சரிக்கட்டச் சினிமாதானா அகப்பட்டது? குதிரைப்பந்தயம் போன்று இன்னும் எத்தனையோ அநாவசியப் பொழுது போக்குகள் இருக்கின்றன கை வைக்க; தாங்க.

அதை எல்லாம் விட்டு விட்டு, ஏழைகளின் இன்பத்துக்கு இன்னல் ஏற்படும்படி வரி உயர்வு செய்தது விரும்பத் தகாத செயலாகும்.

இது பற்றி, சினிமாவே தங்கள் மூச்சு என்று வாய் கூசாது வெளியே மேடைகளில் முழங்கி வரும் சட்டசபை உறுப்பினர்கள் சிலர் தங்கள் எதிர்ப்பைத் தீவிரமாகக் காட்டாமல் புஸ்வாண முணு முணுப்பை மட்டும் காட்டுவது ஏனோ?

வடக்கே சினிமா வரி உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும், ஹர்த்தால்களும் நடந்திருக்கின்றன. இங்கு காட்டப் படுகிற நல்ல தன்மையைக் கண்டு, சென்னை சர்க்கார், மக்கள் வரி உயர்வை ஒத்துக் கொண்டு விட்டார்கள் என்று எண்ணினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

வளர்ந்து வரும் சினிமாக் கலையை இதுவரையில் சர்க்கார் ஆதரித்தது இல்லை. ஆனால் வரியின் பெயரால் அதை அமுக்குகிற மனப்பான்மையையாவது விட்டொழித்தால் அதுவே பேருபகாரமாக இருக்கும்.

மலிவுப் படத் தயாரிப்புகள்!

காலம் மாறுகிறது!

ஆமாம், எப்படி எப்படியோ மாறுகின்றது!

மலிவுப் பதிப்பு வெளியீடுகளாக, பெரிய பெரிய காவியங்களும், கதைகளும், குறைந்த விலைகளில் விற்பனைக்கு வந்து பெருவாரியான வாசகர்களின் ஆதரவைப் பெற்று வருகின்ற காலம் இது. சினிமாப் படவுலகில் கூட தற்பொழுது மலிவுத் தயாரிப்பாக, புது முகங்களையும்

சாதாரண நடிகர்களையும் வைத்து படு வேகத்தில் படம் தயாரித்து வெளியிட்டு வெற்றியும் கண்டு வருகிறார்கள். அந்த வெற்றி படங்களின் மூலம் ஒரு சில நடிகர் நடிகைகளுக்கு திடீர் குபேர யோகமும் அடிக்க ஆரம்பித்து விட்டது என்றால் காலம் மாறிப் போச்சு என்றுதான் பிரபல படாதிபதிகளும் உணர வேண்டும்.

அறுபது கர்ணமிருதமான பாடல்கள் என்று விளம்பரப் படுத்தப்பட்ட காலம் போய், சில சிரிப்பு நடிகர்களுக்காகவே படம் ஓடுகிறது என்ற எண்ணம் போய், இப்போது படுவேகமாகத் பல சாதாரண நடிகர்களை வைத்துக் கொண்டு விரைவுப் படங்கள் கொண்டு வருகிற காலமாகி விட்டது.

பெரும்பாலும் பிரபல நட்சத்திரங்களை வைத்து அரைப் படம், கால் படம் எடுத்து வருகிறவர்களெல்லாம் அந்தப் படங்களை அப்படியே வைத்து விட்டு இப்போது தலைக்கு ஒரு மலிவுப் படத் தயாரிப்பில், வேகமாக முனைந்து விட்டார்கள்.

இந்த வேகமும் விழிப்பும் மூன்று மாதங்களுக்குள் ஒரு படத்தை முடிக்க உதவுகின்றன என்ற விந்தைக் குரிய செய்தியைத்தான் சொல்லுகின்றன.

சில பிரபல நடிகர்கள் படப் பிடிப்புக்கு வராமல் இருந்த விளைவுகளும், கேட்ட பெருந் தொகைப் பணமும், போட்ட நிபந்தனைகளும் தாம் இந்தப் புதிய நிலையைத் தமிழ்ப் பட உலகில் உண்டாக்கி இருக்கின்றன.

இந்த விழிப்பை வரவேற்கிறோம். இதனால் பல புதிய முகங்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைப்பதுடன், பழைய முகங்களுக்கும் ஒரு பாடத்தைப் படிப்பிக்கின்றது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

Statement about ownership and other particulars about Newspaper

GUNDOOSI

Form VI

1. Place of Publication	6, Conron Smith Road, Madras - 6.
2. Periodicity of Publication	Monthly.
3. Printer's Name Nationality Address	K. Ganapathiraman, Indian, Arcot Road, (A. V. M. Cempouud) Madras-26.
4. Publisher's Name Nationality Address	K. Radhakrishnan, Indian, 6, Conron Smith Road, Madras - 6.
5. Editor's Name Nationality Address	K. Radhakrishnan, Indian, 6. Conron Smith Road. Mad as - 6.
6. Name and address of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	Nataraja Publications, Proprietor: T S. Viswanathan, 6, Conron Smith Road, Madras - 6.

I, K. Radhakrishnan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

K. Radhakrishnan,
Signature of Publisher.

Dated 27th Feb. 1958.

சினிமா உலகில்



[நமது நிருபர் சரடு]

"ஆபாரம் அண்ணா, அபாரம்!" என்று சென்னை அசம்பிளி கட்டிடத்திற்கு முன்னால், அவசர மாகக் காரில் ஏறிக்கொண்டிருந்த அண்ணாத்துரைக்கு முன்னால் ஒலி பரப்பிக்கொண்டே போய் நின்றேன்.

'அ' விலிருந்து தொடங்கியிருக்கும் உன் புகழுரையைக் கேட்க எனக்க நேரமில்லை; தம்பி, சரடாரே, சற்று சுருக்க வழிவிடும் பார்க்கலாம்!" என்றார் அண்ணா.

"சினிமாவைச் சென்னை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்ற யோசனை உங்கள் ஒருவருக்குத்தான் உதிக்கும்! உதய சூரியனைப்போல் உதித்து விட்டது. சொற்களும் உங்கள் வாயிலிருந்து குதித்து விட்டன. அத்துடன் சினிமாவை அரசாங்கமே ஏற்று நடத்தினால் இலவசமாகக் கதை எழுதித் தருவதாக வேறு அறிவித்து விட்டீர்கள்! இதை விடச் சட்டசபையில் வேறு என்ன சாதிக்க இருக்கிறது?" என்றேன்.

அண்ணா தன் செங்காவிப் பற்களைச் சிறிது காட்டிச் சிரித்து விட்டு, "என் சட்டசபை நுழைவின் அடிப்படையே அது தானே!" என்றார்.

"'எங்கள்' என்று சொல்லுங்கள்! உங்களோடு கூடச் சட்டசபைக்கு வந்திருக்கும் தம்பிகளின் இலட்சியமும் அப்படித்தனே இருக்கும்?" என்று திருத்தப் பிரேரேபணை கொண்டு வந்தேன்.

"சரடுவிடுவதில் மட்டுமின்றிச் சிண்டு முடிந்து விடுவதிலும் கெட்டிக்காரனாக இருப்பாய் போல இருக்கிறதே!" என்று என் காதைப் பிடித்து முறுக்கி விட்டு, காரில் ஏறிக் கொண்டார் அண்ணா.

'இனிச் சினிமாவைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டால்தான் தாங்கள் கதை-வசனம் எழுதுவீர்கள் போல் இருக்கிறது" என்று நான் கேட்ட கேள்வி அண்ணாவின் காதில் விழவில்லை, அதற்குள் கார் கிளம்பி விட்டது!

அங்கிருந்து நேராகத் திருமலைப் பிள்ளை ரோடுக்குத் தாவினேன். சட்டசபை நேரங்களில் அதிகமாக வாயைத் திறக்காத முதலமைச்சர் காமராசர், அண்ணாவைப் பார்த்து, 'நீங்கள் நடிக்க வேண்டும்!' என்ற உறுதியைப் பெற்றுக் கொண்டாரே அதைப் பாராட்டாமல் எனக்கு இராத் தூக்கமோ பகல் தூக்கமோ நிச்சயம் வராது போல இருந்தது.

"இந்தத் தடவை சென்னை சட்ட சபை வரவு செலவுக் கூட்டம் வெகு ஜோர்! வெகு கவர்ச்சி! அண்ணு, சினிமாவுக்குக் கதை-வசனம் எழுதிக் கொடுத்தால் மட்டும் போதாது, நடிக்கவும் வேண்டும் என்று சொன்னீர்களே, பிரமாதம். ஆஹா, அவரும் ஒப்புக் கொண்டு விட்டாரே?" என்றேன்.

"அதன் கருத்து என்ன தெரியுமா?" என்ருர் காமராசர். தொடர்ந்து "இந்த ஆண்டுக்கு தி. மு. க. ஏடுகளுக்கு இந்த ஒரு சப்ஜக்ட் போதும்! சினிமா தேசியமயமாக வேண்டும் என்று பேனுவினல் ஏடுகளைக் கருப்பாக்கிக் கொண்டும், மேடையில் முழக்கிக் கொண்டும் இருப்பார்கள்! நாம் பாட்டுக்கு வேறு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கலாம்!" என்று என் காதோடு விளக்கினுர் காமராசர்.

"அப்படியா?" என்று கேட்டு விட்டு அப்படியே சினிமா நடிகை பண்டரிபாய் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

"கார் ஆக்ஸிடென்டிலிருந்து நீங்களும் மைனுவதியும் தப்பிப் பிழைத்தீர்களாமே? எல்லாம் பாண்டுரங்கனின் மகிமை" என்று சொல்லி வைத்தேன்.

"ஆமாம், எல்லாம் அவன் செயல்தான்? நமது கையில் என்ன இருக்கிறது?" என்று பண்டரி சொல்லிச் சிரித்தார்.

பிறகு "செய்தி தெரியுமா?' என்ருர்.

"தெரியும், கோடம்பாக்கத்தில் பாண்டுரங்கனுக்குக் கோயில் கட்டிய செய்திதானே? பேஷான செய்கை" என்று பாராட்டினேன்.

பண்டரி தன் கண்களை மூடிக் கொண்டு, "விட்டல, விட்டல, பண்டுரங்க விட்டல......" என்று பாடத் தொடங்கிவிட்டார்.! என் கையிலும் ஜாலராவைத் தந்து விடப் போகிருரோ என்று பயந்து, அவர் கண்களைத் திறப்பதற்கு முன்னுல் நான் அங்கிருந்து பாய்ந்தோடி வந்து விட்டேன்!



ரூபாய் 6/-க்கு ஒரு கடிகாரம்

சங்கிலித் தொடர்பு முறையில் ரூ. 6/-க்கு ஒரு கடிகாரத்தைப் பெறுங்கள். 15 ஜுவல்கள் கொண்ட இக்கடிகாரம் 5 வருஷ உத்திரவாதமுள்ளது. தபால் செலவு 1-25 நயாபைசே தனி. எங்களுடைய பாரடைஸ் சென்டைப் பிரபலப் படுத்தவே, இதை ஆரம்பித்திருக்கிரேம். நீங்கள் விரும்பாவிட்டால் பணம் வாபஸ்.

American Trading Company,
(Watch Suppliers)
(W-1) JULLUNDER CITY.

இது செய்தி

விளையாட்டு விழா

சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக் பிரதி வருடமும் போல இவ் வருடமும், விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்தியது. சென்ற மாதம் 22-ம்தேதி அவர்கள் நடத்திய ஒரு விழாவுக்கு, டெக்னிகல் கல்வி டைரெக்டர் ஜே. எம். பிரடரிக் தலைமை வகித்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

தேநீர் சென்டர்

சென்னை நகரில் தேநீர் சென்டர் ஒன்று சென்ற மாதம் 26-ம் தேதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தியாவிலேயே இம்மாதிரி ஏற்படுத்தப் படுவது இது இரண்டாவதாகும். மவுண்ட் ரோட் பழைய பொஸ்ட்டோ கட்டிடத்தில் இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தேயிலை போர்டின் தலைவர் யு. கே. கோஷால் போர்டின் அபிவிருத்தி முயற்சிகளை விவரித்தார். உலகத்திலேயே அதிகம் தேநீர் அருந்தும் நாடுகளில் இந்தியா இரண்டாவதாகும் என்று கூறினார். தேநீரின் முழுப் பலனும் சுவையும் கிடைக்க வேண்டுமானால் சரியான முறையில் எப்படித் தயாரிப்ப தென்பதைப் பெண்மணிகள் இங்கு நேரில் காணலாம். தேநீர் பற்றிய தகவல்களையெல்லாம் நிலையத்தில் கேட்டறியலாம். அழகான பிரசுரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

குமாரி பானு

மகாநாடு நடந்தது

அகில இந்திய சினிமாத்தொழில் சிப்பந்திகள் சங்கத்தின் நான்காவது மகாநாடு சென்ற மாதம் 23-ம் 24-ம் தேதிகளில் நடைபெற்றது. உத்தரப் பிரதேச கவர்னர் வி. வி. கிரி இந்த மகா நாட்டை ஆரம்பித்து வைத்தார்.

நாடகப் பரிசுகள்

நாடகத்துறையில் அப்போதைக்கப்போது இரண்டு பரிசுகள் வழங்க சங்கீத நாடக அகாடமி தீர்மானித்திருக்கிறது. சிறந்த நாடகங்களுக்கும் மேடையில் நடிக்கப்படும் சிறந்த தயாரிப்புகளுக்குமாக இரண்டு பரிசுகள் வழங்கப்படும். இந்திய பாஷைகளில் புதிய நாடகங்கள் எழுதுவோருக்கும் நாடகங்களைச் சிறந்த முறையில் மேடையில் கொண்டு வருவோருக்கும் உற்சாகமளித்து,

நாடகத்துறையில் முன்னேற்றம் ஏற்படும்படி செய்வதே பரிசு வழங்குவதன் நோக்கமாகும். இந்த வருஷம் ஹிந்தி, தமிழ் மொழிகளில் வெளியாகும் நாடகங்களும் மேடைத் தயாரிப்புகளும் பரிசீலனை செய்யப்படும். மிகச் சிறந்த நாடகம் எழுதிய ஆசிரியருக்கு ரொக்கமாக ரூ. 2500/-ம், தங்கத் தோடாவும், ஒரு சால்வையும் பரிசாக வழங்கப்படும். சிறந்த மேடைத் தயாரிப்புக்கு ரொக்கமாகக் கொடுக்கப்படும் ரூ. 2500/-ஐத் தவிர, மேடையில் நடித்துக்காட்டும் செலவுக்காகவும் ரூ. 2500- வழங்கப்படும். எழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிக்கும் கடைசி நாள் 1958 மே மாதம் 15-ந் தேதி வரையில் நீடிக்கப்பட்டிருக்கிறது. போட்டியில் கலந்து கொள்வதற்கான விதிகளை, புரோகிரும் ஆபீசர் சங்கீத நாடக அகாடமி, 70, ரீகல் பில்டிங்ஸ், புது தில்லி. என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிய பிலம் விழா

இம் மாதம் 22-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை மணிலாவில் ஐந்தாவது ஆசிய பிலம் விழா நடைபெற விருக்கிறது. இந்த விழாவில் இந்தியாவின் பிரதிநிதியாக நாராயணன் கம்பெனி அதிபர் சே. எஸ். நாராயண அய்யங்கார் கலந்து கொள்வார். இந்த விழாவில் திரையிட "மதர் இந்தியா" (இந்தியத் தாய்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

குமாரி சாருபாலாவைப் பாராட்டி வாழ்த்துகிறுர் பத்மினி.

"லவ - குசா" வுக்கு பூஜை

லலிதா பில்ம்ஸார் தாங்கள் தயாரிக்கப் போகும் லவ-குசா தமிழ்-தெலுங்குப் படங்களின் ஆரம்ப பூஜையை சென்ற மாதம் 5-ம் தேதி வாஹினி ஸ்டுடியோவில் நடத்திஞர்கள். அன்று விஜயா அதிபர் பி. நாகி ரெட்டி தம் ஆகி வந்த கையிஞல் காமிராவை ஓட விட்டு ஆரம்பித்து வைத்தார். இப்படம் முழுவதும் கேவாக் கலரில் தயாரிக்கப் படவிருக்கிறது.

மணிவேல் பிச்சர்ஸ்

மணிவேல் பிக்சர்ஸ் என்ற கம்பெனி புதிதாளுலும் அதில்

பங்கு கொண்டுள்ளவர்கள் பட உலகின் பழைய புள்ளிகள்தான். இவர்கள் ஒரு தமிழ்ப் படத்தை பாரமவுண்ட் ஸ்டுடியோவில் தாரிக்கத் தொடங்கியுள்ளனர். பெயரிடப் படாத இந்த சமூகச் சித்திரத்தில் பாலையா, கண்ணப்பா, டி. ஆர். ராமச்சந்திரன், பண்டரி பாய், சுந்தரிபாய், பம்பாய் மீனாட்சி, கே. எஸ். ராஜம், எம். ஆர். சந்தானம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களாக நடித்து வருகின்றனர். கலைப்பித்தன் வசனம் எழுதியுள்ள இந்தப் படத்தின் டைரெக்ஷனை கே. எஸ். மணியும், சங்கீத டைரெக்ஷனை கோவிந்தராஜுலு நாயுடுவும் கவனித்து வருகின்றனர்.

குடந்தை நகர ஆஸ்பத்திரிக்கு ஒரு எக்ஸ்ரே கருவி கிடைக்க வழி செய்து ஹாஸ்ய நடிகர் ஏ. கருணாநிதி பலரது பாராட்டுதலுக்கும் உரியவரானார்.

பாடகர் படாதிபதியாகிறார்

இசை மணி பிலிம்ஸின் பாகஸ்தராகி, பின்னணிப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் படாதிபதிகளின் ஜாபிதாவில் இடம் பெறுகிறார். இந்தக் கம்பெனியார் தயாரிக்கப் போகும் படமான கடவுள் எங்கேயின் கதை - வசனத்தை எம். ஏ.

சென்னையில் நடைபெற்ற பதினைந்தாவது அகில உலக வெஜிடேரியன் காங்கிரஸ் விழா கண் காட்சியில் கணேஷ்ராம் தயாரிப்புகள் இடம் பெற்றன. அக்கம் பெனியாரின் ஒரு தயாரிப்பான மாதுளை ரசத்தை மந்திரி சுப்பிரமண்யமும் ராஜமன்னாரும், மைசூர் ராஜப் பிரமுகரும் பருகிப் பாராட்டினர் அதிபர் நாராயணசாமி அய்யர் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்.



எஸ். நடராஜன் என்பவர் எழுதுகிருர். ஆர். ஆர். சந்திரன் டைரெக்ட் செய்யப்போகும் இப்படத்தின் சங்கீத டைரெக்‌ஷனை ஜி. ராமனுதன் ஏற்றிருக்கிருர். எஸ். எஸ். ராஜேந்திரன், முத்துலட்சுமி, சுப்பையா, டி பாலசுப்பிரமணியம், ஆர். பாலசுப்பிரமணியம், பக்கிரிசாமி ஆகியோர் நடிக்கவிருக்கின்றனர்.

நாடகத்திற்குத் தடை

எம். ஆர். ராதாவும், அவருடைய கோஷ்டியினரும், "தசாவதாரம்," "போர்வாள்" ஆகிய இரு நாடகங்களையும் சென்னை மாகாணத்தில் எந்தப் பொது இடத்திலும் நடிக்கக்கூடாதென சென்னை சர்க்கார் தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

படங்களுக்குப் பரிசு

சிறந்த சினிமாப் படங்களுக்கு டெல்லி சர்க்கார் பரிசு கொடுத்து வருவது தெரிந்ததே. இதுவரை பதக்கங்கள் மட்டுமே பரிசாகக் கொடுக்கப்பட்டு வந்தன. இந்த வருடத்திலிருந்து சிறந்த சினிமா படத்திற்கு பதக்கத்தோடு பண முடிப்பும் பரிசாகக் கொடுக்கப்படும். இந்தியாவிலேயே சிறந்த படத்திற்கு தங்கப் பதக்கம் கிடைக்கும், இது தவிர, தமிழ், தெலுங்கு, இந்தி முதலிய ஒவ்வொரு மொழியிலும் உள்ள சிறந்த படங்களுக்கும் பரிசுகள் கொடுக்கப்படும். இதன்படி தமிழில் வெளியான சிறந்த படத்தைத் தேர்ந்தெடுக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு உள்ளது. இந்தக் கமிட்டியின் தலைவர் பி. டி. ராஜன். கமிட்டியின் மற்ற மெம்பர்கள் வருமாறு: (1) சினிமா முதலாளி ஸ்ரீராமுலு நாயுடு (2) கே. சக்கரவர்த்தி (3) கே. சடகோபன் (4) மஞ்சுபாஷிணி அம்மாள் (5) வெங்கடேச அய்யங்கார் (6) வி. சீனிவாசன் (7) வி. ராமய்யா. இது தவிர இந்தியாவிலேயே சிறந்த படத்தைத் தேர்ந்தெடுக்க டெல்லியில் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.



தான் வணங்கும் தெய்வமான பண்டரிநாதனுக்கு சென்னை கோடம்பாக்கத்திலே ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து கோயில் கட்டி கும்பாபிஷேகமும் நடத்திவைத்தார் நடிகை பண்டரிபாய். பண்டரிநாதனும்—கோயிலும்.

நடைபெற்றது. கும்பகோணத்திலே வாணி விலாஸ் சபையினரும், மற்ற பலஸ்தாபனங்களும் இவருக்கு வரவேற்பு அளித்து கௌரவித்தன.



சேராத ஜோடி— அடையார் ஆர்ட்ஸ் அக்காடமியில் நடந்த நடிகர் மனேகரின் "இலங்கேஸ்வரன்" நாடகத்திற்குத் தலைமை வகித்து நடிகை அஞ்சலிதேவி பாராட்டிப் பேசினர்.

சாருபாலாவுக்கு வரவேற்பு

அடையாறு ஆர்ட்ஸ் அகாடமியினர், ஐரோப்பாவிற்குச் சென்று திரும்பிய நடனக்கலைச் செல்வி சாருபாலாவை ஒரு வரவேற்பு நடத்தி கௌரவித்தனர். சென்ற மாதம் 7-ம் தேதி நடைபெற்ற இந்த விழாவுக்கு பிரபல நடிகை பத்மினி தலைமை வகித்து சாருபாலாவைப் பாராட்டி ஆசி கூறினர். சாருபாலா தகுந்த முறையில் தலைவருக்கும், தனக்கு கௌரவம் அளித்த அகாடமியினருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினர். விழாவின் ஒரு நிகழ்ச்சியாக சாருபாலா சகோதரிகளின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

குமாரி உமாவின் பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு நகரமேயர் தாரா செரியன் தலைமை வகித்தார்.

வாழ்த்துகிறோம்

நமது கொட்டாப்பட்டி ஏஜண்டு கே. எஸ். நாகூர், ஆமீனை பேகத்தை சென்ற 19-ம் தேதி திருமணம் செய்துகொண்டார்.

"தோட்டக்கார" விஸ்வநாதன் தமது அபிமான புத்திரியும் பாடகியுமான சௌ. கடம்பி ராஜேஸ்வரியை சிரஞ்சீவி கே. என். பாலா கிருஷ்ணனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். சென்னையில் நடந்த இத்திருமணத்திற்கு, பட உலக நாடக உலகப் பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர்கள்.

நடிகர் டி. கே. பாலச்சந்திரன், விசாலாட்சியை சென்ற மாதம் 27-ம் தேதி திருவனந்தபுரத்தில் மணந்துகொண்டார்.

நமது திருப்பத்தூர் ஏஜண்ட் தமது புத்திரன் சிரஞ்சீவி ஏ. ஜே. கிருஷ்ணமூர்த்தியின் உபநயன முகூர்த்த விழாவை மிகவும் சிறப்பாக நடத்தினர்.

ஜப்பான் சலனப் படச் சங்கத் தலைவர் ஷிரோ கிடோ சென்ற மாதம் சென்னைக்கு வந்திருந்தார். அவரை வரவேற்று உபசரித்து அரிய விருந்து அளித்தார் படாதிபதி ஏவி. மெய்யப்பன். அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள படாதிபதிகள் அனைவருமே வந்திருந்தனர்.

எனக்குப் பிடித்த வேஷங்கள்

ராகினி

வேடங்கள் போட்டுக் கொள்வது என்பது, 'நமது கருத்தைப் பொருத்ததா?' என்று யோசித்துப் பார்த்தால், கிடைக்கும் பதில் 'இல்லை' என்பதே ஆகும். நடிகை என்பவளிடம் எந்த வேடத்தையும் ஏற்றுக் கொள்ளும் ஆர்வம் இருக்க வேண்டும்; அதற்குத் துணிவும தேவையானது.

இப்பொழுதெல்லாம் பெண் ஆண் வேடம் போடுவது படவுலகிலே வழக்கமாகி விட்டது. அதற்கு ஏற்ப தலையில் தொப்பியுடன் வேட்டைக்குச் செல்லும் ஒரு காரிகையைப் போலக் காணப்படுவது நான்தான் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விடுகிறேன்.

எந்த வேடம் போட்டுக் கொண்டாலும் சத்தியமே

ராகினிக்கு தனகோடி மேக்கப் செய்கிருர்.

உருவான பார்வதி வேடத்தைப் போட்டுக் கொள்ளும் பொழுது என்னை அறியாமல் ஒருவிதப் புது சக்தியும் ஆவேசமும் உண்டாகி விடுகின்றன. பார்வதியை நாங்கள் குலதெய்வமாகக் கொண்டிருக்கிறோம். எங்கள் குடும்பத்திலே பார்வதி என்ற பெயர் பலருக்கு உண்டு.

ஆனால், நடனம் ஆடுவதற்கென்றே நானும் என் அன்பு சகோதரிகளும் வந்தவர்கள். கல்பனா என்ற உதய சங்கரின் மகோன்னத நடனங்கள் நிரம்பிய படம் மூலமே எங்களுக்கு சினிமாப் பிரவேசம் கிடைத்தது. நாட்டியமும் நடனமும் உயிரென நான் நினைப்பதால் பரத நாட்டிய வேடத்தை உளமகிழ்வோடு இதோ ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

நடன மேடைகளிலிருந்தே மார்வாடிப் பெண் வேடம் போடுவது எனக்குச் சகஜமாகி விட்டது. அந்த ஆசையையும் இதோ வேடம் போட்டு நிறைவேற்றிக் கொண்டு விட்டேன்.

என்னை இன்று ஒரு நடிகையாக மாற்றி அமைத்தது என்னுடைய ஊக்கம்தான். அந்த ஊக்கம் தந்த நான்குவித வேடங்களைத்தான் இதோ நான் போட்டுக் கொண்டதை நீங்கள் பார்க்கிறீர்கள். என்னுடைய இந்த வேடங்களெல்லாம் மிகவும் நன்ருக இருக்கின்றன என நீங்கள் பாராட்டுகிறீர்கள். அவ்வளவுக்கும் பெருமளவு எனக்கு உதவிய மேக்கப் மேன் தனகோடிக்கு என் நன்றி.





இயற்கை வர்ணப் போட்டோக்கள்:
வி. கோபால கிருஷ்ணன்.

கலர் - பிளாக்குகள் :
கினேன் அண்டு பெர்ல், சென்னை.

திரையில் தவறுகள்

கே. ரகுபதி

எவ்வளவோ ஆங்கிலப் படங்கள் பார்க்கிறோம். குறைந்த நீளத்தில், சிறந்த படங்களாக சட்டென்று குற்றங்கள் கண்டுபிடிக்க முடியாத விதத்தில் அவை அமைந்து நம்மை வியப்பில் ஆழ்த்தி விடுகின்றன. தவிர, படம் எடுக்கும் போது கதை நிகழ்ந்த காலம், இடம் முதலியவைகளைப் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்து, நிதானித்து அவர்கள் படம் எடுப்பதால் அவைகள் நன்கு அமைந்து விடுகின்றன.

முக்கியமாக சரித்திர சம்பந்தமாகவோ, புராண சம்பந்தப்பட்டோ படங்கள் தயாரிக்கும் போது அவர்கள் ரொம்பவும் ஜாக்கிரதையாகத் தயாரிக்கிறார்கள். ஆடை அணிகள், சூழ்நிலை யாவுமே கதை நிகழ்ந்ததாகக் கருதப்படும் காலத்துக்கே நம்மை அழைத்துச் செல்ல வேண்டும்.

இந்தி படத் தயாரிப்பாளர்களும் மேல் நாட்டுப் படங்களைப் போலவே தயாரிப்பில் ஓரளவுக்கு நன்கு கவனம் செலுத்துகிறார்கள். தமிழ்ப் படங்களோ? தவறுகள் மலிந்து தான் வருகின்றன என்று வருத்தத்துடன் ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நாடக மேடையில் தவறுகள் நேருவது சகஜம். மூக்குக் கண்ணாடி வழக்கமாக அணியும் நபர், விசுவாமித்ர வேடம் தாங்கியபோது மறந்து போய் மூக்குக் கண்ணாடியுடனே வந்த கதை நமக்குத் தெரியும். பிரகலாதா நாடகத்தில் ஹிரண்யன் காலால் உதைப்பதற்கு முன்னதாகவே, ஒரு கால் குட்டையான ஸ்டூலில் நின்று நொடித்த காரணத்தால் அட்டைத் தூணையும் சாய்த்துக் கொண்டு ஹிரண்யன் காலடியில் சரணாகதி அடைந்த நரசிம்மாவதாரத்தை நாம அறிவோம்! துரியோதனாதிகளின் சபையில் நாய் குறுக்கே ஓடியது, சகுனியாக நடித்தவரின் சமயோசிதப் பேச்சால் சமாளிக்கப்பட்ட விதம் நாமெல்லாம் நன்றாக அறிந்ததே.

இவைகளெல்லாம் நாடக மேடை என்ற காரணத்தால், தவறுகள் எதிர்பாராமல் நேருவது சகஜமே என்ற காரணத்தால், விளக்கை அணைத்தோ, சமயோசிதமாகப் பேசியோ தவறைத்திருத்திவிடலாம் என்ற காரணத்தால், மன்னித்து விட வேண்டிய விஷயங்கள்.

சினிமா அப்படியல்ல; ஒரு முறைக்கு இரு முறையாக — ஏன், சமயங்களில் பல முறைகள் கூட ஒரே காட்சியை சுடுகிறார்கள். பல தடவைகள் அதைப் போட்டுச் சரி பார்க்கிறார்கள். அதன் பின்னரே அது பொதுமக்கள் பார்வைக்கு என்று திரைக்கு வருகிறது.

கவலை மறந்து அகம் குளிர, முகம் குளிரப்பேசும் காதல் ஜோடி ஜெமினி கணேசன்—காமினி — " மனமுள்ள மறுதாரம். "

நாலரை அணா ரசிகன் முதல் தடவையாகப் பார்க்கும் போது அவன் கண்ணிலே பட்டுவிடுகிறது தவறுகள், அப்புறம் கேட்க வேண்டுமா? வெகு எளிதாக விஷயம் பரவி விடுகிறது. இவ்வளவு பெரிய தவறு எப்படி இடம் பெற விட்டார்கள் என்று எல்லோருமே கேட்கிறார்கள்.

நம் படங்களில் ஏற்பட்டுள்ள தவறுகளில் சில உதாரணங்கள் மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

கன்னிகா என்ற படத்தில் கதா நாயகன் ஒரு வீதியில் வரும் போது காங்கிரஸ் கொடி ஒன்று பறந்து கொண்டிருந்தது ஒரு இடத்தில். அது புராண காலக் கதை என்பதால் கொடி காட்டப்பட்டது கேலியாக ஆகிவிட்டது!

தூக்குத் தூக்கி படக் கதை நிகழ்ந்த காலத்திலேயே மின்சாரம் வந்து விட்டது போலும்! கோட்டை வாயில் வழியே கதா நாயகன் குதிரையில் வெளியே வரும் போது மின்சாரக் கம்பங்களும் 'சர்வீஸ் லைனு'ம் தெரிந்தன!

டாக்டர் சாவித்திரி சமூகப் படத்தில் கதாநாயகி பேசிக் கொண்டிருக்கும் போதே கட்டிய சேலை கலர் மாறிவிடுகிறது! அது வேறொரு நாள் ஷூட்டிங் என விஷயம் அறிந்தவர்கள் சமாதானம் சொல்லலாம். சாதாரணமாக படம் பார்க்கிறவர்களுக்கு என்ன தெரியும்?

சாதாரணத் தயாரிப்பாளர்கள், புதிதாக தொழிலில் இறங்கியவர்கள், 'கத்துக்குட்டி' டைரெக்டர்களால் எடுக்கப்படும் படங்களில் இப்படிப் பட்ட தவறுகள் ஏற்பட்டால் மன்னித்து விடலாம். ஆனால், பல காலம் தொழில் அனுபவம் உள்ள பிரபல தயாரிப்பாளர்களின் படங்களில் கூட தவறுகள் நேர்ந்து விடுகின்றன. இதை கவனக் குறைவு என்று சொல்வதா? அல்லது ......

ஜெமினி **சக்ரதாரியில்** நாகையா வண்டியிலிருந்து இறங்கும் போது தலைப்பாகைக்கு கீழ் தலையில் நிறைய மயிர் தெரிந்தது. உள்ளே போன பிறகு சுத்தமாக எதையும் காணோம்!

அபூர்வ சகோதரர்கள் நினைவிருக்கிறதா? எம். கே. ராதா வலது கையிலே காயம் பட்டு வருகிறார். பானுமதி இடது கையிலே கட்டுப் போடுகிறார். எல்லோருமே நன்கு கவனித்த தவறு இது.

இவையெல்லாம் சாதாரணத் தவறுகள்! இன்னும் 'இமாலயத் தவறு' என்று எவ்வளவோ சொல்

லக் கூடியவைகள் சர்வ சகஜ மாக நடந்து வருகின்றன. கதை நடந்ததாகச் சொல்லப் படும் காலத்திற்கு சற்றும் பொறுத்தமில்லாமல் காட்சி களோ, வசனங்களோ சேர்க் கப்பட்டு விடுவதை நாம் கவ னிக்கலாம்.

பிரம்மாண்டத் தயாரிப்பு ஒன்று ராஜாராணிக் கதை

'அந்த வானத்து முழுமதி என் முகத்தைக் கண்டு வெட்கி மேகத் தில் மறைகிறது' என பத்மினி கூறுகிறுரோ—"தெய்வமே துணை"

தான்; கத்திச் சண்டைகள் எல்லாம் வருகிற படம் தான். அதிலே ஒரு வசனம் — "அந்த சிங்காரியின் வாழ் வைச் சித்தரித்துக் காட்டு கிறேம் சினிமாவைப் போல"— அடுக்குச் சொல்லில் வார்த் தை அழகாக அமைய வேண் டும் என்ற ஒரே ஆவலில், 'சினிமா' என்ற பதம் வந்து விட்டது அந்தக் காலக் கதையில்!

மாயாபஜார் மகாபாரதக் கதை. அது நடந்து யுகங்கள் கூட ஆகி யிருக்கலாம். ஹரிச்சந்திரன், நளன் முதலிய அரசர்களின் பெயர்கள் அதில் அடிபட்டன. இவர்கள் எல் லாம் கலியுக ஆரம்பத்தில் கலிபுருட ஞல் கஷ்டப்படுத்தப் பட்டவர்கள் எனப் பௌராணிகர்கள் கூறுவார் கள்! ஆகவே புரராணக் கதை நிகழ்ந் ததாகக் கருதப் படும் காலத்திற்கு ஒவ்வாத இவ்வசனத் தவறு ஜாக்கிர தையாக எழுதியிருந்தால் நேர்ந் திருக்காது.

புராண சம்பந்தப் பட்ட படம் தயாரிக்கும்போது சர்வ ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும் என்பதற்கு மற்ருெரு உதாரணம் **ஆரவல்லி.** மகாபாரத யுத்தம் முடிந்து பாண்ட வர்கள் அரசாளும் காலத்தில் கதை நிகழ்ந்ததாகக் காட்டப் படுகிறது. அப்படி யிருக்க பாரத யுத்தத்தில் மாண்டு போன அபிமன்யு உயிர் பெற்று வந்த விதம் எப்படி?

பிரபல வட இந்தியப் படாதிபதி திரு. சாந்தாராம் சமீபத்தில் தயாரி த்து வெளியிட்ட **தோ ஆன்கே(ன்) பாராஹாத்** யாவரும் நன்கு ரஸித்த நல்ல படம். அதிலேயே தவறு நேர்ந்து விட்டது! சந்தியா மழையிலே நனைந்து கொண்டு ஆட்டம் ஆடுகிருர். அவ்வளவு கொட்டும் மழையிலும் அவரது மேக் கப் சற்றேனும் கலையவில்லை? ஏன்? மழைத் துளிகள் கூட முகத்தில் காணேம்!

இம்மாதிரித் தவறுகள் வேண்டு மென்றே விடப்படுவதாக நான் குற் றம் சாட்டவில்லை. கவனக் குறை வும், அளவுக்கு மீறிய கால தாமத் தால் மறந்து போவதும் தான் அதற்குக் காரணங்கள்.

சாரு...

"கௌசிகன்"

"சாமி ஆண்டவனே இன்னிக்காவது தங்க நிலா வரப் பண்ண மாட்டியா?" என்று வேண்டிக் கொண்டாள் குழந்தை சாரு. அவளுக்கு ஐந்து வயதுதான். பட்டுப் போன்ற உடல். தோளின் இரு பக்கத்திலும் குட்டைப் பின்னல் தொங்கிக் கொண்டிருக்கும்.

சிவகாமி குழந்தை சாருவின் வேண்டுதலைக் கேட்டுச் சலிப்புடன், "சாரு, தங்க நிலாவும் கிடையாது வைர நிலாவும் கிடையாது. பைத்தியம் மாதிரி இப்படி இனிமே பேசினா எனக்குக் கெட்ட கோபம் வரும்" என்றாள்.

"பின்னே மாமா சொன்னாரே."

"மாமாவுக்கு ஏத்த மருமகதான் நீ... ம். தங்க நிலாவைப் பார்த்து உன்னை என்ன வேண்டிக் கொள்ளச் சொல்லி இருக்கார்?

"எனக்கு ஒரு அழகான பூனைக் குட்டி கொடுக்கும்படியா நான் தங்க நிலாவை வேண்டிக்கப் போறேன்."

"என்ன, பூனைக் குட்டியா? பேஷ் ... பேஷ் இந்த வீட்டிலே உன்னைக் கட்டி மேய்க்கிறது போதாதா? அதுக்கு இந்த வீடு லாயக்குப் படாது. அந்தக் கிழவர் உன்னை இங்கே இருக்கச் சம்மதித்திருப்பதே அதிசயம்" என்றாள் சிவகாமி.

கிழவர் என்று அவள் குறிப்பிட்டது வீட்டுக்காரரைத்தான். அவர் பெயர்தான் நல்ல சிவமே தவிர மனிதர் ரொம்பப் பொல்லாதவர். கண்டிப்பான பேர்வழி. நல்ல சிவத்திடம் நல்ல பெயர் எடுக்க முடியாதென்றோ என்னமோ அவர் மனைவி மாங்கல்யத்துடன் போய் வெகு நாளாகி விட்டது. நான்கு மாதத்துக்கு முன்புதான் மாடி போர்ஷனை வாடகைக்கு விட்டிருந்தார். குழந்தைகள் பிறக்காத ஏக்கத்தினால் தானோ என்னவோ நல்ல சிவத்திற்கு குழந்தைகளைக் கண்டால் பிடிக்காது. சதா சிடுசிடு என்றிருப்பார். நீலகண்டனை அவர் தன் வீட்டில் குடி இருக்க அனுமதித்ததே அவனுக்குக் குழந்தை குட்டிகள் இல்லை என்பதனால்தான்.

சாரு நீலகண்டனின் மகளுமல்ல. மருமாளு மல்ல. ஒரு காலத்தில் அவன் இதயத்துக்கு இனியவளாக இருந்த காமாட்சியின் மகள்தான் சாரு. காமாட்சி இப்போது நீலகண்டனின் சகோதரியாகி விட்ட கைம் பெண். அவனோ ஆசாபாசங்களினால் அலைக் கழிக்கப் படாத ஒரு ஆத்மா. சிவகாமியின் கரம் பிடித்ததும் அவன் தன் உள்ளத்திலே வேறு யாருக்கும் இடமளிக்க வில்லை. தன் சுகதுக்கங்களுக்கு உரியவள் சிவகாமிதான் என்று வாழ்ந்து வந்தான். விதி வசத்தால் காமாட்சி கைம் பெண்ணானதுடன் வறுமையில் வாடி வந்தாள். நீலகண்டன், குழந்தை சாருவைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டான்.

கணவனின் களங்கம் இல்லாத கருணை உள்ளத்தை சிவகாமி

புரிந்து கொள்ள வில்லே. காமாட்சியிடம் அவன் காட்டிய அக்கறைக்கு இந்தப் பெண்ணுள்ளம் செய்து கொண்ட வியாக்யானம், "அவர் உள்ளத்திலிருந்து பழைய காதல் நினைவுகள் இன்னும் பட்டுப் போக வில்லே" என்பது தான். அந்த எண்ணமே சூது வாது அறியாத சாருவிடம் அவளே அலட்சியமாக நடந்து கொள்ளும்படி செய்தது.

குணக் குன்ருன நீலகண்டன் சாருவிடம் தன் உயிரையே வைத்திருந்தான். அந்த அன்பு அவள் காமாட்சியின் பெண் என்பதனுலல்ல. சாருவின் அழகும் புத்தி சாலித் தனமும் மழலைப் பேச்சும் மனதை மயக்கும் பார்வையும் தான் அவனேக் கவர்ந்தன.

நீலகண்ட ஆபீசிலிருந்து வரும் போது 'சாரு, சாரு' என்று குரல் கொடுத்துக் கொண்டே தான் மாடிப் படிகளில் ஏறுவான். குழந்தை சாருவும் ஓடோடி வந்து தன் பிஞ்சு விரல்களால் அவன் கையைப் பற்றிக் கொண்டு உள்ளே அழைத்து வருவாள். அன்றும் அப்படித்தான்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு சாரு தூங்கியதும் எங்கோவெளியே கிளம்பினுன் நீலகண்டன். ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பி வந்த அவன் கையில் ஒரு கூடையும் மஞ்சள் பேப்பர் சுருளொன்றும் இருந்தன. சிவகாமி கணவனேக் கண்டதும். "சாப்பிட்டு விட்டு எங்கே போனீர்கள்? இதென்ன கையிலே மஞ்சள் பேப்பர், ஒரு கூடை?" என்று கேட்டாள்.

'இதுவா, இதுதான் தங்க நிலா, இந்தத் தங்க நிலா கொடுக்கப் போகும் வரம் இந்தக் கூடைக் குள்ளே இருக்கு புரிஞ்சுதா?" என்ருன் நீலகண்டன்.

"புரிஞ்சுது ... புரிஞ்சுது ... சாருக்கு தங்க நிலா வர வழைக்கப் போறேளா?" என்று கேட்டாள்.

"ஆமாம். இன்னிக்குப்பௌர்ணமி பாரு, இந்த மஞ்சள் கடுதாசியை ஜன்னல் கண்ணுடியிலே ஒட்டிவிட்டு பாதி ராத்திரி குழந்தையை எழுப்பிக் காட்டப் போறேன். அறை இருட்டாய் இருக்கும். இந்த மஞ்சக் கடுதாசி வெள்ளி நிலாவைத் தங்க நிலா வாக்கி விடும். அந்தக் குழந்தை ஆசை பாரு சிவகாமி."

சிவகாமிக்கு ஆத்திரமாக வந்தது. "அவ பூனேக்குட்டி வேண்டு மென்று வேண்டிக் கொள்ளப் போகிருளாம். அது தெரியுமா உங்களுக்கு?"

"வேண்டிக் கொள்ளட்டுமே. ஒரு பூனேக்குட்டியும் சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தக் கூடைக்குள்ளே அதுதான் இருக்கு காலேயில் சாரு கண்விழித்துப் பார்க்கும் போது அவள் காலடியிலே பூனேக் குட்டி தயாராக இருக்கும்."

"வீட்டுக்காரக் கிழவர் பூனே வளர்க்கச் சம்மதிக்க மாட்டார் என்பது தெரியுமல்லவா உங்களுக்கு?"

"அவருக்கு நாம் பூனே வளர்ப்பது தெரிவானேன்? பூனேயை வெளியே விட்டால்தானே?"

அதற்கு மேல் வாதாட அவளுக்குத் தெரிய வில்லே. துக்கம் தொண்டையை அடைத்தது.

"அந்தக் குழந்தையிடம் காட்டும் அக்கறை கூட எங்கிட்ட இல்லேயே உங்களுக்கு" என்று கூறி கதவைப் படீரென்று சாத்திக் கொண்டு போனுள்.

தூங்கும் குழந்தையின் அருகில் போய் அவளேயே பார்த்துக் கொண்டு ஒருநிமிஷநேரம் நின்ருன் நீலகண்டன். பிறகு 'சாரு... சாரு... எழுந்திரம்மா ... தங்க நிலா அடிக்கிறது பாரு" என்று எழுப்பினுன்.

குழந்தை சட்சென்று விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தது. "என்ன மாமா தங்க நிலாவா? ஆ ஆமா மாமா, எவ்வளவு அழகாக்

இருக்கு ... என் ஆசையும் நிறைவேறுமா மாமா ?"

"நிறைவேறும்டா கண்ணு. நீ தங்க நிலாவைப் பார்த்துக் கொண்டே தூங்கிவிடு. காலம்பற நீ விரும்பிய பொருள் உன் கண் முன்னாலே வந்து நிற்கும் பாரேன்!''

"சாமி ஆண்டவனே, எனக்கு ஒரு அழகான பூனைக்குட்டியை அனுப்பி வை..." சாருவின் வேண்டுகோள் உருக்கமாக இருந்தது. நீலகண்டன் குழந்தை சாருவை

வாரி அணைத்து முத்தம் கொடுத்து படுக்கையில் விட்டான்

காலையில் சாரு கண் விழித்ததும் தன் காலடியில் மூட்டைபோலச் சுருண்டு படுத்திருக்கும் பூனைக் குட்டியைக் கண்டதும் அந்தக் குழந்தையுள்ளம் குதூகலத்தால் நிறம்பியது.

''மாமா...மாமா.. நான் வேண்டிக் கொண்டது கிடைச்சுடுத்து மாமா. இதோ பாரு எவ்வளவு அழகான பூனைக்குட்டி?'' என்று உள்ளே ஓடி வந்தாள். ஆனால் அவள் ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்ளும் நீலகண்டன் வீட்டில் இல்லை. அதிகாலையிலேயே எழுந்திருந்து ஆபீஸுக்குப் போய்விட்டான்.

''என்னடி கூச்சல்? உன் அருமை மாமா இங்கே இல்லை'' என்று எரிந்து விழுந்தாள் சிவகாமி.

ஆனால் குழந்தை அவள் கோபத்தைப் பொருட்படுத்தவில்லை. ''இதோ பாத்தியா மாமி'' பூனைக் குட்டி. இதுக்கு என்ன பேரு வைக்கப் போரேன் தெரியுமா?

"லக்ஷ்மீன்னு கூப்பிட்டா நன்னா இருக்காது? மாமி இதைத் தொட்டுப் பாரேன் பட்டுப் போல எவ்வளவு ஜோராக இருக்கு...''

சாருவின் பேச்சுக்களை ரசிக்கும் மனநிலை சிவகாமிக்கு இல்லை. ''உங்க மாமா வந்துடுவார். அவர் கிட்ட உன் சந்தோஷத்தையும் சந்தேகங்களையும்

சொல்லு. ஆனந்தப்பட்டுப் போவார். எனக்கு வேலை இருக்கு."

சிவகாமியின் வெறுப்பை சாரு புரிந்து கொள்ள வில்லை. ஆனால் அந்தப் பூனைக்குட்டி புரிந்து கொண்டு தன் குரலை எழுப்பிற்று. "உனக்குப் பசிக்கிறதா லக்ஷ்மி? பால் வேணுமா? என்று அதனுடன் கொஞ்சியபடி நீலகண்டனின் அறைக்குள் போனாள் சாரு.

கதவு பலமாகத் தட்டப்பட்டது. உள்ளே கைக் காரியமாக இருந்த சிவகாமி வந்து கதவைத் திறந்த போது அவள் திடுக்கிடும் படியாக அங்கே வீட்டுக்காரக் கிழவர் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் இருந்த வெறுப்பையும் கோபத்தை யும் கண்ட சிவகாமிக்குப் பகீர் என்றது. அவள் பயந்தபடியே நடந்து விட்டது.

சிவகாமியைக் கண்டதும் கிழவர், "இந்த பாருங்களம்மா. என் வீட்டில் நாய் பூனை இதை எல்லாம் வளர்க்க அனுமதிப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? குழந்தைகள் இல்லை என்பதனால் தான் இங்கு உங்களைக் குடி இருக்க அனுமதித்தேன். ஒரு மாதமாக ஒரு குழந்தையை வேறு கொண்டுவந்து வளர்த்து வருகிறீர்கள். இப்போது ஒரு பூனை ..." என்று படபடப்புடன் பேசினார்.

சிவகாமிக்கு எப்படிப் பேசுவது எதைப் பேசுவது என்று ஒன்றுமே புரியவில்லை. ஒரு தடவை உள்ளே அவள் பார்வை சென்றது. சாரு பூனைக்குட்டியை மார்புடன் அழுத்தி அணைத்துக் கொண்டு சுவரோடு சுவராக ஒண்டியபடி நிற்பதைக் கண்டாள். குழந்தையின் முகத்தில் பீதி அப்பிக் கிடந்தது. சாருவிடம் அவளுக்கு அனுதாபம் இல்லாவிட்டாலும் நடுங்கிப்போய் நிற்கும் குழந்தையைக் கண்ட பெண்ணுள்ளத்தில் இரக்கம் கசிந்தது. கதவைச் சாத்தி விட்டு இரண்டு படிகள் கீழே இரங்கி வந்து நின்று கொண்டு கிழவரை சமாதானப் படுத்தினாள். எவ்வளவு சொல்லியும் கிழவரின் பிடிவாதம் தளர வில்லை.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. நாளைக் காலையிலே அந்தப் பூனை என் கட்டடத்துக்குள் இருக்கக் கூடாது". என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் இறங்கிச் சென்றார்.

சலிப்புடன் சிவகாமி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த போது 'மியாவ், மியாவ்' என்று விடாமல் கத்தியது பூனை.

ஆரம்பத்திலிருந்தே அதை வெறுப்பவளான சிவகாமி இந்தச் சமயத்தில் அது கத்துவதைக் கண்டதும் ஆத்திரத்துடன் "உன் குரலைக் காட்டாதே சனியனே. உன்னை உள்ளே வைத்து ஒளிச்சு கட்டிக் காக்க முடியுமோ?" என்று எரிந்து விழுந்தாள்.

கிழவரின் வார்த்தைகளைக் கேட்டு கலங்கிப் போயிருந்த குழந்தை சாருவின் கண்களில் சிவகாமியின் சுடு சொற்கள் கண்ணீரை வரவழைத்து விட்டன. வாய் பேசாமல் கண்ணீர் வழியப் பூனை குட்டியைத் தூக்கி மார்புடன் அணைத்துக் கொள்ளும் சாருவைக் கண்ட சிவகாமிக்குச் சுருக் கென்றது. இருந்தாலும் வெளிக்கு, "யாரோ அடிச்ச மாதிரி ஏண்டி இப்படி அழறே? ... ம் பூனை கொடுத்த நிலாவை ஒரு புதுவீடும் கட்டித் தரச் சொல்லி வேண்டிக்கோ ... போ ... உன் அருமை மாமா வந்ததும் சொல்லு" என்று கூறி உள்ளே போய் விட்டாள்.

கல கலப்பாக இருந்த அந்த வீடு சலனமற்று விட்டது. சாரு ஒரு மூலையில் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள். சிவகாமிக்கு வீட்டில் ஏற்பட்ட அந்தத் திடீர் மாற்றம் என்னவோ போல இருந்தது. சிவகாமி குழந்தையை லட்சியம் செய்யா விட்டாலும் சாரு

வி. கே. ராமசாமி கே. சாரங்கபாணியை அருகே இழுப்பது பீடி பற்ற வைக்கவா? அல்லது வேறு யாருக்கேனும் வத்தி வைக்கவா என்பது தெரியவேண்டும்! —"அல்லி பெற்ற பிள்ளை" யில்.

நிமிஷத்துக்குப் பத்து தடவை 'மாமி அது என்ன, மாமி இது எப்படி' என்று ஏதாவது கேட்டுக்கொண்டே இருப்பாள். அதற்காக அலுத்துக் கொள்ளும் சிவகாமியின் உள்ளம் இன்று 'சாரு வாய் திறக்க மாட்டாளா, ஏதாவது கேட்க மாட்டாளா' என்று தவிக்க ஆரம்பித்தது.

'தன்னுடைய உதாசீனமான பேச்சுதான் குழந்தையின் உற்சாகத்தை உறிஞ்சி விட்டதோ' என்று குறு குறுத்தது. சிவகாமியின் உள்ளத்தை ஏதோ ஒரு இனம் தெரியாத வேதனை கவ்விக் கொண்டது. சாருவைப் பற்றியே கவலைப்படாத தன் உள்ளத்திலே அவள் நினைவே நிறைந்திருப்பதன் விந்தை புரியாமல் திகைத்தாள்.

எதிலுமே சிரத்தை இல்லாமல் உட்கார்ந்திருந்தாள் சாரு. சிவகாமிக்கு என்றுமில்லாத ஒரு ஆசை உள்ளத்திலே பீறிட்டுக் கொண்டு கிளம்பியது. குழந்தையை வாரி அணைத்து மடிமீது வைத்துக் கொண்டு ஆறுதல் சொல்லிச் சிரிக்கவைக்க வேண்டும் என்று நினைத்தாள். ஒரு நாள் கூட அவள் அந்தக் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டது இல்லை. நீலகண்டனின் மடியில்தான் அவள் குதித்துக் கும்மாளமடிப்பாள்.

எங்கே தன்னிடம் வர மாட்டேன் என்று சொல்லி விடுவாளோ என்று தயக்கத்துடன் கைகளை நீட்டி அழைத்தாள் குழந்தை சாருவை. சாரு ஒரு நிமிஷம் சிவகாமியின் முகத்தைப் பார்த்தாள். அந்த ஒரு நிமிஷத்தில் சிவகாமியின் உள்ளம் பட்டபாடு. "அப்பப்பா! குழந்தையின் அன்பைப் பெருவதிலே தான் எத்தனை கஷ்டமிருக்கிறது?" என்று நினைத்தாள்.

சாரு எழுந்து வந்து சிவகாமியின் மடியிலே உட்கார்ந்தாள். சிவகாமியின் உடல் புல்லரித்தது. இது வரை அனுபவித்து அறியாத இன்பத்திலே மிதக்க ஆரம்பித்தாள். குழந்தையின் பட்டு உடலைத் தொட்டதும் அவள் கை சுட்டது. மெதுவாகக் குழந்தையின் தலையைக் கோதினாள்.

"எங்க அம்மா கூட இப்படித்தான் என் தலையைத் தடவிக் கொடுத்து உச்சந்தலையிலே முத்தமிடுவா" என்றாள் சாரு அடைபட்ட குரலில்.

சிவகாமிக்கு என்ன தோன்றிற்றோ. குழந்தையை இறுகத் தழுவி முத்தமிட்டு "இப்படியா கண்ணு" என்றாள். அவள் குரலில் நடுக்கம் கலந்திருந்தது.

"ஆமா இப்படியேதான்" என்ற சாரு திரும்பி சிவகாமியின் முகத்தைப் பார்த்தாள். மாமியின் கண்களில் நீர் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டதும் "நீ ஏன் மாமி அழறே? என் லக்ஷ்மியை வீட்டை விட்டுத் துரத்தணு மேன்னு தானே?" என்று கேட்டாள்

"ஆமாண்டாம்மா!" என்றாள் சிவகாமி. "எங்க அம்மாகூட இப்படித்தான் மாமி. நீ என் அம்மாவைப் போலவே இருக்கே."

"என்னை உன் அம்மாவாகவே நினைத்துக் கொள்ளேன் சாரு" என்றாள் சிவகாமி. அந்த வார்த்தைகளை அவள் ஒப்புக்குச் சொல்லவில்லை. அந்த நிமிஷத்திலே அவள் முன் காமாட்சியும் வந்து நிற்கவில்லை, உள்ளத்திலே படிந்திருந்த பொருமைப் பாசி விலகிவிழுந்தது. "சாருவை நமக்குப் பிறந்த குழந்தையாக நினைக்கக் கூடாதா சிவகாமி?" என்ற கணவனின் வார்த்தைகள் அவள் காதுகளில் ஒலித்தன.

அந்த நிமிஷத்திலிருந்து சாருவைத் தன் குழந்தையாகவே நினைக்கச் செய்யும் அளவுக்கு அவள் உள்ளத்திலே தாய்ப் பாசம் தலை தூக்கி நின்றது. குழந்தையைத் தன் மடியை விட்டு இறக்காமல் அப்படியே எத்தனை நேரம் இருந்தாளோ தெரியாது.

அன்று மாலை, தன் குரலைக்கேட்டு ஓடிவரும் குழந்தையைக் காணாதது நீலகண்டனுக்குக் கவலையைக் கொடுத்தது. பல தடவை கூப்பிட்ட பிறகு உள்ளே இருந்து மெள்ள வந்தாள் சாரு.

"சாரு என்னம்மா? இதோ பாரு, இந்தா உனக்குப் பிடித்த பால் கோவா, சாக்லேட்... ...என்னடா கண்ணு உனக்கு?" என்றான் தவிப்புடன்.

"ஒன்றுமில்லை மாமா..." என்றாள் சாரு சுரத்தில்லாமல்.

"பின்னே நீ ஏன் சந்தோஷமா இல்லே?" என்றான் காரணம் புரியாக் கலக்கத்துடன் "எனக்கு இப்ப ஒண்ணும் புடிக்கலை மாமா... நான் அப்புறமா வாங்கிக் கொள்ளுகிறேன். இந்தா, நீயே வச்சுக்கோ..." என்று பேசினாள்சாரு, இடிந்த உள்ளத்துடன்.

குழந்தையின் பேச்சும் சிவகாமியின் பேச்சற்ற நிலையும் நீலகண்டனுக்கு ஆத்திரத்தைத் தான் உண்டாக்கின. "சிவகாமி, என்ன விஷயம்? குழந்தை சோர்ந்தாப் போல இருக்காளே?" என்றான் படபடப்புடன்.

"இங்கே வாங்கோ சொல்றேன்" என்று தனியே அழைத்துப் போய் விஷயத்தைச் சொன்னாள்.

"இவ்வளவு தானே?" என்று வேகமாக வெளியே வந்த நீலகண்டன் சாருவின் அருகில் போய், "சாரு நீ கவலைப் படாதேம்மா. நான் இதோ அந்தத் தாத்தா கிட்டே லக்ஷ்மியை வளக்க அனுமதி வாங்கிக் கொண்டு வரேன்" என்று சொல்லிக் கொண்டே வேகமாகக் கீழே இறங்கிப் போனான்.

சிறிது நேரத்தில் திரும்பிய அவன் முகத்தில் போலிச் சிரிப்புப் பூசி இருந்தது. "ம்.. தாத்தாவைக் காணோம் சாரு. நான் நாளைக்கு அவரைப் பார்த்து ஏற்பாடு பண்ணிடறேன். எங்கே நீ ஓடியா. இந்த சாக்லெட்டை வாங்கிக்கோ... சிரி பார்க்கலாம்" என்று குஷிப்படுத்தி சமாதானப் படுத்தினான்.

இரவு குழந்தை தூங்கிய பிறகு தம்பதிகள் பேச ஆரம்பித்தார்கள்.

"அந்தக் கிழவன் என்ன மனுஷன் தானா?"

"கிழவன் வீட்டிலே இல்லை என்று நீங்கள் சொன்னது பொய் தானே. எனக்குத் தெரியும். உங்க முகத்திலே தான் தோல்வி எழுதி ஒட்டி இருந்ததே!"

"பின்ன, என்ன பண்றது? அந்த முரடனோ ஒரே பிடிவாதமா 'முடியாது'ன்னுட்டான். அது தெரிஞ்சா குழந்தை இன்னும ஏமாந்து போயிடுவா. அதுக்காகத் தான் பொய் சொன்னேன்.

"குழந்தை தினம் எத்தனை சிரிப்பும் கொம்மாளமுமா இருப்பா, இன்

தான் பெற்ற பிள்ளை எப்படி இருக்குமோ என்ற கவலையில் மூழ்கி யிருக்கும் பண்டரி பாய்க்கு சஹஸ்ரநாமம் ஆறுதல் கூறுகிறாரோ?—"அல்லி பெற்ற பிள்ளையில்"

ஆனால் நீலகண்டனுக்கு காலை ஆறுமணிக்கு ஆபீஸ். அவள் எழுந்திருக்கு முன்பே அவன் எழுந்து போய் விட்டான். சாருவின் குரலுக்குச் சிவகாமி ஓடோடி வந்தாள்.

"மாமா ஆபீஸுக்குப் போயிட்டாடி கண்ணு. நீ பல் தேய்த்து காப்பி குடிக்க ஓடியா" என்றாள்.

"மாமி..." என ஆவலோடு அவள் முகத்தைப் பார்த்தாள் சாரு. "இன்னிக்குத் தாத்தா லக்ஷ்மியை அடிக்க வருவாரா மாமி?" குழந்தை இன்னும் அந்த விஷயத்தை மறக்க வில்லை என்பதை அறிந்த சிவகாமிக்குக் கவலையாக இருந்தது.

"அதெல்லாம் வரமாட்டார். நீ காப்பி குடிக்க ஓடியா. பல் தேய்க்கப் போம்மா, சமத்தோன்னே."

"எனக்குக் காபி வேண்டாம். நான் ஏன்தான் தங்க நிலாவை வேண்டிக் கொண்டேனே" என்றாள் சாரு பெரிய மனுஷியைப் போல. குழந்தையின் மனதிலுள்ள ஏக்கத்தை குறைக்க, நேற்று தன் கணவன் செய்தது போல ஏதாவது பொய் சொல்லி நடித்துத்தான் ஆக வேண்டும் என்று தீர்மானித்தாள் சிவகாமி.

"சாரு இதோ பாரு. நான் கீழே தாத்தாவிடம் போய் லக்ஷ்மியை நீ வச்சிண்டு விளையாட உத்தரவு வாங்கிக் கொண்டு வந்துடறேன் சரிதானே? இதோ பேறேன். நீ சீக்கிரம் பல்லைத் தேய்" என்று வெகு வேகமாகக் கிளம்பிக் கதவைச் சாத்திக் கொண்டு மாடிப் படிகளில் இறங்கிப் பாதி வழியில் நின்று கொண்டாள். சிறிது நேரம் தவிக்கும் உள்ளத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு அங்கேயே நின்று விட்டு முகத்தில் சந்தோஷத்தைப்

னிக்கு அவ பேசாம இருக்கிறது இது வீடாகவே இல்லை. நெஜமாச் சொல்றேன் இன்னிக்குத் தான் அந்தக் குழந்தையோட அருமை எனக்குத் தெரிந்தது."

"சிவகாமி, சாரு விஷயங்கூட அதிசயமில்லே, நீ அவள் விஷயத்திலே இப்படி மாறினது இருக்கே அதுதான் ஒண்டர்புல்."

"போங்கோன்னே. அவளை என்னோடு நெருங்கிப் பழக விட்டேளா நீங்க? சதா நீங்களே அவளைச் சுத்திச் சுத்தி வந்தேள். குழந்தை இன்னிக்கு அதுவா எங்கிட்ட வந்து என் மடியிலே ஏறி உட்கார்ந்து கொண்டு என்னை 'அம்மா' என்று கூப்பிட்டது"

நீலகண்டன் தன் மனைவியிடம் ஏற்பட்டுள்ள மாறுதலை நினைத்து வியந்தபடியே கண்ணயர்ந்தான்.

காலையில் குழந்தை 'மாமா மாமா' என்று நீலகண்டனைக் கூப்பிட்டுக் கொண்டேதான் எழுந்தாள்.

பலவந்தமாக ஏற்றிக் கொண்டே, "சாரு ... சாரு ..." என்று உரக்கக் கூப்பிட்டபடி மேலே வந்தாள். "நீ லக்ஷ்மியை வச்சுக்கலாம்னு தாத்தா சொல்லி விட்டார்" என்று பெரிய தொரு பொய்யைச் சொன்னாள். அது அவள் எதிர்பார்த்ததைப் போலவே பலனையும் கொடுத்தது.

"என்ன மாமி, நிஜமாவா? என் லக்ஷ்மியோட நான் எப்பவும் போலவே விளையாடலாமா?" மகிழ்ச்சி மலரக் கேட்டாள் சாரு.

"ஆமாண்டா"

"ஐயா, ஐயா! தாத்தா ரொம்ப நல்லவர் இல்லியா மாமி?" என்று பழைய சாருவாகப் பேசினாள் குழந்தை. சிவகாமியின் உள்ளம் குழந்தையின் மகிழ்ச்சியால் ஆனந்தம் கொண்டது.

"ஆமாமா, ரொம்ப நல்லவர் தான். இந்தா சாக்லெட் சாரு. நீ லக்ஷ்மியோட இங்கேயே விளையாடிக் கொண்டு இரு, கூச்சல் போடக் கூடாது ... என்ன?"

சிறிது நேரத்திற்குப் பின் சாரு "மாமி" என்று குரல் கொடுத்தாள்.

"ஏண்டா கண்ணு?" சமையலறையில் இருந்தபடி பதில் கொடுத்தாள் சிவகாமி.

"நான் தாத்தாவுக்கு சாக்லேட் கொடுத்து விட்டு வரப்போறேன். அவர் என் லக்ஷ்மியை நான் வைத்துக் கொண்டு விளையாடலாம்னு சொன்னாரோன்னோ, அதுக்காக."

சிவகாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஐயையோ! சாரு. இங்கே வா" என்று அவள் உள்ளே இருந்து ஓடி வருவதற்குள். சாரு மாடிப் படிகளில் குதித்தோடி இறங்கிப் போய் விட்டாள். சிவகாமிக்குத் தலை சுற்றியது 'அடி அசட்டுப் பெண்ணே. இப்போ நான் என்ன செய்வேன். நான் சொன்னது பொய் என்று தெரிந்தால் அப்படியே இடிஞ்சு போயிடுவாளே?' என்று தவித்துப் போனாள். சாரு

சிறிது நேரத்தில் மாடிப்படி ஏறி ஓடோடி வந்தாள்.

'சாரு, தாத்தா என்னம்மா சொன்னர்... நீ என்ன கேட்டே" என்ருள் சிவகாமி.

"ஒண்ணுமே பேசல்லே. 'நீங்க ரொம்ப நல்ல தாத்தா, என் லக்ஷ்மியை நானே வச்சுக்கலாம்னு சொல்லிட்டயோன்னே? இந்தா உனக்கு சாக்லேட்'ன்னு கொடுத்தேன். தாத்தா வாங்கிக்கல்லே, நானும் விடல்லே."

"என்ன செஞ்சே?"

"தாத்தா மடியிலே வச்சுட்டு வந்துட்டேன்."

சிவகாமிக்குப் பயம் மனதைப் பிசைந்தெடுத்தது. 'என்ன நடக்கப் போறதோ பகவானே' என்று கவலைப்பட ஆரம்பித்தாள். கிழவரிடமிருந்து தப்பிக்க அன்று பகல் இங்கே இருக்கக் கூடாது என்று தீர்மானித்தாள். தெரிந்தவர்கள் யார் வீட்டுக்காவது போய் விட்டு மாலை கணவன் வரும் சமயத்தில் தான் வீடு திரும்ப வேண்டும் என்று தீர்மானித்தாள்.

மாலை ஐந்து மணிக்கு மேல் தான் சினேகிதி வீட்டிலிருந்து கிளம்பினாள் சிவகாமி. தைரியத்தை எல்லாம் சேர்த்துப் பிடித்துக் கொண்டு வீட்டு வாசற்படி ஏறினாள் சிவகாமி.

"உங்களோடு கொஞ்சம் பேசணும் ..." என்ருர் கிழவர்.

"எனக்காகவா காத்துக் கொண்டு நிக்கறேள். சாரு இந்தாம்மா, சாவி. கதவைத் திறந்து சாமானைக் கொண்டு போய் உள்ளே வைத்து விட்டு இரு நான் வரேன்" என்று நடக்கப் போகும் காட்சியிலிருந்து சாருவை விலக்க ஏற்பாடு செய்தாள்.

"பூனையை வெளியே விரட்டாதது மட்டுமல்லாமல் குழந்தை யிடம் எனக்கு சாக்கலட் கொடுத்தனுப்பினீர்களே, இது நல்லா இருக்காம்மா..."கிழவரின் குரலில் அவள் எதிர்பார்த்த கோப மில்லா விட்டாலும் கண்டிப்பு இருந்தது.

சிவகாமி பதில் சொல்லுவதற்குள், "மாமி...மாமி... இங்கே வாயேன். கூடத்திலே ஒரு எலிக் குஞ்சு, என் லக்ஷ்மி அதை விரட்டறதைப் பாரேன் ..." மாடியிலிருந்து சாரு கத்தினாள்.

கிழவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்னது எலியா? "நான்சென்ஸ்". என் வீட்டில் எலி யாவது? இருக்கவே இருக்காது" என்று சொல்லி மாடி ஏறினர்

"அதோ பாரு அந்த பீரோ பின்னலே ஒண்டிண்டு இருக்கு எலி. என் லக்ஷ்மிக்குப் பயந்து கொண்டு"

பின்னல் வந்த சிவகாமி "ஆமா, ஐயையோ! எத்தனை பெரிசு? ச்சு... ச்சு!" என்று அதை மிகை படுத்தி விரட்டினாள். கிழவருக்கு எலியைக் கண்டால் பிடிக்காது என்று அவளுக்குத் தெரியும்.

"மாமி...மாமி ஓடறது...லக்ஷ்மி ...லக்ஷ்மி விடாதே ... பிடி ... பிடி" என்று குதித்தாள் சாரு.

"சாரு ஓடாதேம்மா. லக்ஷ்மியால் அதைப் பிடிக்க முடியாது. லக்ஷ்மி சின்னக்குட்டி பாரு. அதுக்கு எலியைப் பத்தி ஒண்ணும் தெரியாதம்மா..."

"ஓ தெரியுமே. நான் அவளுக்கு எல்லாம் பழக்கிவச்சிருக்கேன் மாமி. என் ரப்பர் பொம்மை எலியை பாஞ்சு பிடிச்சு கௌவி விளையாடுமே. நீ பார்த்ததில்லே? என் லக்ஷ்மி எலியைத் துரத்திக் கொண்டு எங்கேயோ ஓடுத்தே...லக்ஷ்மி?" என்று சாரு அததைப் பின் தொடர்ந்து ஓடினாள்.

சுண்டிய முகத்துடன் நிற்கும் கிழவரைப் பார்த்துச் சிவகாமி இது தான் சமய மென்று, "எலிகள் உள்ள வீடு எனக்குக் கட்டோடு பிடிக்காது என்ருள்.

சிறு குழந்தையின் ஆர்வமான பேச்சையோ அன்பான ஸ்பரிசத்

தையோ இது வரை அனுபவித்து அரியாத கிழவருக்குக் காலையில் சாருவின் பேச்சும். ஸ்பரிசமும் புதிய அனுபவமாக இருந்தன. சாருவின் கபடமற்ற பேச்சை, களங்க மற்ற சிரிப்பை நினைக்க நினைக்கக் காலையிலிருந்து அவர் நெஞ்சை என்னவோ செய்து கொண்டிருந்தது. இப்போது அவரது விருப்புக்குத் தலை குனிவாக வீட்டில் எலி நடமாட்டமும் இருப்பதை சிவகாமி மிகைப்படுத்திக் காட்டவே கிழவருக்குப் பேசவே வாய் இல்லை.

"வாஸ்த வந்தாம்மா. எனக்கும் எலிகளைக் கண்டாலே பிடிக்காது. இத்தனை வருஷமா இந்த வீட்டிலே நான் ஒரு எலியைப் பார்த்தது இல்லையே" என்றார் தொங்கிய குரலில்.

சாரு குதித்துக் கொண்டு ஓடி வந்தாள். இதோ பாரு மாமி என் லக்ஷ்மி எலியைக் கௌவிக் கொண்டு வரது பார். ஐயா, ஐயா!"

குழந்தை சாருவின் கொஞ்சு மொழியைக் கேட்கக் கேட்க கிழவரின் உள்ளத்திலே ஒரு மலர்ச்சி உண்டாயிற்று. சாருவின் மீது பதித்த பார்வையை எடுக்காமலே "குழந்தே, உன் பூனையைக் கொஞ்ச நாள் எங்கிட்டே கொடுத்து வைக்கிற யாம்மா?" என்றார்.

"உஹூம் நான் மாட்டேன். உனக்கு என் லக்ஷ்மியை வளக்கத் தெரியாது" என்று சொன்னவள் ஏதோ நினைத்துக் கொண்டவளாக "எ.—வந்து ... வந்து ... தாத்தா உனக்கு லக்ஷ்மி வேணுங்கற போது சொல்லு நானே கொண்டு வந்து தறேன்." என்றாள்.

"அதுவும் சரிதான். முதலில் ஒரு எலிப்பொறி வாங்கியாகணும்" என்று சமாதான மாகப் பேசினார் கிழவர். கிழவரின் பார்வையில் குரலில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கண்ட சிவகாமிக்கு ஒரே புதிராக இருந்தது.

"பூனை வீட்டிலே நடமாடினால் எலி ஓடிப் போயிடும் தாத்தா" என்று சமயம் பார்த்து பூனைக்கு நிரந்தர வாசஸ்தலம் தேடலானாள் சிவகாமி.

"தாத்தா நீ நேத்திக்கி என் லக்ஷ்மியை விரட்டிடணும்னு கோவிச்சுக் கொண்டயே, லக்ஷ்மி இருந்ததனாலே தானே இங்கே எலி இருக்கிறது தெரிஞ்சுது" என்றாள் சாரு கபடம் இல்லாமல்.

இத்தனை வருஷங்களில் சிரிப்பைக் காணாத கிழவரின் முகத்திலே முறுவல் பூத்தது. "ஆமாண்டா குழந்தே! இதுவரை எலியே இந்த வீட்டில் கிடையாது என்று நினைத்திருந்தேன். உன் பூனை கெட்டிக்காரப் பூனை தான்" என்றார்.

கிழவருக்கு சாருவை வாரித் தூக்கிக் கொள்ள ஆசைதான். ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் தன் மன மாற்றத்தை வெளியிடும் துணிவு அவருக்கு வரவில்லை. ஆகவே, குழந்தை சாருவுக்கு பதில் பூனைக் குட்டியைத் தூக்கினார்.

"அப்படித் தூக்காதே தாத்தா. அதுக்கு வலிக்கும். ரெண்டு கையையும் சேர்த்துக் கூடைமாதிரி வச்சுக்கோ.

"லக்ஷ்மியும் உன்னைப் போலவே அழகா இருக்கு சாரு. இனிமே நீ கீழே வந்து லக்ஷ்மியோட என் வீட்டிற்குள்ளேயே விளையாடு...? லக்ஷ்மிக்கு நான் பால் தரேன் உனக்கும் பக்ஷணம் தருவேன். என்ன?" அதற்குமேல் அவரால் தன் உள்ளத் தவிப்பை அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. சாருவைத் தூக்கிக் கொண்டார்.

"குழந்தை என்ன செய்கிறாளோ என்ற கவலையுடன் களைத்துப் போய் காரியாலயத்திலிருந்து வந்த நீலகண்டன், கிழவரின் கான்கிரீட் மனதையும் கரைத்துவிட்ட சாருவையும் அவள் கிழவரோடு குழைவதைப் பார்த்தபடி திகைத்துப் போய் நிற்கும் தன்மனவியையும் பார்த்து ஸ்தம்பித்து நின்று விட்டான்.

கையிலிருக்கும் தஸ்தாவேஜுகளே சொல்லி விடுகின்றன இவர் 'சௌகார்' ஜானகிதான் என்பதை—"மாதா பிதா குரு தெய்வத்தில்."

பொதுஜனம் பேசுகிறார்



நம்ப முடியவில்லை

சென்ற மாத இறுதியில் ஒரு தினசரிப் பத்திரிகையில் 'சினிமாவுக்குப் போகாதே' என்று கணவன் தடுத்ததால் தற்கொலை என்று கொட்டை எழுத்தில் தலைப்புக் கொடுத்து ஒரு செய்தி வெளியாகியிருந்தது. நானும் ஒரு சினிமாப் பைத்தியம்தான். சினிமாவுக்குப் போக முடியவில்லை என்பதற்காக தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு ஒரு பெண்மணி போவாள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அவருடைய தற்கொலைக்கு வேறு பல்விதமான காரணங்களும் சேர்ந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கருத்து.

கமலா சிவராமன்,
குப்பு முத்து முதலி தெரு,
சென்னை-5

நிறுத்திக்கொள்ளுங்கள் !

தனக்கு பேச சந்தர்ப்பம் கிடைக்கும் இடங்களி லெல்லாம் "இந்திப் படம் பார்க்காதீர்கள்" என்று தங்கவேலு அடித்துப் பேசி வருகிறார். சிலரைப்போல் இல்லாமல், தங்கவேலு அரசியலில் தலையிடாமல் இருக்கிறாரே என்று நான் அவரிடம் பெரு மதிப்புக் கொண்டிருந்தேன். தங்கவேலுவை அவரது அபிமானி என்ற முறையில் இனிமேலாவது அப்படிப் பேசுவதை நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பே. சுந்தரம்,
ஸ்டேஷன் ரோடு,
திருச்சி டவுன்.

கேட்கிறேன்

'இந்திப் படங்களைப் பார்க்காதே' என்று கூட்டத்திற்குக் கூட்டம்பேசி வரும் தங்கவேலுவைக் கேட்கிறேன். இந்திப் படங்களைப் பார்க்காதே என்று சொல்லுவதை விட தென்னாட்டுப் படாதிபதிகளிடம் "படாதிபதிகளே! இந்தியத்தாய், தோ ஆன் கேன் பாராஹாத் போன்ற படங்களைத் தயாரியுங்கள்" என்று அவர் சொல்வாரானால் நன்றாயிருக்கும். அவர் அப்படிச் செய்வாரா என்று நான் கேட்கிறேன்.

பி. மணவாள நாயுடு.
பிள்ளையார் கோவில் வீதி,
சென்னை–18

நல்லதற்கு இல்லை

சமீபத்தில் நானும் என் நண்பர்கள் மூவரும் நல்ல இடத்து சம்மந்தம் படம் பார்த்தோம். நாங்கள் நான்கு பேர்களுமே ஆட்டோரிக்ஷா ஓட்டிகள். படத்தில் ஆட்டோ ரிக்ஷாக்காரன் ஒருவன் தவறாக நடந்து கொள்ளும் காட்சியைப் பார்த்த போது எங்கள் ரத்தம் கொதித்தது. எங்களை இழிவுபடுத்தும் அக்காட்சியைப் படத்தில் புகுத்த பட சம்பந்தப்பட்டவர்களுக்கு மனம் எப்படி இடம் கொடுத்தது. ஆட்டோரிக்ஷா ஓட்டிகள் என்றால் எவ்வளவு மட்டமாக வேண்டுமானாலும் சித்தரித்து விடலாம் என்ற எண்ணமா?

கபாலி,
திருவல்லிக்கேணி ஹைரோடு,
சென்னை-5

தவறான அபிப்பிராயம்

ஏற்கெனவே ஆட்டோ ரிக்ஷாக்காரர்களுக்கு நாளுக்கு நாள் வருமானம் மிகவும் குறைந்து வருகிறது. நல்ல இடத்து சம்பந்தம் படம்-அதில் வரும் ஆட்டோ ரிக்ஷாக்காரன் சம்பந்தப்பட்ட காட்சி–எங்கள்

பிழைப்பில் மேலும் ஒரு பிடி மணலை அள்ளிப் போடுவதாக இருக்கிறது.

ப. தங்கராசு,
சூளைமேடு ரோடு,
சென்னை-24

[மேற்படி காட்சியை ஆட்சேபித்து எமக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அக்காட்சியை படத்தில் சேர்த்திருப்பது வருந்த வேண்டிய ஒரு விஷயம்தான். அது ஒருபுறம் இருக்க, அக்காட்சியை அனுமதித்த 'சென்ஸார் போர்டை' நினைத்து வியக்க வேண்டி யிருக்கிறது. —ஆசிரியர்.

தலை குனிகிறேன்

உத்தம புத்திரன் படத்தின் சுவரொட்டிகள் செய்யப் பட்டிருக்கும் அலங்கோலத்தைப் பார்த்து வருந்துகிறேன். ஒரு குறிப்பிட்ட கட்சியில் பற்றுள்ள சிலர் செய்துள்ள சின்னத்தனமான செய்கையாகும் இது. அக்கட்சியில் பற்றுடையவன் நான். அந்தக் கட்சியின் மதிப்பையே இந்தச் செய்கை குறைப்பதாக இருப்பதுகண்டு நான் தலை குனிகிறேன்.

க. ப. செல்வ நாயகம்,
கச்சேரி வீதி,
சென்னை-4

"பதி பக்தி" படப்பிடிப்புக்கு வந்த எம். என். ராஜத்திற்கு மேக்கப்பை சரி பார்க்கிறர் ராமச்சந்திரன்.

வந்தனம்

'அஸ்திவாரத்தின் கூக்குரல்' என்ற உங்கள் உப தலையங்கம் பிரமாதம். பல ஸ்டுடியோ ஊழியர்களின் மனக் குமுறலை நீங்கள் எழுத்திலே தீட்டிவிட்டீர்கள். அனைவரின் சார்பாகவும் நன்றியையும் வந்தனத்தையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஒரு ஸ்டுடியோ ஊழியன்'
சென்னை-26.

சபாஷ், தங்கவேலு!

சென்ற மாதம் எங்கள் ஊரில் நடைபெற்ற "விமலா" நாடகத்தில் இடையில் ஹாஸ்ய நடிகர் தங்கவேலு பேசினார். "இந்திப் படங்களைப் பார்க்காதீர்கள்" என்று அவர் ரொம்பவும் காரமாகப் பேசினார். தங்கவேலுவைப் போலவே மற்ற நட்சத்திரங்களும் பேசுவார்களானால் அது அவர்கள் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் செய்யும் ஒரு மகத்தான சேவை ஆகும்.

டி. எம். கனகன்.
விஜயபுரம்.

ஒழிக 'காப்பிக் கலை'

பிறமொழிக் கதைகளை தழுவிப் படம் எடுப்பது, பார்த்துப் புளித்துப் போன பழைய கதைகளை மீண்டும் படம் பிடிப்பது, அலங்காரத் தலைப்புகள் கொடுத்து அலங்கோலமாகப் படம் தயாரிப்பது, ஒருவர் தயாரித்த கதையின் உரிமையை இன்னொருவர் வாங்கி, அதை வேறு மொழியில் தயாரிப்பது, ஒரே கதையை, அதன் கருத்தை அங்குமிங்குமாக கொஞ்சம் மாற்றி அமைத்து பலர் படம் பிடிப்பது போன்ற நிலை இப்போது தென்னாட்டுத் திரை எலகிலே வேகமாக

எம். என். ராஜம், ராஜேந்திரன், பஞ்சு. ஒலிபதிவாளர் மாருதி ராவ் புடை சூழ டைரெக்டர் கிருஷ்ணன் உட்கார்ந்திருக்கிறார்—ஏவி. எம். 34-வது தயாரிப்பில்.

வளர்ந்து வருவது குறித்து வருந்துகிறேன். இந்த நிலையை நீடிக்க விட்டுவைப்பது தமிழ்நாட்டு திரைப்படத் தொழிலின் முன்னேற்றத்திற்கு ஒரு நல்ல அறுகுறி இல்லை என்பதே என் கருத்து. தமிழ் நாட்டிலே அப்படி என்ன கதைப் பஞ்சம் வந்துவிட்டது? நல்ல எழுத்தாளர்கள் இல்லையா? அன்றாடப் பிரச்னைகளை அழகுத் தமிழினால், அற்புதமாக அலசி ஆராயும் ஆயிரமாயிரம் எழுத்தாளர்கள் உண்டு தமிழ் நாட்டிலே! ஆனால் படாதிபதிகளின் பார்வைதான் அவர்கள் பக்கம் திரும்புவதே யில்லை. இந்த அவல நிலை மாறவேண்டும். படாதிபதிகள் பழைய பாதையிலேயே சென்று கொண்டிருக்காமல், இந்தப் பிரச்னையில் கொஞ்சம் சிந்தனையைத் திருப்பவேண்டும். நல்ல எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களைப் படித்துப் பார்த்து, திரைக்கேற்ற கதைகளாகத் தேர்ந்து எடுத்து, அதனை திரைப்படமாக்கி மக்களுக்குத் தர வேண்டும். நிச்சயமாக கலையன்பர்களிடையே அவை நல்ல வரவேற்புப் பெறும். இதனால் தமிழ்நாட்டுப் புகழ் ஓங்கும். எழுத்தாளர்களின் வாழ்க்கை நிலை உயரும். இதை விட்டு விட்டு படாதிபதிகள் இப்படியே 'காப்பிக் கலையை' வளர விட்டுக் கொண்டு போனால், கொஞ்ச நாட்களிலேயே தமிழ் நாட்டு திரைப்படத் தொழில் மூட்டை முடிச்சுகளைக் கட்டவேண்டிய நிலை நிச்சயமாக ஏற்பட்டே தீரும். மேலும கலையன்பர்களையும், ஆங்காங்கே உள்ள சினிமா சங்கங்கள் மூலம் இக் 'காப்பிக்கலை' யைக் கண்டித்துத் தீர்மானங்கள் போட்டு. சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்

முமீசா. அமீது.
கொழும்பு-9

பம்பாய் ஆக முடியாது

பிப்ரவரி இதழில் நண்பர் ஒருவர் பம்பாய் ஆகுமா என்று கேட்டு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

ஆகாது. ஏனென்றால் பம்பாயில் பாதி தியேட்டர்களில் எல்லாம் உயர்ந்த டிக்கட்டுகள். அதனால் முன்னால் கொடுத்து விடுகிறார்கள். நம் ஊரில் எல்லா தியேட்டரிலும் குறைந்த கட்டணங்கள். பம்பாய் போலானால் இங்கு நம் பாமர ஜனங்கள் படம் வந்த அன்றே பார்க்கமுடியாது. படம்பார்க்க பணக்காரர்கள் தான் வருவார்கள்.

எஸ். இரகுநாதன்
அய்யனார்புரம், தமிழ் நாடு-23.

இப்படிப் பேசுவார்களா?

[நரசு ஸ்டுடியோவில் தயா ரான 'சிதாரன்–ஸே–ஆகே' என்ற அவர்களது இந்திப் படத்தில் நடிக்க வந்த இந்தி ஹாஸ்ய நடிகர் ஜானிவாக்கரை, கிண்டி குதிரைப் பந்தயக் கட்டடத்துக்கு அருகே அகஸ்மாத்தாகச் சந்திக்கிறார் தமிழ்ப் பட ஹாஸ்ய நடிகர் கே. ஏ. தங்கவேலு. காரில் உட்கார்ந்தபடியே தங்கவேலு பேசுகிறார்.]

தங்கவேலு: *ஜானியா? ஓ, வாங்கய்யா வாங்க!*

ஜானி: (தங்கவேலுவின் காருக்குள் தாவிக் குதித்து) *ஹலோ குட் மார்னிங் 'டங்' வேலு! வெரிகுட் மார்னிங்! நீங்க என்னை வாங்க வாங்கன்னுதான் வரவேற்கறீங்களா? 'போங்க அய்யா உங்க ஊருக்கு' என்று சொல்லுவீங்கன்னு நினைச்சேன்!*

தங்: *படம் முடிஞ்சா தானே பறந்து போகப் போறீங்க, நான் என்ன உங்களை விரட்டறது? அது சரி, அது என்ன என் பேரையே மாத்திப் பிட்டீங்க ...... டங் ...... வேலுவா.*

ஜானி: *நான் சரியாத்தான் சொன்னேன். நீங்க உங்க நாக்கை (டங்கை) வெச்சுத்தான் டமில் படங்கள்ளே ஹாஸ்யம் பண்ணிக் கிட்டிருக்கீங்க. அதனல் தான் அப்படிச் சொன்னேன்! ஏன், சரிதானே.*

தங்: *ஆன உங்க நாக்கு உங்களுக்கு உபயோகப் படறதில்லேன்னு எனக்குத் தெரியும்! உங்க நடிப்பெல்லாம் உடம்பை ஒன்பது விதமா வளைக்கிறது, முகத்திலே அசட்டுக் களையைக் குவிக்கிறது, தாவறது, குட்டிக்கரணம் போடறது, வரும்போதே தடுமாறிக் கிட்டு வர்றது இப்படித் தானே? அதே நினைச்சாக் கூட சிரிப்பு வருது!*

ஜானி: சிரிப்பு வருதா ? என் நடிப்பைக் கண்டு சிரிக்கக் கூட நீங்க தயாராயிட்டீங்களா, தாங்ஸ், 'டங்' வேலு, மெனி தாங்ஸ்!

தங்: அவசரப்படுறீங்களே ஜானி, டேப் தட்டி விடப்பட்ட கிண்டி குதிரைபோல. சிரிப்பு எனக்கு ஏன் வரது தெரியுங்களா? நீங்க செய்கிற கோணங்கிகளும் ஓர் ஹாஸ்யமான்னு நெனைச்சுத்தான்.

ஜானி: வாட்? வாட்? என்ன அப்படிச் சொல்லிட்டீங்க. நீங்க நடிச்ச டமில் படம் ஒண்ணை எஸ்டர்டே நைட் பார்த்து வெச்சேன். உங்களைப் படத்திலே காணோம்! ஆனா டைட்டில்லே மட்டும் உங்க பேரு இருக்கு!

தங்: ஐயோடி! அம்மாடி! என்னங்க ஜானி இப்படிச் சொல்றீங்க? ஆமா, நீங்க நல்ல நினைவோடதான் பேசறீங்களா?

ஜானி: என்மேலே ஏன் இந்த சந்தேகம் உங்களுக்கு? படம் பார்த்துட்டு வர்றவங்களெல்லாம் 'இந்தப் படத்திலே தங்கவேலு இருக்கிறதே தெரியில்லே' அப்படின்னு பேசிக்கிட்டு வந்ததைக் கூட நான் கேட்டேனுங்க.

தங்: அது என்ன படம் ஜானி?

ஜானி: ம்... ம்...காஸினோவில்...

தங்: அப்படீங்களா? நீங்க இருக்கிற படம் ஒண்ணை நானும் பார்த்தேனுங்க. அதிலே உங்களை ஒரு திராசிலே வெச்சு ஒருத்தரு நிறுக்கிறாரு. உங்க நடிப்பை எடை போட்டிருப்பார் போல இருக்குன்னு நினைச்சேன்.

ஜானி: 'எல்லோருக்கும் தெரிந்தது' தானுங்க!

தங்: அந்தப் படம் இல்லீங்க. அது சோப் விளம்பரத்துக்காக நீங்க தலை கீழா நின்னுக் கிட்டிருக்கிற நியூஸ் ரீல் படமாச்சே! உங்களை அப்படிப் பார்த்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. இன்னிக்கு இந்தி மார்க்கெட் இருக்கிற இருப்பை நன்றாக எடுத்துக் காட்டிட்டீங்க ஜானி!

ஜானி: ஏன் நீங்க? ஒரு கூடைக்குள்ளே யிருந்து தலையைத் தூக்கறீங்களே, அது மட்டும் என்னவாம்?

தங்: கூடையோ, மேடையோ? நாங்க எதுவும் சொந்தமாப் பண்ணுவோம். எங்க ஜனங்களும் கொல்லுன்னு சிரிப்பாங்க.

ஜானி: அப்படின்னா, ஏன் இந்திப் படங்களைப் பார்க்கக் கூடாதுன்னு அடிக்கடி சொல்லறீங்க?

தங்: காரணம் வேறே ஜானி காரு, வேறே! எங்க காசு வடக்கே போயிடக் கூடாதுன்னு தான் அப்படி அலறிக்கிட்டிருக்கேன்!

ஜானி: நல்லவேளை, இங்கே வந்து உங்க பணத்தை நான் வாங்கிக்கிட்டுப் போகக் கூடாதுன்னு சொல்லலியே நீங்க, தாங்ஸ்!

தங்: உங்களைப் போன்றவங்களே நான் தடுத்து என்ன பண்றதுங்க. உங்களை வடக்கே இருந்து இங்கே கூப்பிடறாங்களே அவுங்களே ......

ஜானி: அடடா, ரேஸுக்கு டைம் ஆயிடுச்சே, நான் வரட்டுமா டங்...

தங்: போதுமே 'டங்' ஜானி, 'வாக்' நீங்களா?

[பிரிந்து போகிறார்கள்.]

சென்னை மேடையில் சென்ற மாதம்

ஒரு நாள் இரவல்

சமீப காலத்தில் சென்னையில் நடந்த நல்ல நாடகங்களில் ஒன்று எனக் குறிப்பிடலாம் "கணேஷ் கலைக் கழகத்தின்" ஆதரவில் நடை பெற்ற "ஒரு நாள் இரவல்" என்ற ஹாஸ்ய நாடகத்தை. இந்த நாடகம் தோட்டக்கார விஸ்வனாதனால் எழுதப்பட்டது. ஆரம்பத்திலிருந்து கடைசி வரை வயிறு குலுங்க சிரிக்கும்படி, நடித்துக் காட்டி விட்டார்கள், இதில் பங்கெடுத்துக் கொண்ட அனைவரும். மேடையில் பலகாலம் அனுபவம் பெற்ற நடிகர்களும் பிரமிக்கும்படி இருந்தது, இந்த அமெச்சூர்களின் நாடகம்.

மோகனாக நடித்த 'பாரத்வாஜ்' தொழில் நடிகர்களையும் ஒருபடி மிஞ்சி விட்டார். சமயசந்தர்ப்பத்தை அனுசரித்து, உடன் நடிக்கும் நடிகர்களுக்குத் தகுந்த முறையில் அனுசரித்து, இந்த நாடகத்தை சிறப்புறச் செய்துவிட்டார்.

அடுத்தபடியாக முருகேசனை நினைக்கும்போது இப்பொழுது கூட சிரிப்பு வருகிறது. 'வேதகணா'மாக அவர் ஹாஸ்யபாவம் குறையாமல் ரஸிகர்களையெல்லாம், திருப்திப்படுத்தும் முறையுல் நடித்து முடித்திருந்தார், அந்தப் பாத்திரமாக நடித்த ஜி. கார்த்திகேயன். "தபூலிவாலா" வாக நடித்த ஏ. கிருஷ்ணசாமியின் தோற்றமும் நடிப்பு பிரமாதம்.

"ஒரு நாள் இரவல்" டைரெக்டர் ஜி. கே. கைகட்டி நிற்க, டி. எஸ். சந்தானம் பாராட்டுகிறார்.

வேலைக்காரி வள்ளியாகத் தோன்றிய கிருஷ்ணாவும் பிரேமாவாகத் தோன்றிய கல்பகமும் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு, சிறப்புற நடித்தார்கள்.

நாடகத்தை டைரெக்ட் செய்த ஜி. கே. இளைஞர் எனினும் அவரது திறமை பல வருஷ அனுபவம் பெற்றவரையும் மிஞ்சுவதாக இருந்தது.

பெரும்பாலும் டி. வி. எஸ். ஸ்தாபனங்களில் பணிபுரியும் பலரை அங்கத்தினராகக் கொண்ட இந்தக் கழகத்தின் முதல் நாடகத்திற்கு அந்த ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரெக்டர் டி. எஸ். சந்தானம் வந்திருந்து ஆசி கூறியது சங்கத்தினருக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

விளக்கேற்றி வைத்தவள்

ஆர். பி. மல்லாரி எழுதிய "விளக்கேற்றி வைத்தவள்" நாடகத்தை "ஸ்வதந்திரா அமெச்சூர்" நடிகர்கள், கோபாலபுரம் ஹைஸ்கூல் திறந்தவெளி அரங்கில் மார்ச் மாதம் 9-ம்தேதி நடித்தார்கள். ஹாஸ்யத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகத்தின் உட் கருத்து சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்திருந்தது. நாடகப் பாத்திரங்களின் மூலம் வந்த சிந்தனைமொழிகளை நாடகாசிரியர் அழகாக எழுதியிருந்தார். ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் 'ஐயம்' 'அறியாமை' என்ற இருளை விரட்டவேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

இந்த நாடகத்துக்குத் தலைமை வகித்த சட்டநாதன், ஐ. ஸி. எஸ், நாடகத்தை மிகவும் பாராட்டினார். அவர் பாராட்டும்பொழுது இந்த நாடகாசிரியரையும், திறமையுடன் டைரக்ட்செய்த பி. சந்தானத்தையும், பிரத்யேகமாகக் குறிப்பிட்டார். "பல்லாக்குபிள்ளை" பாத்திர மேற்று நடித்தவர் ரசிகர்களின் ஒருமுகப்பட்ட பாராட்டுதலைப் பெற்றார்.

புஷ்பா, மீனா வேஷம் புனைந்தவர்கள் நடிப்பு இயற்கையாக இருந்தது. மொத்தத்தில் இந்த நாடகம் ஸ்வதந்திர அமைச்சூர் களுக்கு ஒரு பெரிய வெற்றிதான்.

சந்திரபாபுவுடன் ஒரு நாள்...

வாழ்க்கையில் இதைவிடக் கஷ்டங்கள் வர முடியாது. வந்தாலும் அதைச் சிரமேற் கொண்டு சமாளிப்பது என்பது எளிதல்ல என்பதற்கு சிரிப்பு நடிகர் சந்திரபாபு ஓர் உதாரணமாக விளங்குகிறார்.

அவர் இலங்கையிலிருந்து திக்குத் திசை புரியாமல் சென்னைக்கு வந்ததும், வரும்பொழுதே திகைப்பும் விழிப்புமாகத் தடுமாறியதும், வந்துவிட்டு ஏன் வந்தோம் என்று தவித்ததும் ஒரு முழு நீளச் சோக புராணம்.

கஷ்டங்களுக்கும், கண்ணீருக்கும், பொங்கிய வாழ்வுக்கும் நடுவே 'கலே! கலே!' என்று நடிக்க அவர் துடித்த காட்சிகளைப் போல இதுவரையில் எந்தச் சினிமாவிலும் எவரும் கண்டிருக்க முடியாது!

அப்படிப்பட்ட அரபிக் கடலுக்கு நடுவே தவித்த சந்திரபாபு இன்று சிரிக்கிறார், சிரிக்க வைக்கிறார்!

அது அவரால் எப்படி முடிந்தது! வாழ்வில் துயரங்களால் ஜெமினி ஸ்டுடியோவுக்கு முன்னால் ஒதுக்கப்பட்ட ஒருவர் இன்று எப்படி எல்லாம் உயர்ந்து விட்டார்!

எப்படியாவது சினிமாவில் சேர்ந்து தன் ஆசைகளைப் பிரதிபலித்துக் காட்ட வேண்டும் என்ற பிடிவாதக் குணமே இவரை இன்று சிறந்த சிரிப்பு நடிகராக்கி இருக்கிறது!

அன்று-

இவர் ஆசைகளை அழுத்த எத்தனை பேர் விரட்டி அடித்தார்கள்? 'சார்லஸ் போயர் இவர் டோய்!' என்று கேலி செய்தார்கள்! எத்தனை பேர் இவரை அசடு, பைத்தியம் என்று பெயர் சூட்டினார்கள்!

சமாளித்தார் சந்திரபாபு!

இவருடைய வாழ்க்கையைப் பற்றி எண்ணி எண்ணி வியப்படைந்து கொண்டே இவர் வீட்டுக்கு ஒரு நாள் போனேன். இதுவரையில் வாழ்வின் ஒவ்வொரு விநாடியிலும் விந்தைகள் புரிந்திருக்கும் இவர், இப்போது ஒரு நாளை எப்படிக் கழிக்கிறார் என்று பார்க்கும் ஆவலோடு அவரது வீட்டுக்குப் போனேன்.

ஒரு நாள் செட்டில் அவரைக் கண்டு 'உங்களுடன் கூட ஒரு நாள் இருக்கவேண்டும். அந்த ஒரு நாளில் நீங்கள் என்னென்ன செய்கிறீர்கள் என்று பார்க்க வேண்டும்'' என்று சந்திரபாபுவிடம் சொன்னேன்.

"வாருங்கள். நான் எங்கெங்கோ போவேன். ஸ்புட்னிக் சந்திரனில் ஏறிச் சுற்றிவிட்டுக்கூட வருவேன். என்னோடு நீங்களும் வர

இஷ்டமா?" என்று கேட்டார் சந்திரபாபு.

"ஆகா, நீங்கள் எங்கு போனாலும் சரி, உங்களுக்கு ஆகிறது எனக்கும் ஆகிவிட்டுப் போகிறது" என்றேன்.

ஆனால் அவர் வீட்டுக்கு அடுத்த நாள் காலையில் நான் போனபொழுது காலை மணி 7-10.

சந்திரபாபு தன் அறைக்குக் குளுகுளு காற்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். வனப்புள்ள அறையாக அதை அலங்கரித்து கட்டில் போட்டுக்கொண்டிருக்கிறார். படுத்து உறங்கப் பல வசதிகள் இருந்தும் அவர் வெறுந் தரையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

அவர் என்னிடம் குறிப்பிட்டதுபோல ஸ்புட்னிங் சந்திரனிலிருந்து இங்கே வந்து விழுந்திருப்பாரா என்ன? இப்படி அடித்துப் போட்டவர் போல ஆழ்ந்து உறங்குகிறாரே? பிரபல சினிமா நடிகர் இப்படியா படுத்து உறங்குவது? வியப்பு எனக்கு.

என்னைக் கண்டுவிட்டுச் சந்திரபாபுவின் சிறிய சகோதரர் ரவீந்திரன் 'எழுப்பட்டுமா?' என்றார்.

"வேண்டாம், அவரே எழுந்திருக்கட்டும்" என்றேன்.

சந்திரபாபு 9 மணிக்கு எழுந்தார். "இன்று சிறிது நேரமாகிவிட்டது, நேற்று இரவு படுக்கும்போது மணி 1-30" என்று கூறிக்கொண்டே கலைந்த கிருப்பை ஒதுக்கி விட்டபடி ரேடியோகிராம் அருகே வந்து உட்கார்ந்தார். அவருக்குப் பிடித்த ஆங்கில இசைத் தட்டு ஒன்றைப்பொறுக்கி எடுத்துவைத்து அனுபவித்துக் கேட்டார். இவரது காலை எழுச்சி, இப்படித்தான் 'ஆங்கிலப்பண்' ணுடன் ஆரம்பிக்கப் படவேண்டுமாம்!

சந்திரபாபு மருந்து அருந்துவது போல காபி ஓர் அவுன்ஸ் அல்லது இரண்டு அவுன்ஸ் மட்டுமே பருகுகிறார். "இவ்வளவுதான் நான் காபி குடிப்பேன். என் வயறு சிறிது, வளர்

கலை பெரிது '' என்றார்.

இவர் காபி குடித்துவிட்டுக் கை விரல்களில் ஒன்றை அசைத்துத் தாளமீட்டியபடி இசைத் தட்டில் லயித்துக் கிடந்த பொழுது போனில் யாரோ அழைத்தார். பச்சை வண்ணபாக இருந்த அந்த போனில் இவர் பேசினார். பேசிவிட்டுச் சொன்னார்; '' இன்று மாலை பரணி ஸ்டுடியோவில் "பதிபக்திப்" படம்

போட்டுக் காட்டுகிறார்கள். அதற்கு என் நண்பர் ஒருவரை வரச் சொல்லி இருந்தேன். படம் எத்தனை மணிக்கு என்று கேட்டார்.''

பேசிக்கொண்டிருந்போது சந்திர பாபுவைப் பார்க்க கும்பகோணத்திலிருந்து இருவர் வந்தார்கள். அவர்களுடன் 'நாரதர்' சீனுவாச ராவும் வந்திருந்தார். அவர்கள் சந்திரபாபுவை குடந்தைக் கண் காட்சியில் மேடைத் தோற்றம் தோன்ற அழைக்கவே வந்திருந்தார்கள். ஆனால் சந்திரபாபு தனக்கு இருக்கும் படப்பிடிப்புத் தொல்லைகளை எடுத்துக் கூறி, பெருந் தன்மையோடு மன்னிப்பைக் கோரினார். அவர்கள் ஒரு நடிகருக்கு இருக்கும் தொல்லையை உணர்ந்து கொண்டு எழுந்து சென்றார்கள்.

சந்திரபாபுவுக்கு அன்று படப்பிடிப்பு இல்லை. "இன்று எந்த ஸ்டுடியோவுக்கும் நான் போகமாட்டேன். நான் எங்கு போனாலும் வருவீர்களல்லவா என் காரில்?'' என்று கேட்டுக் கொண்டே காரில் ஏறி, ஓட்டுமிடத்தில் உட்கார்ந்து கொண்டார். கார் வேகமாக கிளம்பியது.

கார், வி. டி. ஐ. என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டுக்கு முன்னால் போய் சரக்கென்று நின்றது.

சந்திரபாபு இறங்கினார். உள்ளே ஓடினார். இவர் ஏன் இப்படி ஓடுகிறார்? இங்கே ஓடி வாங்கும்படி அப்படி என்ன இருக்கிறது? புரியாமல் நானும் பின்னால் போனேன்.

இவரைக் கண்டுவிட்டு சூப்ரண்டெண்ட் மிஸ்டர் பிலிப் வெண் பற்களைக் காட்டி வர்த்தகச் சிரிப்புச் சிரித்து வரவேற்றார். சந்திரபாபு அவருடன் ஆங்கிலத்தில் சிறிது பேசிவிட்டு ஒரு வண்ண வேலைப்பாடுள்ள பூப் போட்ட குழாய் ஒன்றை வாங்கினார்.

"இது அரசாங்க ஆதரவுபெற்ற ஸ்தாபனம். இங்கே வந்துவிட்டால் ஏதாவது வாங்காமல் போகமுடியாது. அப்படி உபசரித்துவிடுவார்கள்" என்று வி டி. ஐ. யைப்பற்றி விமரிசனம் செய்துவிட்டு ஒரு கட்டுக் கைக்குட்டைகள் வாங்கினார்.

"இவைகளை என் கண்ணீரை மட்டுமல்ல, பிறரது கண்ணீரையும் சேர்த்துத் துடைக்கவே வாங்கினேன்" என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார் சந்திரபாபு.

அங்கிருந்து ஸ்பென்சர் உலகத்தினுள் தாவினார் சந்திரபாபு. இவரது தலையைக் கண்டவுடன் எத்தனை 'ஹலோக்'கள் கிளம்பின!

சந்திரபாபு உள்ளே புகுந்து அழகு நடை நடந்தார். நடுவில் இருந்த பப்பர்மிண்ட் விற்கும் ஆங்கிலோ இந்தியப் பெண்ணுக்கு அருகில் சென்று 'ஆ!' வென வாயைத் திறந்தார். அந்த அம்மாள் சிரித்த முகத்தோடு ஒரு சாக்லெட்டை எடுத்து சந்திரபாபுவின் வாய்க்குள் போட்டார்! நல்ல வேளையாக அத்துடன் அங்கிருந்து நகர்ந்துவிட்டார் சந்திரபாபு. அந்த அம்மாளின் கைகளைப் பிடித்துக்



கொண்டு 'ராக் அன் ரோல்' நடனம் ஆடத் தொடங்கிவிட்டால்.

ஸ்பென்சரிலிருந்து இவர் திரும்பும்போது இரண்டு பெரிய பிஸ்கோத்து டின்கள் இவரோடு கிளம்பிக் காரின் பின் பக்கத்தை அடைத்துக்கொண்டன.

அங்கிருந்து மவுண்ட்ரோடிலுள்ள முகம்மது இப்ராஹீம் கம்பெனிக்குள் உற்சாகமாக நுழைந்து சில புதிய ஆங்கில இசைத்தட்டுக்களைப் போட்டுப் பார்த்து விலைக்கு வாங்கிக்கொண்டார். கம்பெனி அதிபர் சுலேமான் அவர்களுடனும், மானேஜர் திரு நடராஜன் அவர்களுடனும் சிறிது நேரம் அளவளாவினார். "என் வீட்டில் எப்போதும் இசை வெள்ளம் பாய இவர்களே காரணம்!" என்று பெருமையோடு கூறினார் சந்திரபாபு.

அங்கிருந்து, அமெரிக்கச் செய்தி ஸ்தாபனத்தினுள் நுழைந்தார். அலுவலகப் பொறுப்பாளர் மிஸ்டர் டானிவேல் இவரை இன்முகத்தோடு வரவேற்றார். பிறகு ஸ்தாபனத்தின் பொது விவகார அதிகாரி மிஸ்டர் ஜான் எல். விக்கின் அவர்களைப் பார்க்க, அவர் இருந்த ஸ்டுடியோ அறைக்குள் சென்றார். அவர் சந்திரபாபுவை அன்போடு வரவேற்று, அங்கிருந்த மற்ற அமெரிக்க அதிகாரிகளுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். யாரோ ஒரு நடிகர், அதுவும் தான் கண்டு, கேட்டு அனுபவித்து ரசிக்க முடியாத தமிழ்ப்பட நடிகர் என்று அந்த அமெரிக்கச் செய்தி ஸ்தாபன அதிபர் அலட்சியமாக எண்ணாமல் அமோக வரவேற்பு அளித்தது பெருமைக்குரிய காட்சியாக இருந்தது.

'கான்டிட்' (Candide) என்ற ஹாஸ்ய நாடக இசைத்தட்டு ஒன்றை சந்திரபாபுவுக்கு அவர் பரிசளித்தார். அத்துடன் தமது குளு குளு அறைக்கு அழைத்து வந்து அமெரிக்க தேசப் படத்துக்கு அருகே அமர்ந்து படம் பிடித்துக் கொண்டார்.

"என்னிடம் இவருக்குத் தனி அன்பு எப்படியோ வளர்ந்துவிட்டது. அது ஒரு நாள் என்னை



அமெரிக்காவுக்கு அனுப்பினாலும் அனுப்பிவிடும்!" என்றார். அமெரிக்கச் செய்தி ஸ்தாபனம் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபொழுது அமெரிக்காவிலிருந்தே வந்தது போல இருந்தது!.

எழும்பூரில் இருக்கும் ரோமன் கத்தோலிக் மாதா கோயிலுக்குச் சந்திரபாபு பிரார்த்தனை செய்யப் போகும் பொழுது பகல் மணி 12-30 இருக்கும். பிரார்த்தனை செய்து விட்டு, மதபோதகர் ரெவரெண்ட் ஏ. ஜே. அடைக்கலம் அவர்களைக் கண்டு வணங்கி ஆசி பெற்றார்.

"ஆண்டவனை நம்பு; அவன் உனக்கு நல்வழி காட்டுவான்" என்று ஆசி வழங்கிய பின் அன்போடு தழுவிக் கொண்டார். பிறகு மதகுருவுடன் சேர்ந்து 'கேக்' கைப் பாகுபாடு செய்து அருசுவை உண்டார். அவரோடு சந்திரபாபு பேசியபொழுது பண்போடும் அடக்கத்தோடும் காணப் பட்டார்.

"இவர், மத குரு மட்டு மல்ல, நல்ல துறவி. எனக்கு அன்புக் கட்டளைகள் பல இட்டு முன்னுக்கு வர வழி காட்டிய பெரியார்" என்று உணர்ச்சியோடு குறிப்பிட்டார்.

ஆலயத்திலிருந்து வெளியே வந்தபொழுது நூற்றுக் கணக்கான சிறுவர்கள் அருகில் இருந்த பள்ளியிலிருந்து விடுபட்டு வந்து, "சந்திரபாபு! சந்திரபாபுவுக்கு ஜே" என்று ஆரவாரம் செய்தார்கள். அவர்களிடமிருந்து காரை விடுவித்து ஓட்டிச் செல்ல சந்திரபாபுவுக்குச் சிரமமாக இருந்தது. "இந்த அன்புக்கும் ஆரவாரத்துக்கும் ஈடாக எதுவுமே இல்லை" என்று வரும் வழியில் தப்பாமல் சொல்லிக் கொண்டே வந்தார் சந்திரபாபு.

"பகல் உணவுக்குப் பிறகு எனக்குச் சற்று உறங்கவேண்டும், தயவு செய்து பரோலில் கைதியை விடுதலை செய்வதுபோல என்னை விடுங்கள். மாலை நாலு மணிக்கு நமது சுற்றுப் பயணத்தைத் தொடருவோம்" என்று சந்திரபாபு சொன்னார்.

அவரது கோரிக்கை மனு ஒப்புக் கொள்ளப்பட்டது!

மாலை நாலு மணிக்கு சந்திர பாபுவின் வீட்டிலிருந்து இரண்டு கார்கள் பரணி ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டன.

ஒரு காரில் எங்களுடன் சந்திர பாபுவின் தந்தை ராட்ரிக்ஸும் வந்தார். அவர் அரசியல்வாதி. சென்னை முதலமைச்சர் காமராசரின் நண்பர். அவருக்கும் சினிமாவுக்கும் வெகு தூரம் என்றாலும் இப்போது தம் மகன் இவ்வளவு பெயருடனும் புகழுடனும் இருப்பதைக் கண்டு, உண்மையாகப் பெருமை கொண்டிருக்கிறார். "நான் சினிமாவில் சேரத்தான் போகிறேன். உங்களிடம் சம்மதி பெற்று சிபாரிசுக் கடிதம் வாங்கி வந்தால் பி. எஸ். ராமையா என்பவர் எனக்கு 'தன அமராவதி' என்ற படத்தில் நடிக்க சான்ஸ் தருகிறேன் என்கிறார். எனக்குக் கடிதம் தராத வரையில் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்து, சத்யாக் கிரகம் செய்து இவரிடமிருந்து கடிதம் வாங்கிக் கொண்டு போனவர் தான் சந்திரபாபு!.

''இந்தப் பயல் (சந்திரபாபு) சார்லி சாப்ளினைப் போல வருவான்! 'என்று பல ஆண்டுகளுக்கு முன்னால் சத்தியமூர்த்தி குற்றாலத்தில் ஒருதடவை இவனது நடவடிக்கைகளைக் கண்டுவிட்டுச் சொன்னார். சத்தியமூர்த்தி எவரையும் சாமான்யமாகப் புகழ்ந்து விடமாட்டார் என்பதை நான் அறிவேன்!" என்றார் ராட்ரிக்ஸ். அத்துடன் 'பயல் பதிபக்தியில் பிரமாதமாக நடித்திருக்கிறான் என்று கேள்விப் பட்டேன். படம் பார்க்க வருகிறேன்' என்றும் கூறினார்.

பரணியில் காமராசர், சி. சுப்ரமணியம், முதலிய அமைச்சர்களோடும், சிவாஜி, ஜெமினி முதலிய சினிமா நடிகர்களோடும், வசன கர்த்தா மு. கருணாநிதியோடும் சந்திரபாபு சிரிப்புக்கும் சிந்தனைக்கும், முடிச்சுப்போட்டுப் பேசினார். நடு நடுவே புகுந்து போகும்போது பலர், ''ஹலோ சந்திரபாபு" என்று கைகளை முறுக்கியும்

ராகினியின் ஹாஸ்ய வெடி ஒன்றைக் கேட்டு நகைக்கின்றனர் பாலாஜி, நடன டைரெக்டர் சம்பத் குமார், ஒளிப்பதிவாளர் ரஹ்மான், மேக்கப் தனகோடி, டைரெக்டர் ரகுநாத்.

இழுத்தும் அருகில் உட்காரவைத்து கொண்டார்கள்.

நான் சந்திரபாபுவின் நெஞ்சுக் குழியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். "அங்கே என்ன பார்க்கறீர்கள் என்று என்னைக் கேட்டார் சந்திரபாபு.

"முன்பு ஜெமினியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதற்காக கதீட்ரல் கடை ஒன்றில் நஞ்சு வாங்கி அருந்தினீர்களே அதை விழுங்கிய நெஞ்சு எப்படி இருக்கிறது என்று கண்காணித்தேன்" என்றேன் சிரித்துக் கொண்டு.

'அது கொடுத்த தண்டனைதான் இன்று சிரிப்பாச் சிரிக்கிறேன்'' என்றார் சந்திரபாபு தன் கோட்டின் காலரை இழுத்து விட்டுக்கொண்டு.

பதிபக்தி படம் முடிந்து இரவு 11 மணிக்கு வீட்டுக்குப் போகும் போது சந்திரபாபுவின் காதோடு காதாகக் கேட்டேன். "உங்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியை எப்பொழுது தேர்ந்தெடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

"தேர்ந்தெடுத்து விட்டேன். விரைவில் திருமணம் நடக்கப் போகிறது'' என்று சொல்லிவிட்டு ஓர் அழகிய பெண்ணின் புகைப் படத்தைக் காட்டினார்.

"அந்தப் பெண் யார்? எந்த ஊர் என்றெல்லாம் இப்போது கேட்காதீர்கள் திடீரென்று உங்களுக்கு ஒரு நாள் இன்விடேஷன் வரும். அப்போது தெரிந்து கொள்ளுங்கள்'' என்று புதிர் போட்டார். சந்திரபாபுவின் இந்த ஒருநாள் எனக்கு இனித்தது. அந்த ஒருநாள்?



கேளுங்கள்

டி. பொன்னுசாமி. (கும்பகோணம்.)

நர்கீஸுக்கும் ராஜ் கபூருக்கும் தகராறாமே?

ராஜ்கபூரின் ரஷ்ய விஜயத்துக்குப் பிறகு தான் அவரது உள்ளத்து 'பாலிஸி'யே மாறிவிட்டது என்ற குறை நர்கீஸின் நெஞ்சிலே நிறைந்திருக்கலாம்!

எம். சுவாமிநாதன். (சென்னை-2).

"உத்தமபுத்திர"னில் தங்கவேலுவின் காமிக் எடுபடவில்லையே, ஏன்?

கூடையிலிருந்து தங்கவேலு விடுபட்டு வந்த பிறகும்கூட இன்னும் கூடை எடுபட வில்லை என்ற நினைப்பில் நடிக்க மறந்து போயிருப்பார்!

எஸ். ஏபீக் அஹமத், (கிருஷ்ணகிரி)

"ஊமையன் கோட்டை"க்கும், "கட்ட பொம்ம"னுக்கும் என்ன வித்தியாசம்?

ஒன்று தோசை; இன்னொன்று ஊத்தப்பம்! "கட்ட பொம்மன் கோட்டை"யில் சிவாஜியின் கொடி பறக்கும்! "ஊமையன் கோட்டை"யில் கண்ணதாசனின் பேனாவின் கிரீச் ஒலி கேட்கும் என்று தோன்றுகிறது!

சீதா, லட்சுமண, பரத, சத்ருக்குன, ஆஞ்சநேய சமேதராக ராமன் பட்டாபிஷேகம் செய்துகொண்டார்
—"ராமாயண"த்தில்

என். வி. ராகவன், (சென்னை-17).

வாதிராஜ் என்ற குட்டை நடிகர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

விசுக் விசுக் என்று வாஹினி ஸ்டுடியோவுக்குள் புகுந்து கொண்டிருக்கிறார், "கடன் வாங்கிக் கல்யாணச் சாப்பாடு சாப்பிட!"

சு. அ. குப்பன், (சூலூர்)

கண்ணதாசன் நடிக்கிறாராமே?

அவரது வாழ்நாளில் அது ஒன்று தான் பாக்கி இருந்தது! அதையும் 'நடத்தி'விட ஆசை போல இருக்கிறது அவருக்கு!

பு. சிவநாதன், (செய்யூர்.)

தேவர் படத்தில் கதா நாயகனாக நடிக்கப் போவது யார்?

இப்போது சில கதா நாயகர்கள் படுத்திவைக்கிற பாட்டைப் பார்த்து வரும் தேவர் ஏதாவது ஒரு மிருகத்தையே ஏற்பாடு செய்தாலும் செய்து விடுவார்!

என். மேகவண்ணன், (கரந்தை.)

"நல்ல இடத்து சம்மந்தம்" என்ற படத்தில் வி. கே. ராமசாமி ஏன் அவ்வளவு இரைந்து பேசி இருக்கிறார்?

ஏவி. எம்முக்கு தங்கப் பதக்கம்

சிறந்த படத்திற்கான, இவ்வாண்டு இந்தியப் பிரதமரின் தங்கப் பதக்கத்தை முழு நீள குழந்தைகள் படமான ஏவி. எம்மின் தயாரிப்பான "ஹம்-பஞ்சி-ஏக்-டால்கே"க்கு அளிப்பதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனர். படத்தயாரிப்பாளருக்கு ரூபாய் இருபதினாயிரமும், படத்தின் டைரக்டர் சந்தோஷிக்கு ஐயாயிரம் ரூபாயும் பரிசாகக் கிடைக்கும். இம்மாதம் 16ம் தேதி நடைபெறும் பரிசு விழாவில் படாதிபதி ஏவி. மெய்யப்பன் ராஷ்டிரபதியிடம் பரிசுகளைப் பெறுவார்.

பிள்ளையாக நடிக்கும் எம். ஆர். ராதாவுக்குத் தான் இளைத்தவனல்ல என்று நிரூபிக்க அப்பா ராமசாமி பெருங் குரலில் பேசி இருக்கலாம்!

ஜி. ஆராவமுது, (வடுவூர்.)

டி. ஏ. மதுரம் மீண்டும் படங்களில் நடிக்கப் போகிறதாக ஒரு பத்திரிகையில் படித்தேன். அது உண்மையா?

உண்மைதான். கலைவாணரின் கடனை அடைக்க அதுவே தன் கடமை என்று கருதுகிறார் மதுரம்! பிறரின் உதவியையும் பெருமையையும் நம்பி எத்தனை நாட்களுக்கு வாழ்ந்து விட முடியும்!

ஆர். பி. நம்மாழ்வார், (திருக்காட்டுப் பள்ளி.)

பாகவதர் படங்களுக்குப் பின்னணி பாடினால் என்ன?

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்று சொல்லிக் கொண்டு பழைய பெருமையில் வாழ்ந்து விடப் பார்க்கிறார் பாகவதர். அந்தக் குரல் சௌந்தரராஜன் யுகத்தில் எவருக்குக் கேட்டுவிடப் போகிறது?

டி. எஸ். துரை, (பொன்னேரி.)

"குடும்ப கௌரவம்" என்ற படத்தில் சாவித்திரி நடனம் ஆடாமல் நடித்திருக்கிறார். இனியும் அவர் படங்களில் ஆடாமல் இருப்பாரா?

அவர் 'பொஸிஷன்' இப்போது 'ஸ்டிராங்' ஆகிவிட்டது. இனி அவர் ஆடமாட்டார்! அவர் புதுமனை கட்டிப் புகுந்திருக்கும் வீடே போதிய சான்று!

எம். ஏ. சிவம், (சென்னை-3.)

கமால் பிரதர்ஸின் அடுத்த படம் என்ன?

'சுமதி' என்ற பெயரில் பழைய "சேவாசதனம்" கதையைப் படமாக்கப் போகிறார்கள் இந்தப் 'புதையல்' யார் யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ?

டி. சாம்பசிவம், (கணியூர்.)

பாலாஜிக்குத் திடீரென்று பல படங்களில் நடிக்க எப்படி வாய்ப்புக் கிட்டியது?

அவரது கட்டு உடலும், சில பிரபல நடிகர்களின் கொட்டாவியும் சேர்ந்து தான் பாலாஜிக்கு சான்ஸ் வாங்கிக் கொடுத்திருக்கின்றன!

வி. நாகரெத்தினம், (மாவூர்.)

ஒரு நடிகை உண்மையாக எப்பொழுது கண்ணீர் விடுவாள்?

தான் நடிகையாவதற்குச் செய்த சாகசங்களை நினைத்துப் பார்த்து வருந்தும் போது!

டி. தனபால், (சென்னை-17.)

பி. எஸ். சரோஜாவுக்கும் சரோஜா தேவிக்கும் என்ன வித்தியாசம்?

சர்க்கஸ் கம்பங்களில் நின்று தலை கீழாகத் தன் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டவர், பி. எஸ் சரோஜா. மைசூரிலிருந்து தமிழ் நாட்டைக் கண்களினால் கவர்ந்தவர் சரோஜாதேவி,

என். ஆர். சுப்பையா, (சென்னை-1.)

படவுலகில் உயர்ந்தவர் யார்?

விஜயாவின் சக்ரபாணி.

உங்கள் அதிருஷ்டம் 1958 க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது



ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில், லாப நஷ்டம், உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM

(A-1) JULLUNDUR CITY (Pb.)

புத்தா பிக்சர்ஸ்
பதி பக்தி
C. L. Mani



தலைப்புத்தான் பழசு; கதை அமைப்பு முற்றிலுமே புதுசு. ஜெமினி – சிவாஜி கணேசன்கள் நடிக்கும் படம் இது. சாவித்திரி, எம். என். ராஜம், தாங்கவேலு, பாலய்யா ஆகப் பல நட்சத்திரங்கள் கூட நடித்துள்ளனர்.



புத்தா பிக்சர்ஸாரின் தயாரிப்பான இப்
படம் தமிழ் நாடெங்கும் தற்சமயம்
வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

பாடகியின் மகள்

ஸி. ஆர் ராஜம்மா

'ஸ்ரீ ஸரஸ்வதி நமஸ்துதே' என்று ஆரபி ராகத்தில் வைதேகி பாடிக் கொண்டிருந்தாள். அந்த பங்களாவின் இரண்டாவது மாடியில் எங்கிருந்தோ அந்தக் குரல் வந்து தீஞ்சுவை மதுவை எங்கும் நிரப்பிக்கொண்டிருந்தது.

"வைதேகி, பத்து மணி அடிக்கிறதுதே, பாட்டை நிறுத்தேனம்மா. இனிமேல் பள்ளிக்கூடப் பாடங்கள் வேறு படிக்கவேண்டாமா?" என்று உரிமையோடு கேட்டுக் கொண்டே வந்த தாயின் முகத்தைக் கூர்ந்து நோக்கிய வைதேகி, நீண்டபெரு மூச்சுடன் பாட்டை முடித்தாள்.

"எனக்குப் படிப்பு முடிந்து, வேலை கிடைத்து நான் சம்பாதிக்கும் வரை குடும்ப நிலையைத் தாக்குப் பிடித்து உன்னால் கொண்டு போக முடியுமா அம்மா? இப்பொழுதே பங்களாவை அடமானம் வைக்க யோசனை செய்கிறாய் போலிருக்கிறதே" என்றாள் வைதேகி.

மகள் திடீரென்று இப்படி ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போடுவாள் என்று எதிர்பாராத சுமித்ரா சற்று அசந்தே போனாள். ஆனால் அப்படியே செயலற்றுப் போய்விடவில்லை. வாழ்க்கையில் இம்மாதிரி பல பல அதிர்ச்சிகளைத் தாங்கி மரத்துப்போன உள்ளம் அல்லவா அவளுடையது? சட்டென்று சுதாரித்துக்கொண்டு "வைதேகி, இப்பொழுது நீ ரொம்பவும் களைத்துப் போய் இருக்கிறாயம்மா, கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுக் களைப்பாறு, அதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம்" என்று கூறி மகளின் தலையை அன்புடன் வருடினாள் சுமித்ரா.

இரவு எங்கோ மணி பன்னிரண்டு அடிக்கும் சப்தம் தெளிவாகக் கேட்டது. தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்த சுமித்திராவுக்கு கடந்த கால நிகழ்ச்சிகள் கனவு போலத் தோன்றி மறைந்தன.

இருபது வருஷங்களுக்கு முன் சுமித்திரையும் வைதேகியைப் போலத்தான் இளமை கொழிக்கும் பருவத்தில் இருந்தாள். குடும்பம் கூட இதைவிடக் கீழான நிலையில் தான் இருந்தது. இன்று தாயாகவும் தந்தையாகவும் வைதேகியை அவள் வளர்ப்பது போல,

சுமத்திரையை பலருடைய எதிர்ப்பு களுக்கு இடையே தனியாக நின்று வளர்த்தவர் அவளுடைய தந்தை யான வாசுதேவன்தான். அவருக்கு நல்ல சாரீரம். அறுபது வயதிலும் கூட "வதாபி கணபதிம்" என்று சபையில் உட்கார்ந்து பாட ஆரம் பித்துவிட்டால் தொண்டையில் நடுக்கம் என்பது மருந்துக்குக் கூட இருக்காது. அப்படிப்பட்ட அபூர்வக் கலைச் செல்வத்தை வைத்துக் கொண்டு அவரும் ஏதோ சிறிதுசிறிதாகச் செல்வம் சேர்த்தார் தம் அருமை மகளின் வாழ்வு வளம் பெறவேண்டுமே என்பதற்காக.

பரம்பரையாக வந்த இசைச் செல்வம் சுமித்திரையை மட்டும் விட்டு விடுமா? அவள் பாடினால் வாசுதேவனே திகைப்பார். அப்படி ஒரு குரல்; ஞானம். அப்படிப்பட்ட சுமித்திரையை ரசிக உலகம் குடத் துள் விளக்காக இருந்துவிட விட்டு விடுமா? கோபுரத்தின் விளக்காக ஆகிக் கொண்டு வந்தாள் அவள்.

பருவத்தின் வேட்கைக்கு அடிமை யாகாமல் தப்புகிறவர்கள் லட்சத் தில் ஒருவர்கூட இல்லை. சுமித்திரை மட்டும் அதற்கு விலக்கா என்ன!

சுமித்திரையின் கச்சேரி எங்கே நடந்தாலும் அங்கே எல்லாம் பெரும் பாலும் தவறாமல் ஆஜராகி, முன் வரிசையில் உட்கார்ந்து 'சபாஷ்' போட்டுத் தலையைஆட்டி, கைகளைத் தட்டி உற்சாகப் படுத்தியவன்

சுந்தரேசன். பெயருக்குத் தகுந்த களையான முகத்தில் வாலிபம் மெருகேற்றி இருந்தது. அவனுக்கு அளித்த பரிசுகள் அனந்தம். அவனுடைய சிபாரிசில் கிடைத்த கச்சேரிகள் பல. எப்படியோ சுமித்திரைக்கு அவனிடத்தில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது. இருவரும் அநேகம் முறை சந்தித்து நயன பாஷையில் பேசிக் கொண்டனர். தனிமையாக சந்தித்த சமயங்கள் மிக மிக அபூர்வம். அப்படியிருந்தும் கூட வாசுதேவன் கண்களுக்கு அவை படாமல் போகவில்லை. மகளைத் தனிமையில் அழைத்து எச்சரித்தார் அவர். "சுமித்திரா, நம்மைப் போன்றவர்களுக்கு பெரிய இடத்தில் அதிக உறவும் கூடாது, பகையும் கூடாது. அந்த மாதிரி நிலையில் பழக வேண்டும். சுந்தரேசன் பழக்கத்தை விட்டு விடு. உனக்கு நல்ல இடத்தில் வரன் பார்த்து வைத்திருக்கிறேன். சீக்கிரத்திலேயே கல்யாணத்தை நடத்திவிடலாம்" என்று கூறினர். குழைவாக.

மகள் அலட்சியமாகச் சிரித்தாள். "அவரே வாக்குக் கொடுத்துவிட்டார் அப்பா, என்னைத் தவிர யாரையும் மணக்க மாட்டாராம். நீங்கள் வேணுமானல் கேட்டுப் பாருங்களேன்" என்றுள் சிறு குழந்தை போல.

சிந்தித்தார் வாசுதேவன். சுந்தரேசனை அழைத்து விசாரித்தார். அவன் நாடகத்தில் வரும் வீராவேச மொழிகளை எல்லாம் ஒப்புவித்தான். வாசுதேவனுக்கு சற்றே நம்பிக்கை ஏற்பட்டது. 'சரி, பெரியவர்களிடம் பேசி இதை முடித்து விட வேண்டியது தான்' என்று தீர்மானித்தார்,

சங்கீத வித்வான் வீடு தேடி வந்திருக்கிருர் என்ற எண்ணத்தில் அமோகமான வரவேற்புக் கிடைத்தது வாசுதேவனுக்கு, அவர், விஷயத்தை வெளியிட்டதும் அங்கே எழுந்த களேபரத்தை வர்ணித்து மாளாது. சுந்தரேசனுக்கு பெற்றோர் மட்டுமில்லை. ஏகப்பட்ட சொத்தை வைத்துக்

INSIST ON *Klein & Peyerl* **BLOCKS**

30, MOUNT ROAD, MADRAS-2.

கொண்டு ஒரு சித்தப்பாவும், பெரியப்பாவும் வேறு அவனைக் கண் காணித்து வந்தார்கள். ஒரு வயதில் அழகே உருவான மகளை

"நான் ஒரே பத்தினி விரதன்" என்று கூறும் ராமரிடம் (என். டி. ராமராவ்) "நீங்கள் ஒரே சொல், ஒரே அம்பு வீரர் என்பதும் கூட எனக்குத் தெரியுமே" என்று சீதை (பத்மினி) பதில் கூறுவது போன்ற கட்டம் — "ராமாயண"த்தில்.

விட்டு லகாரக் கணக்கில் பணத்தையும் வைத்து விட்டு இறந்து போயிருந்தாள் அவனுடைய அத்தை ஒருத்தி. அவனுக்காகவே வளர்ந்து வந்தாள் வீட்டில். அவளுக்காக உள்ள பணமோ, வட்டியைக் குட்டியாகப் போட்டு அவளைவிட வேகமாக வளர்ந்து வந்தது. இந்த நிலையில் வாசுதேவனுக்கு அங்கே என்ன மரியாதை கிடைத்திருக்கும் என்று ஊகிப்பதே மேல். சுந்தரேசனுடைய உறுதி மொழி இருக்கும்போது என்ன பயம் என்ற எண்ணத்தில்தான் வந்தார். ஆனால் 'மண்ணைச் சாடுவேன், விண்ணைச் சாடுவேன், இவ்வையகத்தையே எதிர்ப்பேன்', என்று கூறிய சுந்தரேசன் வாயைக் கூடத் திறக்க வில்லை.

தந்தை சொன்னதை சுமித்திரை முதலில் நம்பவில்லை. எப்படியும் சுந்தரேசன் தன்னைத் தேடிக் கொண்டுதான் வருவான் என்று எண்ணி எதிர்பார்த்து ஏமாந்து போனாள் பேதை. அதன் பின் சுந்தரேசனிடமிருந்து எந்த விதத் தகவலும் வரவில்லை. அதற்குப் பின் அவள் இரண்டு மூன்று இடங்களில் கச்சேரி செய்தாள். கூட்டத்தில் தேடித் தேடித் துருவித் துருவி ஆராய்ந்த கண்கள் அலுத்துப் போயின. தூண்டு கோலில்லாத விளக்குப்போல மங்க ஆரம்பித்தது அவள் வித்தை. இடிமேல் இடி போல மனநோய் தாங்காத தந்தை இந்த சமயத்தில் இறந்து போனார்.

துயரம் என்ற பள்ளத்தை நோக்கி வெகு வேகமாக உருள ஆரம்பித்தது சுமித்திரையின் வாழ்க்கைச் சக்கரம். சபையில் பாடும் பாடகியான அவளைப் பலரும் பலவித நோக்கத்தோடு நெருங்கினார்கள். சகிக்கமுடியாத குடும்பத் தொல்லை வேறு. இந்த நிலையில் தூரத்து உறவினர் ஒருவர் சொன்ன யோசனையை சட்டென்று ஏற்றுக் கொண்டு விட்டாள் சுமித்திரை. அவர் ஏற்பாடு செய்த ஒருவரைக் கணவனாக ஏற்றுக் கொண்டாள். வியாதிக்காரரான 'அவரு'க்கு ஏதோ சொத்து இருந்தது. ஆனால் நல்ல குணம் பூஜ்யம். சுமித்திரை வாயைத் திறந்து பாடவேகூடாது என்று கட்டளை விதித்தார். காச நோய் அவரிடம் தன்முழு ஆதிக்கத்தையும் செலுத்தியிருந்தது. அந்தக்

கோபத்தை எல்லாம் சுமித்திரையின்மேல் திருப்பினார் அவர். எல்லாம் கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்குள்ளாகவேதான். அதற்குப் பின் இந்த உலகத்திலிருந்தே விடைபெற்றுக் கொண்டார் அவர். அப்போது நான்குமாத கர்ப்பிணி சுமித்திரை.

கஷ்டத்தின் எல்லைக்கோட்டில் நின்ற சுமித்திரையை வறுமை வாட்டவில்லை என்பது என்னமோ உண்மை. கணவனின் தூரத்து உறவுள்ள ஒரு ஸ்த்ரீயின் துணையுடன் வாழ்க்கையைத் தொடர்ந்தாள் அவள்.

பாட்டியின் மகளாகப் பிறந்த வைதேகி இந்த உலகத்தில் பரிதவிக்கக் கூடாது. தன் தாய் இப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்யத்துக்குத் தன்னை இலக்காக விட்டு விட்டாளே என்று ஏங்கக்கூடாது என்ற எண்ணத்தில் சுமித்திரா அவளுக்கு எந்தவிதக் குறையும் வைக்காமல் காப்பாற்றி வளர்த்தாள். சுமித்திரையின் பாட்டுக்கு முன்பு இருந்த மவுஸ் இல்லை என்றாலும் எப்பொழுதாவது ஒரு கச்சேரி அவளைத் தேடிவராமல் போகாது. 'அப்படி வரக்கூடிய இடம் என்ன? யோக்யதை உள்ளதுதானா? என்று ஆராயாமல் சட்டென்று ஒப்புக் கொள்ளவும் மாட்டாள் சுமித்திரா.

நான் (ஆதித்தன்) உன்னைக் (ஹேமலதா) கைவிடேன் என்று கையடித்துச் சொல்கிறாரோ?— "சுமங்கலி" யில்.

குப்பைமேடு வாழையைப்போல் தளதளவென்று வைதேகி வளர்ந்தாள். சுமித்திரை அவளைப் படிக்க வைத்தாள். சங்கீதத்தில் அவளுக்கு ருசியிருந்தது. ஆனால் மகளை தன் போன்ற ஒரு பாடகியாக ஆக்க விரும்பவில்லை சுமித்திரை. இருந்த சொத்துக்கள் எல்லாம் வாழ்க்கையின் தேவைக்காகக் கரைந்து கொண்டே வந்தது. வைதேகி காலேஜில் சேர்ந்து விட்டாள். ஓடிவிட்டன இரண்டு ஆண்டுகள். துயரம், வறுமை இரண்டும் என்ன என்பதே தெரியாமல் வளர்ந்து வந்தாள் வைதேகி. 'வளர்த்தாள் சுமித்திரை' என்றுதான் சொல்லவேண்டும். கச்சேரி என்று எதுவும் வைதேகி செய்யாது போனாலும், பல இசை நிகழ்ச்சிகளில் அவள் பங்கு கொண்டிருக்கிறாள். இன்று திடீரென்று குடும்ப நிலையைப் பற்றி அவள் பேசக் காரணம் ...? சில நாட்களாகவே

அவள் ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறாள் என்று சிந்தித்துப் பார்த்தபோது தான் புரிந்தது சுமித்திரைக்கு.

எங்கோ கோழி கூவியது. அதற்குப் பின்னணியாக நிலாக் காக்கைகள் ஒன்றிரண்டு ஒலி எழுப்பின. பொழுதுவிடிய இன்னும் சொற்ப நேரமே இருந்தது. சுமித்திரைக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவள் நெஞ்சம் துணுக்குற்றது. வைதேகிகூட இன்னும் தூங்கவில்லையா என்ன? ஒற்றைக் கதவு மட்டுமே சாத்தப்பட்டிருந்த அவள் அறையிலிருந்து பிரகாசமான விளக்கு வெளிச்சம் தெரிந்தது. சந்தடிசெய்யாமல்உள்ளே நுழைந்தாள் சுமித்திரை. வைதேகியின் முதுக்குப்புறம் தான் தெரிந்தது. அவள் ஏதோ எழுதி, எழுதிக் கிழித்துப் போட்டிருக்க வேண்டும். அறை முழுவதும் சிறு சிறு காகிதத் துண்டுகள் கிடந்தன. இப்பொழுது சிந்தனையில் லயித்திருந்த வைதேகி ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல மடமடவென்று எழுத ஆரம்பித்தாள்.

மகளுக்குப் பின்னால் நின்று கவனித்து வந்த சுமித்திரையின் இதயம் மின்னலால் தாக்குண்ட கண்ணைப்போல செயல் இழந்தது. ஒரு க்ஷண காலம்தான், அப்புறம் சுதாரித்துக் கொண்டாள் அவள். 'அன்புள்ள அம்மா' என்று கடிதத்தை ஆரம்பித்திருந்தாள் வைதேகி. "ஒரே வீட்டில் ஒன்றிப் பழகும் இருவருக்குள்ளும் என்ன ரகசியம் இருக்கும்? அவள் தனக்கு கடிதம் எழுதவேண்டிய காரணம்? அதுவும் இந்த நேரத்தில்"... மூச்சு விடும் சப்தம்கூட எங்கே கேட்டு விடுமோ என்று பயந்து உஷாராக இருந்து கவனித்தாள் சுமித்திரை.

"அன்புள்ள அம்மா, வெகு நேரச் சிந்தனைக்குப் பின் இந்தக் கடிதம்

'ரத்தக் கண்ணீர்' வடித்து, 'நல்ல இடத்து சம்மந்தப' கிடைத்த பெருமை முகத்திலே பளிச்சிடுகிறது எம். ஆர். ராதாவுக்கு விஜய கோபால் பிக்சர்ஸின் முதல் தயாரிப்பில்.

எழுதுகிறேன். என்னை நீங்கள் இன்னும் சிறு குழந்தையாகவே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.

'அம்மா! என்னுடன் படிக்கும் வாலிபரான சுகுமார், என்மீது உயிரையே வைத்திருக்கிறார். நானும் அப்படித்தானம்மா. உன்னுடைய மகள் உலகம் தெரிந்தவளாகிவிட்டாள் என்று அறிந்தபோது பெருமகிழ்ச்சி அடைகிறாயா! அம்மா, எங்கள் கல்யாணத்துக்கு சுகுமாருடைய குடும்பத்தார் சம்மதிக்க மாட்டார்கள் என்பது நிச்சயமாம். ஆகவே, நாளையே நாங்கள் இரண்டுபேரும் வெளியூர் போகிறோம். மேற்கொண்டும் படிப்பைத் தொடர முடிந்தால் தொடரலாம். இல்லாது போனால் அவரிடம் இருக்கும் சொற்ப மூலதனத்தைக் கொண்டு ஒரு சிறு வியாபாரம் ஆரம்பிக்கலாம் என்பது எங்கள் எண்ணம். உன்னைவிட்டுப் பிரிந்ததற்காக உன் மகளைத் திட்டாதே அம்மா.? பந்துக்களையும், பெரும் செல்வத்தையும் எனக்காக அவர் புறக்கணித்து விட்டு வருகிறார் ......"

வைதேகி இத்தனை தான் எழுதியிருப்பாள். தன்னை மீறி வந்த நீண்ட பெருமூச்சை அடக்கமுடியவில்லை சுமித்திரையினால். திடுக்கிட்டுத் திரும்பிய வைதேகி திகைத்தாள்.

நிதானமாகச் சிரித்தாள் சுமித்திரை. "விதிதான் என்னைச் சதி செய்தது என்று எண்ணினேன் வைதேகி. பெற்ற மகளான நீயுமா இப்படிச் செய்கிறாய். உன்னைப் போன்ற வயதில் நானும் இப்படித் தானம்மா ஒரு வஞ்சகச் செயலுக்கு ஆளானேன். ஆனால், உடலால் மாசு பட்டவள் அல்ல நான். நீ என்னையே மிஞ்சிவிடுவாய் போல் இருக்கிறதே. வைதேகி, 'பெண்கள் பேதைகள், ஏமாந்திருக்கும் வரை அவர்களை உபயோகித்துக் கொள். விழித்துக் கொண்டு சீறினால் விலகி ஓடு' என்று சொன்னவர் முட்டாளல்ல, மகாமேதை. உனக்கும் அந்த கதி ஏற்பட்டு விட்டால் ......" மேற்கொண்டு பேசமுடியவில்லை சுமித்திரையால்; உணர்ச்சிகுரலை அடைத்தது. கண்ணீர் ஆறாகப் பெருகியது. "சுகுமார், அப்படிப் பட்டவரல்ல அம்மா." என்று சொல்லி கேவிக் கேவி அழுதாள் வைதேகி.

நன்றாக விடிந்து விட்டது. சுமித்திரை குளித்து தலையை கோடாலி முடிச்சாகப் போட்டுக் கொண்டு ரேழியின் பக்கத்திலுள்ள பூஜை அறைக்குப் போய் வெகுநேரம் தியானித்தாள். "அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்த மகளை மார்போடு அணைத்து கண்ணீரைத் துடைத்தாள். "கடைசியில் உன் முடிவை மாற்ற மாட்டாயா அம்மா" என்றாள் வைதேகி. "மாட்டேன் வைதேகி. நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவேண்டும். நான்

நேரில்போய் சுகுமாருடைய பெற்றோரிடம் பேசிவிட்டு வருகிறேன். இந்த மாதிரியான ஒரு சமயத்தில் என் தந்தைக்குக் கிடைத்த மரியாதை எனக்கும் இப்பொழுது கிடைக்கலாம். ஆனால் அதற்காக நான் அஞ்சப் போவதில்லை. நீ நம்பி யிருக்கும் சுகுமாரின் குணம் அந்த சமயத்தில் எப்படிப் பரிணமிக்கப் போகிறது என்று பார்க்கப் போகிறேன் ......" மேற்கொண்டும் சுமித்திராவைப் பேச விடவில்லை அங்கே நடந்த நிகழ்ச்சி.

வாசலில் ஹாரனின் சப்தமும், அதைத் தொடர்ந்து சில செருப்புக் காலடிகளின் சப்தமும் கேட்டது. கூடத்திற்கு வந்ததும் எல்லோருமே நின்றது போல இருந்தது. "யார் வீட்டில்...!" ஒரு ஆண் குரல் கம்பீரமாக கர்ஜித்தது. "அம்மா பூஜை செய்து கிட்டிருக்காங்க..." என்றாள் வெல வெலத்துப் போன வேலைக்காரக் கிழவி. "ஆண்கள் யாருமில்லையா !" என்ற அந்த மனிதரின் கேள்விக்கு, "இல்லை" என்று பதில் அளித்தாள் வேலைக்காரி.

"நான் நினைத்தேன். அடக்க ஆள் இல்லாததனால்தான் இப்படித் துளிர்த்து விட்டது இந்த வீட்டுப் பெண். முடவன் இமயமலைச் சிகரத்தை எட்ட ஆசைப் பட்டது போல் இருக்கிறது விஷயம். என் மகன் சுகுமாரை இந்த வீட்டுப் பெண் மயக்கி இருக்கிறாள். எந்தக் கொம்பைப் பிடித்து ஆட்டினால் எந்தக் காய் விழும் என்ற விஷயம் எனக்குத் தெரியும். அதனால் தான் இங்கே வந்தேன். உன் எஜமானியை சமதையாக உட்கார வைத்துப் பேச விரும்ப வில்லை. உன் எஜமானியின் மகளை அடக்கி வைக்கச் சொல். இல்லாவிட்டால் என்ன நடக்குமென்று தெரியாது !" என்று பெரு மழை பெய்தது போல பேசி விட்டு புறப்பட்டு விட்டார்.

"கொஞ்சம் நில்லுங்கள்." பூஜை அறையிலிருந்து கூடத்திற்கு வந்த சுமித்திரைதான் பேசினாள். கீரிப் பிள்ளையின் வட்டத்தில் கோபமே உருவான சர்ப்பம்போல கட்டுண்டு நின்றார் அவர் அந்தக்குரலைக்கேட்டு. மௌனத்திடையே சில விநாடிகள் மறைந்தன. "சுகுமார் தைரியமாக உங்கள் முன்னிலையில் வைதேகியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னானா? இல்லை தன் தந்தையைப் போல் தலை மறைவாகப் போய்விட்டானா?"

சுந்தரேசன் அசந்து போனார். பிறகு மெதுவாக "சுமித்திரா, நீ இங்கேயா இருக்கிறாய்? உன்னை எங்கே யெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறேன். பால்ய உணர்ச்சிக்கு வசமாகி உன்னிடம் வாக்குக் கொடுத்தது உண்மை. பெற்றோர்களின் முன்னிலையில் தட்டிப் பேச தைரியமில்லாமல் கோழையாகி உன்னைப் பார்க்க முகமில்லாமல் மறைந்து கொண்டது உண்மை. ஆனால், சுமத்திரா நீ நம்பினால் நம்பு நம்பாது போனால் போ, உன்னைப் பற்றியே தகவல் விசாரித்துக் கொண்டிருந்த நான் நீ துயரத்தில் அழுந்துவதை அறிந்தேன். உனக்கு ஒரு மகள் இருப்பது வரையும் தெரிந்து கொள்ள முடிந்தது. நான் செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தமாக அவளை என் சுகுமாரனுக்கு மணமுடிக்க எண்ணியிருந்தேன். நாட்கள் செல்லச் செல்ல உன்னைப் பற்றி ஏதுவுமே தெரியவில்லை. ஆனால் என்றைக்காவது கண்டு பிடித்து விடுவேன் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது. இந்த நிலையில் தான் இந்த விஷயம் வெளிப்பட்டது. வைதேகிதான் உன் மகள் என்பது தெரியாது. என் சங்கல்பம் சிதைந்து விடப் போகிறதே என்கிற ஆத்திரத்தில் ஏதோ பேசிவிட்டேன்."

மேற் கொண்டு அவரைப் பேச விடவில்லை சுமித்திரை. "நான் நம்புகிறேன் அண்ணா. மேற் கொண்டு விஷயங்கள் துரிதமாக நடக்கட்டும்" என்றாள்.

நுனிப்புல்

“ஒரு குறிப்பிட்ட நபர், தமக்கு பொறுப்பான பதவி ஒன்று கிடைத்திருக்கிறது என்பதைப் பலரும் தெரிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறார். அதற்கு ஒரு உபாயம் சொல்லுங்கள்” என்று யோசனை கேட்டால் பலரும் பல விதமான முறைகளைக் கூறுவார்கள். என்னைக் கேட்டால் நான் ஒரே ஒரு யுக்திதான் சொல்லுவேன். “இருக்கவே இருக்கிறது சினிமா. அதை மனம் கொண்டமட்டும், வார்த்தைகள் கிடைத்த மட்டும் திட்டிப் பேசுங்கள்; ‘நசுக்கி விடுவேன்; பொசுக்கி விடுவேன்’ என்றெல்லாம் அறிக்கை விடுங்கள். நீங்கள் உயர்ந்து விட்டீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள இதைவிடச் சிறந்த வழி இருக்கவே முடியாது” என்பதுதான் என் யோசனை. சமீப காலமாக அப்படித்தானே, நான் கூறுவதை மெய்ப்பிப்பது போல், நடந்து வருகிறது.

சினிமாவின் ஜாதகத்தைப் பார்த்தால் கூட நலம் என நினைக்கிறேன். அதற்கு இப்போது ரொம்ப ரொம்ப பொல்லாத வேளை. ஏழரை நாட்டுச் சனியன் பிடித்து ஆட்டுகிறது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. ஒருபக்கம் பலவித வரிகள் உயர்வு, கட்டுப்பாடு, பண நெருக்கடி இப்படியாகப் பல இடிகளையும் குத்துகளையும் பெற்றுவரும் அந்தத் தொழில், மற்றொரு பக்கம் பெரிய மனிதர்களிடமும், பொறுப்பாளர்களிடமும் வசை புராணம் வேறு வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அதற்கு ஏற்பட்டிருக்கிறதே! அந்தோ, பரிதாபம்.

ஜமுனா கைகூப்பிப் பிரார்த்தனை செய்வதெல்லாம் —“பொம்மைக் கல்யாணத்தின்” வெற்றிக்குத்தான்.

ஆனால், அறிவாளிகளையும், பெரியார்களையும் பின்பற்றி குழந்தைகளும், குமரிகளும் சினிமாமீது பாய்ந்து ‘உயர்ந்து’ விடப் பார்க்கிறார்களே, அந்த வயிற்றெரிச்சலை நினைத்துச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை!.

“சினிமாவை ஒழித்தே தீருவேன்” என்று சமீபத்தில் காரசாரமா

கப் பேசியிருக்கிறார் சட்டசபை அங்கத்தினரான குழந்தை அம்மாள். இவருடைய பேச்சு எப்படி இருக்கிறது தெரியுமா? 'மடை திறந்து வரும் வெள்ளத்தை உள்ளங்கையை வைத்து அடைத்து விடுவேன்' என்று சவால் விடும் 'புத்திசாலி' யின் பேச்சுப் போல் இருக்கிறது. யானையைப் பிடித்து இழுத்து நிறுத்தும் சுண்டெலியைத் தான் நினைவு படுத்துகிறது. இந்த அம்மாளுடைய பேச்சை 'குழந்தை' பேச்சுத்தானே என்று அசட்டையாகப் புறக்கணித்துவிட முடியாது. பொறுப்பான பதவி வகிக்கும் ஒருவர் பொறுப்பற்றுப் பேசுகிறாரே என்று வருந்தாமல் இருக்கவும் முடியாது.

மற்றொரு சட்டசபை பெண் அங்கத்தினரான ஹேமலதா தேவி சமீபத்தில் சேலத்தில் பேசும் போது, "பெண்கள் சினிமாப் பார்க்க ஓடுகிறார்களே; பொதுக் கூட்டங்களுக்கு வரக்கூடாதா?" என்று கண்ணீர் வடித்திருக்கிறார். நான்மட்டும்என்ன. இவர்களுக்கு சளைத்தவளா என்பது போல் புதுக்கோட்டை நகரசபையின் ஒரு மெம்பரான பிருந்தாதேவி "தாம் சினிமாவே பார்க்கப் போவது இல்லை" என ஒரு சபதமே செய்து கொண்டு, அதை பகிரங்கமாகக் கூறி யிருக்கிறார். "பெண்களே! சினிமாப் பார்க்காதீர்கள். பக்திப் பாடல்களைப் பாடுங்கள்" என்று பல மீராபாய்களை உலகத்துக்கு அளித்து புனருத்தாரணம் செய்யும் தோரணையில் அவர் ஆவேசமாகப் பொழிந்து தள்ளி யிருக்கிறார்.

இதற்கு பஜனைக் கூட்டத்தார், பக்திமான்கள் வேண்டுமானால் அவரை "சித்தாந்த செல்வமணி" என்று பட்டம் சூட்டிப் பாராட்டலாம். ஆனால், சினிமா ஒரு கௌரவமான தொழில், குற்றமற்ற ஒரு பொழுதுபோக்கு என்று ஏற்பட்டு விட்ட இந்த இருபதாம் நூற்றாண்டில் பிருந்தா தேவியின் இத்தகைய பேச்சைக் கேட்டு பெண்குலத்தாரே நகைக்கத்தான் செய்வார்கள் என்பது என்னவோ நிச்சயம்!

அச்சடிப்பதற்கும் இதர உபயோகங்களுக்கும் ஏற்ற எல்லாவிதமான அட்டைகள், காலிகோ, நியூஸ் பிரின்ட், ஆர்ட் பேப்பர், கிராப்ட் பேப்பர் முதலியவைகள் எம்மிடம் எப்போதும் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்

★

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

2/34, தங்கசாலை வீதி, சென்னை - 3.

டெலிபோன் 55000

வட நாட்டில்

பிரம்மாண்டமான "ஜ்வாலா"

ராமன் ஸ்டுடியோவில் பல படங்கள் தயாராகி வருகின்றன என்றாலும் அவை களில் அவர்களது **ஜ்வாலா** தான் ஒரு பிரம்மாண்டமான தயாரிப்பாகும். இப் படம் முழுக்க முழுக்க டெக்னிக் கலரில் தயாரிக்கப்படுகிறது. தமிழ் நாட்டின் பிரபல சரித்திர நாவலாசிரியரான "சாண்டில்யன்" திரைக் கதையை எழுதியுள்ளார். சங்கீத டைரெக்ஷனை ஷங்கர்–ஜய்கிஷன் ஜோடியும், டைரெக் ஷனை எம். வி. ராமனும் கவனித்து வருகின்றனர். ஷோரப் மோடி, மது பாலா, விஜயலக்ஷ்மி, கமலா லட்சுமணன் சுனில்தத், பிரான், ஜாகீர்தார், உல் ஹாஸ், லலிதா பவர் ஆகியோர் படத்தின் பிரதான பாகங்களில் நடித்து வருகின்றனர்.

ஜயஸ்ரீயின் நடனம்

சாந்தாரம் கண்டெடுத்து நட்சத்திர மாக்கிவிட்ட ஜயஸ்ரீயின் நடனம் ஒன்று ஈஸ்ட்மன் கலரில் ராமன் ஸ்டுடியோவில் படமாகியது. எம். வி. ராமன் டைரெக் ஷனில் ராமன் ஸ்டுடியோவில் உருப் பெற்று வரும் **அப்னுபார்யா** என்ற அவர்களது படத்தில் வரும் நடன காட்சி இது. ஜயஸ்ரீ தவிர நிஷி, ராஜ் மெஹ்ரா, ரண்தீர், ஓம்பிரகாஷ் ஆகி யோரும் பிரதான பாத்திரங்களாக இப் படத்தில் நடித்து வருகின்றனர். ஸி. ராமச்சந்திரா இப் படத்தின் சங்கீத டைரெக்டர்.

மதுபாலாவின் முயற்சி

நடிகை மதுபாலா நாடெங்குமுள்ள சினிமாத் துறையில் பணியாற்றும் அனை வருக்கும் ஒரு வேண்டுகோள் விடுத் திருக்கிறார். 'சினிமாத் தொழிலாளர் நலச் சங்கம்' தயாரிக்கவிருக்கும் படங்களில், ஒவ்வொருவரும் வருஷத்திற்கு ஒரு படத்தில் ஊதியம் எதிர்பாராமல் இல வசமாக உழைக்க வேண்டும் என்பதே அவர் விடுத்துள்ள வேண்டுகோள்.

மேற்படி சங்கம் தயாரிக்கும் படங்க ளின் மூலம் கிடைக்கும் வருமானம், சினி மாத் தொழிலின் முன்னேற்றத் திற்கும் சினிமாத் தொழிலின் நல னுக்காகவும் செலவிடப்படும். மற்றவர்களுக்கு வழி காட்டுவது போல இச் சங்கம் தயாரிக் கும் படங்களில், ஊதியம் பெரு மல் நடிக்கப் போவதாக நடிகை மதுபாலா அறிவித்து விட்டிருக்கிறார்.

கதாநாயகி இல்லாத படம்.

பர்மிய கதாசிரியர் – டைரெக்டரான தாகின் டின் ஊ பம்பாய்க்கு வந்துள் ளார். அவர் தயாரித்து வரும் **தி டிரைவர்** என்ற பர்மியப் படத்தில் சில காட்சிகளைத் தயாரிக்கவே அவர் பம்பாயில் வந்து தங்கியிருக்கிறார். கார் ஓட்டிகளின் வாழ்க்கைச் சூழ்நிலையாகக் கொண்ட இந்தப் படத்தில் கதாநாய கியே கிடையாது என்பது ஒரு விசே ஷம். பிரதம நடிகர் அவரேதான்.

நிம்மி மறுக்கிறார்

பிரபல நடிகை நிம்மியின் திருமணம் ரகஸியமாக நடந்து விட்டது என்று சில பத்திரிகைகள் செய்திகள் கூட வெளியிட்டு விட்டன. ஆனால் நடிகை நிம்மி அது தவறான செய்தி என மறுத் துள்ளார். "திருமணம் என்பது வாழ்க் கையில் ஒரு பவித்ரமான நிகழ்ச்சி. ஒளி மறைவாக நடத்திவிடக் கூடிய நிகழ்ச்சி அல்ல அது. நான் தகுதியான ஒருவரைத் திருமணம் செய்து கொள் ளத் தான் போகிறேன். ஆனால் அந்தத் "தகுதியான ஒருவர்" எனக்கு இன் னும் கிடைக்க வில்லை எனக் கூறியுள் ளார். உற்றாரும் உறவினரும் சூழ்ந்து நின்று ஆசி கூறத் திருமணம் செய்து கொள்வதையே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார் நிம்மிக்கு முடிச்சுப் போட்டதாகச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ள வசன கர்த்தா வான அலிராஸாவும் அது தவறான செய்தி என ஒரு அறிக்கை வெளியிட் டிருக்கிறார்.

கொட்டகைகள் மூடப்பட்டன

உத்திரப் பிரதேச ராஜ்யத்திலும் தாமாஷா வரியை அதிகரித்துள்ளனர். அதை எதிர்த்தும், சர்க்காரின் இந்தச் செய்கையைக் கண்டிக்கும் முறையிலும், உத்தரப் பிரதேச ராஜ்யத்திலுள்ள

சினிமாக் கொட்டகைகள் அனைத்தும் கடந்த மாதம் 24ம் தேதி மூடப்பட்டன.

"சுவர்ண சுந்தரி"

சென்னை அஞ்சலி பிச்சர்ஸின் முதல் இந்தித் தயாரிப்பான **சுவர்ண சுந்தரி** யின் வேலைகள் சம்பந்தமாக நடிகை அஞ்சலி தேவி, தன் கணவரும் சங்கீத டைரெக்டருமான ஆதி நாராயண ராவுடன் சென்ற மாதம் பம்பாய் வந்திருந்தார், படத்தின் டைரெக்டரான வேதாந்தம் ராகவய்யா, ஒளிப்பதிவாளர் ரஹ்மான் ஆகிய இருவரும் கூட வந்திருந்தார்கள். அஞ்சலிதேவி, நாகேஸ்வர ராவ், ஷியாமா, கும் கும், ராதா கிஷன், ஆகா, சோப்ரூ, ரணதீர், டெய்ஸி இரானி ஆகியோர் நடிக்கும் இப்படம் ஆகஸ்ட் மாதம் திரைக்கு வரவிருக்கிறது. சுவர்ண சுந்தரி தெலுங்கிலே வெளிவந்து அமோக ஆதரவு பெற்ற படம் ஆகும்.

ஏவி. எம்மின் வெற்றி.

ஏவி. எம்மின் படங்களுக்குக் கிடைக்கும் வெற்றியைப் பற்றியது அல்ல இச் செய்தி. அவர் மீது-அவர் படத்தைத் தடை செய்யும்படி-தொடரப்பட்ட ஒரு வழக்கில் அவருக்குக் கிட்டிய வெற்றி பற்றியது இது. லைப் அண்டு ஆர்ட்ஸ் என்ற படக் கம்பெனியின் முதலாளி ஜோகின்தர்சிங் கே. பூரி என்பவர், தாம் ஏற்கெனவே அந்தப் பெயரை பதிவு செய்து கொண்டிருப்பதால், **பாபி** என்ற பெயருடன் ஏவி.எம். படத்தை வெளியிடுவதைத் தடை செய்யும்படி ஒரு மனுக் கொடுத்திருந்தார். இரு தரப்பாருக்கும் அது விஷயமாக நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துகளை பெட்ரேஷன் தலையிட்டு செய்துவைத்த சமரசம் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்த பம்பாய் ஸிடி ஸிவில் கோர்ட் நீதிபதி மேற்படி மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பு அளித்து விட்டார்.

தற்கால நாடகங்கள்

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்

நாடகங்கள் த்ருச்ய (பார்க்கப்படும்) காவ்யங்கள் என்ற வகையைச் சேர்ந்தவை. கருத்துக்களைப் புத்தகங்களில் விளக்குவதைவிட நாடகங்களாக நடித்துக் காட்டினால் பார்ப்பவர்கள் மனத்தில் இன்னும் நன்றாகப் பதிகின்றன.

ஒவ்வொரு நாடகத்திலும் நவரஸங்களும் பல்வேறு அளவுகளில் கலந்திருக்கும். ஆனால் ஒவ்வொரு நாடகத்திலும் ஒவ்வொரு ரஸமே பிரதானமாக இருக்கும். "மஹா வீர சரித்திர" த்திலும் "வேணி ஸம்ஹார" த்திலும் வீர ரஸம் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. இந்த 9 ரஸங்களில் கடைசியாக உள்ளதும், உன்னதமாக விளங்குவதும் சாந்த ரஸமாகும். மற்ற ரஸங்கள் மனத்தில் பரபரப்பும் விகாரமும் ஏற்படுத்தக் கூடியவை. மனத்தின் அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் அவை உதவி புரிவதில்லை. ஆனால் சாந்த ரஸம் மனதிற்கு அமைதி ஊட்டுகிறது. "சாந்தமு லேக ஸௌக்யமு லேது" என்று தியாகராஜர் பாடியிருப்பதுபோல் மனதிற்குச் சாந்தமில்லையானால் சந்தோஷம் இல்லை. இதனால்தான் சாந்தம், மற்ற ரஸங்களைப் போல் பரபரப்பூட்டும் தன்மையதாக இல்லாத போதிலும், இது ஒரு ரஸமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிருங்காரம் (காதல்), வீரம், சோகம், பீபத்ஸம் (அருவெறுப்பு) ரௌத்ரம் (கோபம்) பயானகம் (பயம்), ஹாஸ்யம் முதலிய ரஸங்களைச் சித்திரிக்கும் நாடகங்கள் பல இருக்கின்றன. ஆனால் சாந்த ரஸத்தைப் பிரதானமாகக் கொண்ட நாடகங்கள் அதிகம் இல்லை. தற்கால நாடகங்களுக்கு இது அதிகம் பொருந்தும். தற்கால நாடகங்கள் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, அவற்றை சமனப்படுத்தாமலே விட்டுவிடுகின்றன. காமம் க்ரோதம் முதலிய உணர்ச்சிகளை இவை பயன்படுத்திக் கொண்டு மனிதத் தன்மையை இழிவுபடுத்தி விடுகின்றன. நவீன நாடகங்களில் ஒன்றாவது சாந்த ரஸத்தைப் பிரதானமாகக் கொள்ளவில்லை.

சாந்த ரஸத்தையே முக்கியமாகக் கொண்ட புராதன நாடகம் ஒன்று உள்ளது. அது "ப்ரபோதசந்திரோதய" நாடகம். இதை எழுதியவர் ஆயிரம் வருஷங்களுக்கு முன் ராஜபுதனத்தில் வாழ்ந்த கிருஷ்ணமிச்ரர். இது ஓர் உருவக நாடகம். மோக்ஷத்திற்கு ஞானமே வழி என்ற கருத்தை இது வற்புறுத்துகிறது. விவேகம், விஷ்ணு பக்தி சிரத்தை, கருணை, தர்மம், வைராக்கியம் அஞ்ஞானம், மோஹம், பாபம், அஸத்யம் முதலியவை இந்த நாடகத்தில் வரும் பாத்திரங்களாகும். ப்ரபோதஸாம்ராஜ்யத்திற்கு இந்த குணங்கள் போராடுகின்றன. இதில் அசாந்திக்கு (அமைதியின்மைக்கு) காரணமான சக்திகள் அழிந்து, ஞானத்தினால் பிறகும் சாந்தி வெற்றி பெறுகிறது. இதே போல் பக்தியின் வெற்றியைச் சித்திரித்து "ஸங்கல்ப ஸூர்யோதயம்" என்ற நாடகத்தை வேதாந்த தேசிகன் இயற்றியிருக்கிறார்.

மேடையில் நடிக்கப்படும் நாடகங்கள் மனத்தைக் கெடுக்காமல், மன நிலையை உயர்த்துவதாக இருக்க வேண்டும். பார்ப்பவர்களின் மனத்தில் சாந்தி நிலவச் செய்ய வேண்டும்.

பழைய காலத்தில் பரத புத்திரர்கள் என்ற ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டுமே நாடகங்களில் நடிப்பது வழக்கம். பரத புத்திரர்கள் நடிக்கும் போதுகூடச் சில விதிகளை அனுஷ்டிக்க வேண்டும். பெண் வேஷம் தரித்த ஆணைப் பார்க்கக்கூடாது. எந்த ஆணும் எந்தப் பெண்ணுடனும், கணவன் மனைவியாக நடித்துவிடக் கூடாது. வாழ்க்கையில் உண்மையிலே கணவன் மனைவியாக வாழ்பவர்கள் தான் நாடகத்திலும் கணவன், மனைவி பாகங்கள் ஏற்று நடிக்கலாம். துரதிருஷ்டவசமாக இக் காலத்தில் இந்த விதிகள் அனுஷ்டிக்கப்படுவதில்லை. இதனால் தனிபட்டவர்களின் வாழ்வில் ஒழுக்கம் கெட்டுவிடுகிறது.

[காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் நிகழ்த்திய ஒரு உபந்யாசத்தின் சாராம்ஸம்.]

வாழ்க்கை (வி)சித்திரம்!
அமைப்பு: குண்டூசிக் குழு
சித்திரம் முத்து
சிறுமி அங்கமுத்து பள்ளிக்குச் சென்று திரும்பி வந்தாள். ஒரு நாள்...
ஏன் கண்ணு பள்ளியில் என்ன நடந்தது?
பாடத்தைத் தெலுங்கிலே நடத்துகிறார்கள். புரியவில்லை அம்மா! சம்பளம் கொண்டு வராதவர்கள் வீட்டுக்குப் போகலாம் என்கிறார் வாத்தியார். வந்துவிட்டேன் அம்மா!
வறுமையினால் வாடியிருந்த அவள் அன்னை, மகளை இழுத்து அணைத்துக் கொண்டாள்.
அன்றுடன் அங்கமுத்துவுக்குப் படிப்பு நின்றது. ஷண்முகம் செட்டியார் என்ற நடிகரின் யோசனைப்படி வேலு நாயர் நாடகக் கம்பெனியில் சேர்க்கப்பட்டாள்.

சதாரம் நாடகத்தில், கள்ளபார்ட் வேட மேற்று சிறுமி அங்கமுத்து சிறப்பாக நடித்தாள்.
பிறகு அங்கமுத்து ஸ்பெஷல் நாடகங்களில் சேர்ந்து - கிருஷ்ண வேடம்போட்டாள்.
குறத்தியாக வந்தாள்.
அங்கமுத்துவுக்த வயது, 16. கிட்டப்பா, சுந்தராம்பாள், டி.பி.ராஜலட்சுமி முதலியவர்களுடன் எப்பவும் சேர்ந்து பல நாடகங்களில் நடித்தாள்.
1933 ம் ஆண்டு ஓர் இரவு அங்கமுத்து சென்னையில் நாடகம் ஒன்றில் நடித்துவிட்டு வெளியே வந்த போது, ஓர் அழைப்புக் கிடைத்தது.
அதன்படி 'நந்தனார் என்ற தமிழ்ப்படத்தில் நடிக்கக் கல்கத்தாவுக்த ரயிலேறினள்.

பிறகு பல படங்கள். சிறந்த சிரிப்பு நடிகை என்று புகழ் பெற்றாள்.
மிஸ் சுந்தரி என்ற படத்திற்கு சைகிள் விடப் பழகிய போது கீழே விழுந்து கைகள் பிசகிக் கொண்டன.
கைகள் குணமாகக் கிருஷ்ணனைப் பூசித்து வந்தாள் சிறிது தனம், கிருஷ்ணனே இவளது அபிமானக் கடவுளானார்!
இது வரையில் 80-படங்களில் நடித்துவிட்டார் அங்கமுத்து!
அதிகப்படங்களில் நடித்த முதல் தமிழ் நடிகை என்ற பெருமையோடு இவருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.
இவர் எங்கு போனாலும், தன் புகழையும் உருட்டிக்கொண்டு சொந்த ஒற்றை மாட்டு வண்டியில் தான் போவார்!

நேயர் விமர்சனம்

(நேயர்கள் அனுப்பும் பட விமர்சனங்களிலிருந்து முக்கியமான பகுதிகள் வெளியிடப்படுகின்றன.)

உத்தம புத்திரன்

சிவாஜி கணேசனும் ஹெலனும் ஆடும் ஆட்டத்தைப் பார்க்க கண்கள் கூசுகின்றன. ஸென்ஸார் போர்டு அங்கத்தினர்கள் கண்களை மூடிக்கொண்டு அனுமதித்து விட்டனர் போலும்!

எஸ். ராமமூர்த்தி,
8. பிள்ளையார் கோயில் வீதி,
சென்னை-5.

நான் பழைய உத்தமபுத்திரன் பார்த்தவன். என் அபிப்பிராயம் புதியதை விடப் பழையதே மேல் என்பதுதான்.

க. வேணுகோபால்,
கடைத் தெரு,
வந்தவாசி.

சிவாஜி இரண்டு வேஷங்களில் எதைச் சிறப்பாக நடித்திருக்கிறார் என்று கூறுவது கடினம். காரணம், ஒன்றுக்கொன்று சோடையில்லை.

கண்ணபிரான்,
9, ஒத்தத் தெரு,
லால்குடி.

தங்கவேலுவின் நடிப்பு அமுங்கிப் போய் விட்டது. சிவாஜியின் நடிப்பு பிரமாதம்.!

எஸ். லலிதாதேவி,
கடை வீதி, காவேரிப்பட்டிணம்.

பாட்டுகள் ஒன்றுகூட மனதில் பதிவதாக இல்லை. பழைய கதைக்கு புதிய திருப்பம் கொடுத்திருக்கிறார் ஸ்ரீதர்.

ஏ. கே. சிவராவ்,
மெயின் ரோடு,
மாந்துறை.

பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகள்! திறமையான ஒளிப்பதிவு! சிவாஜியின் இரட்டை வேடங்களில் சிறப்பான நடிப்பு - இவைகளுக்காக வேணும் பார்க்கத் தகுந்த படம்.

பி. பத்மநாபன்,
4, அக்ரஹாரம் தெரு,
கவரப்பட்டு.

"தசரத ராஜகுமார" என்று அலறிடும் பரதன் சிவாஜி கணேசன்—"ராமாயண"த்தில்.

இப் படக் கதை கத்திச் சண்டைக் காலக் கதை தான்! ஆனல் பாட்டு ஒன்றில் 'தோட்டா' என்ற பதம் அடிபடுகிறது! ஒரு வேளை ஆங்கிலக் கதையின் தழுவல் என்பதனல் நம் கத்திச்சண்டை காலத்தில் இருந்த போது அவர்

கள் துப்பாக்கி கண்டு பிடித்து விட்டதை இப்படி மறைமுகமாக உணர்த்துகிருர்களோ ?

கே. ரகுபதி,
62, மேலக்கடலங்குடித் தெரு,
கும்பகோணம்.

வீனஸ் பிக்சர்ஸாரின் இந்தத் தயாரிப்பு சிறந்த வெற்றிப் படம். சிவாஜியின் இரட்டை வேட நடிப்பு இப்பொழுதுதான்

சிவாஜி கணேசனிடம் "அட்டென்ஷன் ப்ளீஸ்" என்று யாரோ சொல்லியிருக்க வேண்டும்! —பொம்மைக் கல்யாணத்தில்,

---

காணமுடிகிறது. சிவாஜியின் ஒரிஜினல் நடிப்பைவிட குடிகாரனை நடிக்கும் நடிப்புத்தான் பிரமாதமாக இருக்கிறது. மைசூர் பிருந்தாவனக் காட்சிகள் நன்ருக உள்ளன. ஆனல் கலரில் இல்லாதது குறையாக உள்ளது. சிவாஜியின் நடிப்புக்காக இந்தப் படத்தை இரண்டு தடவை கூட கண்டு களிக்கலாம்.

பி. சுப்பராயலு,
64, கச்சேரி தெரு,
திண்டுக்கல்.



நல்ல இடத்து சம்மந்தம்

மின்னல் வேகத் தயாரிப்பின் பலன் படத்தில் குறைகள் மலிந்து கிடக்கின்றன.

பார்வதி ராமன்,
8, லாயிட்ஸ் லேன்,
சென்னை-6

கதையின் போக்கும் எம். ஆர். ராதாவின் நடிப்பும் **ரத்தக் கண்ணீர்** படத்தைத்தான் நினைவு படுத்துகின்றன.

எஸ். ராம்குமார்,
57, குப்புமுத்து தெரு, சென்னை-5

எம். ஆர். ராதாவும், வி. கே. ராமசாமியும் ஏன்தான் இப்படிக் காட்

டுக் கத்தலாகக் கத்துகிறார்களோ? அடித் தொண்டையிலிருந்து பேசுவதுதான் நடிப்பு என்று அவர்கள் நினைக்கிறார்களோ?

ஜி. கார்த்திகேயன்,
68, பிள்ளையார் கோயில் வீதி,
சென்னை-5

குண்டு அடிபட்டு விழும் முத்து தன் தவறுகளை எண்ணிக் கதறுகிறான்—அந்தக் கட்டத்தில் பச்சாத்தாபம் ஏற்படுவதற்கு பதில் நகைப்புத்தான் வருகிறது.

கே. ராமன்,
பெரிய தெரு,
காஞ்சீபுரம்.

எம். ஆர். ராதாவுக்குக் கிடைத்திருக்கும் பாத்திரம், அவரது நடிப்பு, பேசும் தோரணை அனைத்துமே **ரத்தக் கண்ணீரின்** 'கார்பன் காப்பி'தான்.

முத்துகிருஷ்ணன்
கொல்லத்துக்காரர் வீதி, வாலாடி.

'சௌகார் ஜானகி' யின் நடிப்பு நன்றாக இருக்கிறது. பிரேம்நஸீரின் தமிழ் உச்சரிப்பிலும் முன்னேற்றம் காணப்படுகிறது.

ஜி. பி. நடனம்,
71, பட்டமங்கலம் தெரு,
மாயூரம்.

மணமாலை

சந்திரபாபு, தங்கவேலு கோஷ்டியாரின் ஹாஸ்யம் ஒன்றுதான் படத்தில் ரஸிக்கும்படியாக இருக்கிறது.

என். விஸ்வநாதன்,
வெங்கடேசா லாட்ஜ்,
திருச்சி.

ஏற்கெனவே இந்திப் படமாக வெளிவந்த **பரினீதா** படத்தின் ஒவ்வொரு காட்சியையும் அப்படியே காப்பி அடித்திருக்கிறார்கள்.

க. அண்ணாமலை,
ஈஸ்வரதாஸ் லாலா தெரு,
சென்னை-5

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

தந்தி: நஸ்யம்
மதராஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி
& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி
அரக்கோணம் & மதராஸ்

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

பத்மினி–வைஜயந்திமாலா

அகில இந்திய நட்சத்திரங்கள் இருவரும் சேர்ந்து முதல் தடவையாக ஒரே படத்தில் நடித்து நடனமாடுகிறார்கள். இவர்களது இந்த நடனம் படத்தில் ஒரு முக்கிய அம்சமாகவும் பார்ப்பவர்கள் பிரமிக்கும்படியாகவும் இருக்கப் போகிறது. ஜெமினியின் "வஞ்சிக் கோட்டை வாலிபன்."

"ஸான்டாலின் மணம் எப்படி"
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER

ஐரோப்பாவில் பரதக்கலை

"நான் பெருமைப் படுகிறேன்."— இதை நான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டாலும் எனக்கு அலுப்பே தட்டுவது இல்லை. காரணம், எனக்குக் கிடைத்திருப்பது சாதாரணப் பெருமையா? பிறர் கண்டு பொருமக்கூடிய பெருமை அல்லவா அது!

கலைகளின் சிகரமான பரத நாட்டியக் கலையின் மதிப்பினை ஐரோப்பாவிலே, அங்குள்ளோர் உணரும்படி செய்த பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கலாதேவிக்கு நான் சேவை செய்ய பாக்கியம் பெற்றேன் என்றால் அதை எண்ணி எண்ணி நான் பெருமைப் பட்டுக் கொள்வதில் தவறு? அது மட்டும் தானா!

நான்கே வாரங்களில் நாலாயிரம் ரூபாய் செலவு. எண்ணிப் பார்க்கவே தயக்கமாகத்தான் இருக்கிறது. அவ்வளவு பெரிய தொகையையும் பொருட் படுத்தாமல், கலைக்குச் சேவை செய்ய என்னை என் தந்தை அனுப்பி வைத்தார். அப்படிப்பட்ட ஒரு தந்தையை நான் அடைந்திருப்பதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் பெருமைப் பட்டுக் கொள்ளலாமே!

குமாரி சாருபாலா

நம் நாட்டு நடனத்திற்கு அங்கு எத்தகைய வரவேற்பு இருக்குமோ என்ற ஐயம் எனக்கு உள்ளூர உண்டு. ஏற்கெனவே கடும் குளிரினால் உடல் வெடவெட என நடுங்கிக் கொண்டிருந்தது. அத்துடன் 'முதன் முதல் மேனாட்டார் முன்னிலையில் ஆடப் போகிறோம்' என்ற எண்ணத்தினால் ஏற்பட்ட படபடப்பும் சேர்ந்துகொண்டது.

ஆனால், எனது முதல் கச்சேரியிலேயே, எனது நடுக்கம் நின்று விட்டது. ஆம், அங்கு கிடைத்த அமோக ஆதரவும், மக்களின் ஆர்வமும் எனது பயம் எவ்வளவு அவசியமற்றது என்பதை வெளிப்படுத்தி விட்டன.

எனது மின்னல் வேக சுற்றுப் பிரயாணத்தில் இத்தாலி,

ரோமாபுரி நகரில் நடனம் ஆடிய குமாரி சாருடாலாவுக்கு 'ஜென்ரல் மதர்'
—பாராட்டிப் பரிசு வழங்குகிறார்.

ஸ்விட்ஸர்லாந்து, ஜர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகளுக்கும் நான் சென்றிருந்தேன். ஒவ்வொரு நாட்டிலும் என்னுடைய நாட்டியக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இத்தாலி தேசத்தில் மட்டும் இரண்டு கச்சேரிகளும், மற்ற தேசங்களில் ஒவ்வொரு கச்சேரியும் நடந்தன.

ஐரோப்பாவில் எனது முதல் கச்சேரி இத்தாலியின் தலைநகரான ரோமபுரியில் நடந்தது. ரோமாபுரியில் நடைபெற்ற என் நடனத்திற்கு போப்பாண்டவர் பியஸ் வந்திருந்தது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. 'மதர்' களுக்கெல்லாம் தலைவியான 'ஜென்ரல் மதர்' என்னுடைய நடனத்தைப் பார்த்து வெகுவாக ரஸித்து எனக்கு ஆசி கூறி பரிசும் வழங்கினார்கள். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட பூரிப்பை எழுதி முடியாது.

அடுத்தபடி நான் நடனம் ஆடியது ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ப்ரிபர்க் என்ற நகரத்தில். அவர்களுக்கு உள்ள ஆர்வத்தில் இங்கு எனது நடனத்திற்கெனவே பிரத்யேகமாக ஒரு தியேட்டரையே நிர்மாணித்திருந்தார்கள். நான் அன்று அங்கு ஆடிய நடனங்களை எல்லாம் எங்கள் கோஷ்டித் தலைவியின் அனுமதி பெற்று 35 மில்லி மீட்டர் காமிராவில் ஒருவர் படம் பிடித்துக் கொண்டார்.

ஜெர்மனி தேசத்தில் ம்யூனிச் நகரத்தில் நடைபெற்றது எனது நான்காவது நடனக் கச்சேரி. ம்யூனிச் சர்வ கலாசாலையினரே முன் வந்து இந்த நடனத்தை ஏற்பாடு செய்தது இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விஷயம். சர்வ கலாசாலையைச் சேர்ந்த ஒரு பொறுப்பான நபரிடம் நான் ஆடப்போகும் அயிட்டங்களின் கருத்தை ஆங்கிலத்தில் விளக்கினேன். அவர் நடனம் பார்க்க வந்திருந்தவர்களுக்கு அதை ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்த்து எடுத்துச் சொன்னார். ஜெர்மன் பத்திரிகைகள் பலவும் என்னுடைய நடனத்தைப்பற்றி வெகுவாக பாராட்டி எழுதினதாகவும் அறிந்து மகிழ்வுற்றேன்.

ஆடும் நட்சத்திரக் கூந்தல் அழகி, அவள் விரும்புவது ...!.

ஹேரோடின்

நீங்களும் பிரதி தினமும் 'ஹேரோடின்' உபயோகித்துக் கூந்தல் அழகைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், 'ஹேரோடின்' மூளைக்கு குளிர்ச்சி அளித்து, கூந்தல் கொட்டுதல், பொடுகு, பீநசம், தலைவலி, கண் எரிச்சல், சயித்தியம் இவைகளைப் போக்கி, பட்டு போன்ற கருமையான கேசத்தை வளரச் செய்கிறது.

'ஹேரோடின்' அகஸ்திய முறைப் படி தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத கூந்தல் தைலம். அகால நரை, வழுக்கை இவைகளைத் தடுத்து ஞாபக சக்தியை அதிகரித்து, ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது.

தயாரிப்பு: கர்னாடிக் கெமிகல்ஸ், சென்னை-6.

சென்னை, T. U. C. S. எல்லா பிராஞ்சுகளிலும், மற்றும் எல்லா முக்கிய ஷாப்புகளிலும் இப்பொழுது விற்பனையாகிறது.

லண்டன் மாநகரில் கான்வென்ட் ஹாஸ்டல் மாணவிகள் எங்களுக்கு ஒரு விருந்து அளித்து உபசரித்தார்கள். விருந்துக்குப் பின் அவர்களுக்கு நான் நடன விருந்து அளித்தேன்.

லண்டன் மாநகரில் எனக்குக் கிடைத்த அந்த சந்தர்ப்பத்தை என்னல் என்றுமே மறக்கமுடியாது. ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்களை நான் சந்தித்துப் பேசியதையே குறிப்பிடுகிறேன். அவர்கள் என்னுடன் அரை மணி நேரம் அன்பாகப் பேசினர்கள். நடனக்கலையைப் பற்றியும் அதை நான் கற்றுக்கொண்ட விதத்தைப் பற்றியும் விபரம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

அலாரிப்பு, ஜதிஸ்வரம், மற்றும் பத்துபதங்களை நான் இங்கேயே டேப் ரிகார்ட் செய்து எடுத்துக் கொண்டு போயிருந்தேன். இந்திய சங்கீதத்தை ஐரோப்பியர் கேட்கும்படி செய்ய அது தான் சிறந்த சாதனமாகப் பட்டது. வேறு வழி! அவைகளைப் போட்டு நான் ஆடினேன். நான் ஆடிய நடனங்களின் ஒவ்வொரு அயிட்டத்தையும் பற்றி என் தந்தை ஆங்கிலத்தில் விரிவான விளக்கம் 'டைப்' செய்து கொடுத்திருந்தார். எங்களுடன் கூடவந்திருந்த "மதர்" ஒவ்வொரு அயிட்டத்தையும் பற்றி நான் ஆடுவதற்கு முன்னர் அதன் கருத்து, தன்மை ஆகிய விபரங்களை எல்லோருக்கும் விளக்கி வந்தார்.

நான் பரதநாட்யம் ஓரியண்டல் ஆக இரு நடனங்களும் கலந்து ஆடினேன். இருந்தாலும் அங்கெல்லாம் மக்கள் பரத நாட்டியத்தையே வெகுவாக ரஸித்தார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பரதக் கலையின் சிறப்பைக் கண்டு அவர்கள் பிரமித்துப் போனர்கள். மற்றொரு விஷயம். நான் ஆடிய ஆட்டங்களைப் பார்க்கக் கூடிய மக்களில் பெரும் பகுதியினர் பெண்களே.

நான் குஞ்சம் வைத்துப் பின்னி ஜடை போட்டிருந்தது அவர்களுக்கெல்லாம் அதிசயமாக இருந்தது. அவர்களில் சிலர் எனது ஆடை அணிகளைத் தங்களுக்கு அணிவிக்கச் செய்து சந்தோஷம் அடைந்தனர்.

எனது நடனம் அங்கெல்லாம் நடைபெற ஏற்பாடு செய்த என் கல்லூரி 'மதர்'களை நான் எப்படி மறக்கமுடியாதோ அதேபோல ஜூபிடர் பிக்சர்ஸ் அதிபர் ஸ்ரீ சோமசுந்தரத்தின் மனைவியாரையும் நான் மறக்கவே முடியாது. எங்கள் மாணவி கோஷ்டியுடன் கூட வந்த அவரும், என் சக மாணவிகளும் சோமசுந்தரத்தின் புத்திரிகளுமான குமாரி சுலோசன குமாரி சரோஜா ஆகியோரும் எனக்குச் செய்த உதவிகளை நான் மறுக்கவோ, மறக்கவோ இயலாது. மேக்கப் செய்து கொள்ளவும், ஆடை அணிகள் அணிந்து கொள்வதற்கும் அவர்கள் எனக்குப் பெரும் உதவி செய்தார்கள்.

நான் கற்ற கலையின் பயனை இந்தப் பிரயாணத்தின் மூலம் அடைந்தேன் என்ற பெருமைதான் என் நெஞ்சிலே இப்போது நிறைந்திருக்கிறது.

ஓவியர் முத்து அளிக்கும்

புது முறை ஆட்டோகிராப்

அரசியல் துறையினர், தி. மு. க. தலைவர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும். 64. நடிகர்-நடிகைகளின் உருவப்படங்கள் போட்டோ ஆப்செட்டில் அச்சிடப்பட்டது.

விலை : ரூ. ஒன்று.

சென்னை விற்பனை உரிமை:- சதர்ன் நியூஸ் கம்பெனி, சென்னை-2.

நாடெங்கும் விற்பனையாளர்கள் தேவை

விற்பனைக் கமிஷன் 20% V. P. P. கிடையாது.

விவரங்களுக்கு:-

ரெயின்போ கன்சர்ன்ஸ், 39, வடக்கு மாடவீதி, சென்னை—4.

கிரஹப்பிரவேச வைபவத்திற்கு விருந்தினர்களை வரவேற்பது போல் நிற்கும் சாவித்திரியும்-ஜெமினி கணேசனும்—"பதி பக்தி"யில்.

வளரும் படங்கள்

ஜயந்தி பிக்சர்ஸின் பெயர் சூட்டப்படாத அவர்களது முதல் தயாரிப்பு விஜயா ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்து வருகிறது. தமிழ்—தெலுங்கு ஆக இரு மொழிகளிலும் இது படமாகி வருகிறது. தமிழ்ப் படத்தின் வசனங்களையும் பாட்டுகளையும் தஞ்சை ராமய்யா தாஸ் எழுதியிருக்கிறார். ஜமுனா படத்தின் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார். நாகேஸ்வர ராவ், ரங்கா ராவ், கே. சாரங்க பாணி, ஆர். பால சுப்பிரமணியம், டி. பி. முத்துலட்சுமி, கருணாநிதி, மாதவன், சாயிராம் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். படத்தின் சங்கீத டைரெக்ஷனை பின்னணிப் பாடகர் கண்டசாலாவும், டைரெக்ஷனை கே. வி. ரெட்டியும் கவனித்து வருகின்றனர்.

மாலையிட்ட மங்கை

பரணி ஸ்டுடியோவில் தயாராகிவரும் படங்களில் முழு மூச்சுடன் தயாராகும் படம் என்று மாலையிட்ட மங்கையைக் கூறலாம். கண்ணதாசன் பிலிம்ஸின் தயாரிப்பாகும் இது. எஸ். அய்யாப் பிள்ளை, மா. லட்சுமணன், தமிழ்ப் பித்தன் மூவரும் சேர்ந்து, வெவ்வேறு விதமான குணாதிசயம் பெற்ற நான்கு சகோதரர்களைப் பற்றிய குடும்ப மணம் கமழும் திரைக் கதையை அமைத்திருக்கிறார்கள். வசனத்தையும் பாட்டுகளையும் கண்ணதாசன் எழுதியிருக்கிறார். இப் படத்தின் டைரெக்ஷனையும் ஒளிப்பதிவையும் நாதன் கவனிக்கிறார். நீண்ட நாட்களுக்குப் பின் டி. ஆர். மஹாலிங்கம் இப் படத்தில் கதா நாயகனாக நடிக்கிறார். மற்றும் பண்டரிபாய், எம். என். ராஜம், கே. நடராஜன், ஆள்வார் குப்புசாமி ஆகியவர்களுடன் காகா ராதாகிருஷ்ணனும் அவருக்கு ஜோடியாக புது முகம் மனோரமாவும் ஹாஸ்ய பாகங்களில் நடித்து வருகின்றனர். சங்கீத டைரெக்ஷன் விசுவநாதன் — ராமமூர்த்தி ஜோடியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜங்கா பில்ம்ஸார் தான் இந்தப் படத்தின் பூரண உரிமையாளர்கள்.



"புது முகங்களுக்கு நல்ல காலம் வந்து விட்டது பார்த்தீங்களா?" என்று அதிசயிக்கிறாரோ ஈ. வி. சரோஜா பாலாஜியிடம் — "சுமங்கலி"யில்.

மாதரசி

சாவித்திரி, நாகேஸ்வரராவ் காதல் ஜோடியாக நடித்து வரும்

படங்களில் ஒன்ருகும் மாதரசி. இது நியூ ஏஞ்சல் பிலிம்ஸ் வி. பி. டி. புரொடக்ஷன்ஸ் கூட்டுத் தயாரிப்பாகும். மற்றும் மைனுவதி, தங்கவேலு, நாகய்யா, முஸ்தாபா. கே. சாரங்கபாணி, ஈ. வி. சரோஜா, ஏழுமலை ஆகியோரும் படத்தின் நடிகர் ஜாபிதாவில் இருக்கிருர்கள். வாஹினியில் தயாராகும் இப்படத்தை வேதாந்தம் ராகவய்யா டைரெக்ட் செய்து வருகிருர்.

பாண்டி தேவன்

பல வருஷங்களுக்குப் பின்னர் மீண்டும் கே. சுப்பிரமணியம் டைரெக்ட் செய்யும் முதல் படமாகும் பாண்டி தேவன். பெரும்பாலும் வெளிப் புறக் காட்சிகளேயே அதிகம் கொண்ட இப் படத்தின் உட்புறக் காட்சிகள் நியூடோன் ஸ்டுடியோவில் படமாகி வருகின்றன. இப்படத்தின் திரைக் கதையை கே. சுப்பிரமணியமே எழுதியிருக்கிருர். வசனங்களை முகவை ராஜமாணிக்கம் எழுதியுள்ளார். சங்கீத டைரெக்ஷனை பாண்டுவும் — மீனுக்ஷி சுப்ரமண்யமும் கூட்டாக கவனித்து வருகின்றனர். பி. எஸ். சரோஜா, ராகினி, என். எஸ். கே. மதுரம், டி. பி. முத்துலட்சுமி, பி. எஸ். ஞானம், டி. கே. பாலச்சந்திரன், அசோகன், சந்திரபாபு, எம். ஜி. சக்ரபாணி, எஸ். வி. ஸஹஸ்ரநாமம் ஆகியோர் இப்படத்தில் நடித்து வருகின்றனர்.

அல்லி பெற்ற பிள்ளை

"டோங்காவாலி" என்ற இந்திப் படத்தின் கதையைத் தழுவி ஏ. பி. நாகராஜனல் எழுதப் பட்டுள்

நாடக மேடையில் பல்லாண்டு அனுபவம் பெற்ற டி. பொன்னுசாமி தற்போது 'சபாஷ் மீனா', 'திருடாதே', 'தெய்வமே துணை', 'சாரங்கதரா' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

ளது அல்லி பெற்ற பிள்ளையின் திரைக் கதை, வசனத்தையும் அவரே எழுதியிருக்கிறார். படத்தின் பாட்டுகள் அனைத்தையும் மருதகாசி எழுதியிருக்கிறார். இப்படத்தின் டைரெக்ஷனை கே. சோமுவும், சங்கீத டைரெக்ஷனை கே. வி. மகாதேவனும் செய்து வருகின்றனர். பண்டரிபாய், எம். என். ராஜம், டி. பி. முத்துலட்சுமி, எஸ். எஸ். ராஜேந்திரன், சகஸ்ரநாமம், வி. கே. ராமசாமி, கே. சாரங்கபாணி பி. டி. சம்பந்தம், ஏழுமலை, சாயிராம் ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர்.

சுமங்கலி

சீக்கிரமே திரைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு தயாரிப்பாளர் வி. தாண்டவம் தம் ராஜேஸ்வரி பிலிம்ஸின் சுமங்கலியை வாஹினி — நர்ஸு ஆகிய இரு ஸ்டுடியோக்களிலுமே படமாக்கி வருகிறார். வடுவூர் துரைசாமி அய்யங்காரின் நாவல் ஒன்றைத் தழுவி திரைக் கதையை அமைத்து வசனங்களையும் எழுதியிருக்கிறார் நடராஜன். ஈ. வி. சரோஜாவும் பாலாஜியும் இப்படத்தில் காதல் ஜோடியாக நடிக்கின்றனர். இவர்கள் தவிர, இ. ஆர். சகாதேவன், ஸி. எஸ் பாண்டியன், ஆதித்தன் ஹேமலதா, கண்ணன், மோஹனா, டி. கே. புஷ்பவல்லி ஆகப் பலர் நடித்து வருகின்றனர். படத்தை எம். கே. ஆர். நம்பியார் டைரெக்ட் செய்து வருகிறார்.

கடன் வாங்கி கல்யாணம்

போலிச் சாமியாராக தங்கவேலு வந்து "கடன் வாங்கி கல்யாண"த்தில் 'அலக்நிரஞ்சன்' கோஷம் போடுகிறார். நாடகக் கம்பெனிக்காரராக 'புல் - சூட்'டிலும் வந்து இறுதியில் அக்கா மகள் சரோஜாவைத் தட்டிக்கொண்டுபோகிறார்.

ஜெமினி கணேசன் சிறை சென்ற தேசபக்தராகவும், மகாராஜாவாகவும், சந்நியாசியாகவும் நடிக்கிறார். மஞ்சுளா (சாவித்திரி)வின் தாத்தாவாக பிரபல குணசித்திர நடிகர் ரங்கராவ் வருகிறார். இதில் ஜமுனா ஊமையாக நடிக்கிறார். இவர் இப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரனுக்கு ஜோடி. துரைசாணியாக ஏ. கருணாநிதி டான்ஸ் ஆடி, எல்லோரையும் குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கப் போகிறார். 'கடன் வாங்குவது எப்படி?' என்ற கலையை போதிக்கிறார் திவான்பகதூர் தர்மலிங்கமாக வரும் பாலையா! இவர்கள் தவிர, கே. சாரங்கபாணி, முத்துலட்சுமி, ஏழுமலை, வாதிராஜ் முதலியோரும் தோன்றும் இந்த முழு நீள ஹாஸ்யப் படம் நாகிரெட்டி—சக்கரபாணியால் தயாரிக்கப்பட்டு விஜயாவின் வெளியீடாக மே மாதக் கடைசியில் வெளிவரவிருக்கிறது. வாஹினியில் படத்தை பிரசாத் டைரெக்ட் செய்து வருகிறார்

குணம் கெட்ட மனிதன் தான்; அவனை உற்றார் வெறுக்கலாம், ஊரார் தூற்றலாம். ஆனால் அவனையே கணவனாகப் பெற்ற காரிகையால் அப்படியிருந்துவிட முடியுமா? தன் விதியை நொந்து கொண்டு, தனக்கும் நற்காலம் பிறக்கும் என்ற ஒரே நம்பிக்கையில் உயிர் வாழ்கிறாள் அந்தக் காரிகை.

வீட்டிற்கு வந்த கணவனை இன்முகத்துடன் வரவேற்று "நாதா! நான் பாடட்டுமா?" என்று கேட்கிறாள். இல்லை, கெஞ்சுகிறாள். "நீயாவது பாடவாவது" என்று கேலி செய்கிறான். "பாடேன் பார்ப்போம்" என்றும் குத்தலாகச் சொல்லி நகைக்க அவன்.

கண்களில் நீர் வடிய, "பாடாத குயிலானேன்" என்று பாட ஆரம்பிக்கிறாள் அவன் மனைவி.

"சீ ... நீ பாடினால் அதில்கூட சோகம்தானா" என்று அலுத்துக் கொள்கிறான் கணவன். கண்களைத் துடைத்துக் கொண்டு, "ஆடிடவா நான் பாடிடவா" என்று சந்தோஷமான ஒரு கீதத்தைப் பாடுகிறாள் அவள்.

கணவன் தன் கானத்தைக் கேட்டானே என்ற மகிழ்ச்சியிலே அப்படியே தூங்கியும் விடுகிறாள் மனைவி. அவள் தூங்கவேண்டும் என்பதற்காகவே காத்திருந்த அவன், வீட்டிலுள்ள விலை உயர்ந்த பொருள்கள் அனைத்தையும் சூறையாடிக்கொண்டு, கைத் துப்பாக்கி



"ராஜமகுடத்தை" உருவாக்குவதில் முனைந்துள்ள வசன கர்த்தா பி. எஸ். ராமய்யாவுக்கும் டைரெக்டர் பி. என். ரெட்டிக்கும் மத்தியில் என். டி. ராம ராவ்.

யையும் எடுத்துக் கொண்டு ஓடி விடுகிறான். கண் விழித்துப் பார்க்கும் மனைவி காலியாக உள்ள கட்டிலைக் கண்டு ஏமாந்து கதறுகிறாள்.

நினைத்துப் பார்த்தாலே உள்ளத்தைத் தொடவில்லை இந்தக் காட்சிகள்? அந்தக் காட்சிகளில் மனைவியாக அஞ்சலியும், குணங்கெட்ட கணவனைக ஜெமினி கணேசனும் நடிப்பதை **"இல்லறமே நல்லறம்"** என்ற படத்தில் பார்க்கும் ரஸிகர்கள் மனம் என்ன பாடு படப் போகிறதோ!

புல்லையா டைரெக்ஷனில், கே. வி. ஸ்ரீனிவாசன் பயிற்சி அளிக்க மேற்படி காட்சிகள் விஜயா ஸ்டுடியோவில் நாராயணன் கம்பெனியின் படத்திற்கென ஒலிப் பதிவாளர் கமால் கோஷால் படமாக்கப்பட்டன.

'மலையாளத்துக் காரர்கள் மாந்திரீகத்தில் கெட்டிக்காரர்கள்' என்று நான் கேள்விப் பட்டது உண்டு. அன்று ராகினியின் செய்கையைக் கண்டபோது அது உண்மையாகக் கூட இருக்கலாம் என்றே எனக்குப் பட்டது.

அது மந்திரமோ தந்திரமோ தெரியாது. டைரெக்டர் டி. ஆர். ரகுநாத்திடமிருந்து நெருப்புப் பெட்டியை வாங்கினார் ராகினி. அதிலிருந்து ஒரு குச்சியை எடுத்துப் பற்ற வைத்தார். அதை அப்படியே வாயில் போட்டுக் கொண்டு, சிகரெட்குடித்தவர்மாதிரி 'குப்' பென்று புகையை வெளியே ஊதினார். ஸெட்டில் இருந்தவர்கள் அனைவரும் பிரமித்துவிட்டோம்.

கிருஷ்ணா பிக்சர்ஸாரின் மின்னல் வேகத் தயாரிப்பான **"மாங்கல்ய பாக்கியம்"** படப் பிடிப்பின் இடையே நடந்த நிகழ்ச்சி இது. இந்த அதியச் செய்கையை அவர் இரண்டு தடவை செய்து காட்டி

ஒளிப்பதிவாளர் எஸ். எஸ். நாதன், டைரெக்டர் எம். கே. ஆர். நம்பியார், ஆர்ட் டைரெக்டர் ஞானுயுதம் மூவரும் "சுமங்கலி" வளர்ச்சி சம்மந்தமாக தீவிர சிந்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

விட்டார். இந்தப் படத்தில் அவருடன் கூட கதாநாயகனை நடிக்கும் பாலாஜி தமக்கு அந்த வித்தையைக் கற்றுக் கொடுக்கும் படி ராகினியை, எவ்வளவோ அன்று கேட்டுப் பார்த்தார். ஆனால் ராகினி பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

ரகுநாத்தின் மேற்பார்வையிலே கேமிரா மேதை எம். ஏ. ரஹ்மான் பல கோணங்களிலும் படமாக்கினர். "வண்ணத்தமிழ் மாதா மடியிலே வளர்ந்த" என்ற பாட்டிற்கு ஏற்ப நடன டைரெக்டர் சம்பத் குமார் தொகுத்த நடனம் ஒன்றை ராகினி ஆடினள், மேற்படி காட்சியில்

ஆர்ட் டைரெக்டர் கங்காவுக்கும் வி. கே. ராமசாமிக்கும் மத்தியில் நிற்கும் சிவாஜி கணேசன், டைரெக்டர் பந்துலு கிருஷ்ணசாமிக்குப் பயிற்சி அளிப்பதைப் பார்வை யிடுகிறார். கோடியிலிருப்பது ஒளிப்பதிவாளர் சுப்பா ராவ்.

"சார், நான் சீக்கிரமே ஒரு டைரெக்டராகப் போகிறேன்" என்று அவர் பேச்சோடு பேச்சாக என்னிடம் சொன்னர். தாம் ரகுநாத்திடம் டைரெக்ஷன் பயிற்சி பெற்று வருவதாகவும் சொன்னர்.

அன்று ஒரு பிரம்மாண்டமான ஸெட்டில் கனவுக் காட்சி ஒன்றை பாலாஜியும் கூட நடித்தார்.

ஜாவர் சீதாராமனுக்குத் தந்தி பறந்தது. கே. நடராஜனைத் தேடி கார் விரைந்தது. 'சித்ரா' கிருஷ்ணசாமி எங்கிருந்தாலும் தேடி அழைத்துவர ஆட்கள் ஓடினர்கள். இதெல்லாம் பத்மினி



பிக்சர்ஸ் பட ஸ்தாபனத்தில் ஒரு நாள் நடைபெற்ற சம்பவங்கள்.

பத்மினி பிக்சர்ஸ் ஸ்தாபனத்தார் அலசி அலசிப் பார்த்து, தாங்கள் தயாரித்து வரும் **கட்டபொம்மனில்** முறையே பானர்மென், மாக்ஸ் வெல், ஆலன் போன்ற கதா பாத்திரங்களுக்கு முன் குறிப்பிட்ட வர்களைத் தேர்ந் தெடுத்தார்கள். சரியான ஆட்களைத்தான் தேர்ந் தெடுத்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கட்டபொம்பன் சரித்திரத்திலே குள்ளநரித் தந்திரி மாக்ஸ்வெல் சர்க்கரையாகப் பேசி எட்டப்பனை காட்டிக் கொடுக்கும் துரோகியாக மாற்றி விடுகிறான். அதற்கு தூபம்

படத்தில் சேராத ஜோடி சிவாஜி - ஸ்ரீராம் "கட்டபொம்மன்" படப்பிடிப்பின் போது.

போடுகிறான் ஆலன். காரியத்தில் கண்ணா யிருக்கிறான் பானர்மென்.

கோல்டன் ஸ்டுடியோவில் ஒரு செட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த நானும் போட்ட கிராபரும் "வந்தது தொல்லை" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் முழங்குவது கேட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். பிறகு மெள்ள பார்வையை உள்ளே செலுத்தினோம்.

சிவாஜி கணேசன் பத்து (எக்ஸ்ட்ராக்களுக்கு) வீரர்களுக்கு முன்னால் நின்று, "நான் 'இல்லை' என்று சொன்னவுடன் நீங்கள் எல்லோரும் ஒரே சமயத்தில்

"கப்பல் வீரன்" படத்திற்குப் பாடவந்த ஜிக்கி —அவர் அருகே நிற்பது சங்கீத டைரெக்டர் கே. வி. மஹாதேவன், வசன கர்த்தா உதயகுமார்,

'வந்தது தொல்லை' என்று கூற வேண்டும்" என்று அவர்களுக்கு ஒத்திகை கொடுத்துக் கொண்டிருந்தார். அப்படிப் பல தடவைகள் ஒத்திகை பார்த்த பிறகுதான் அவருக்குத் திருப்தி ஏற்பட்டது.

கட்ட பொம்மனைச் சந்தித்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிய மேஜர் ஆலன் கூண்டில் அடைபட்ட

ஏ. கருணாநிதியும் ஸ்டில் போட்டோகிராபர் நாகராஜராவும் 'குண்டுசி'யை ஆவலுடன் புரட்டும்போது எம். இ. மாதவன் எட்டிப் பார்க்காமல் என்ன செய்வார்?

புலி போல குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக் கொண்டிருந்தான். அவன் நிழல் போல பின்னாலேயே நடந்த எட்டப்பன் (வி. கே. ராமசாமி) "நாட்டிய விருந்து கூட நடத்தினை? திருட்டுப் பயல் துரைக்கே தொப்பி போட்டிருக்கிறான். அது சரி, வரி கட்டினை... இல்லையா" என்று கேட்டான்.

குனிந்த தலையை நிமிராமலே "இல்லை" என்கிறான் ஆலன்.

உடனேதான் நான் முன்னால் வர்ணித்த பல குரல்கள் முழங்குகின்றன.



அங்கும் இங்கும் ஓடியாடி பி. ஆர். பந்துலு டைரெக்ட் செய்து வருகிறார். சௌகரியப் பட்ட போதெல்லாம் சிவாஜி கணேசனும் ஸெட்டுக்கு வந்து பந்துலுவுக்கு டைரக்ஷனில் உதவி செய்து வருகிறார்.

பத்மினி பிக்சர்ஸின **கட்ட பொம்மன்** படத்திற்கென மேற்படி காட்சிகள் கோல்டன் ஸ்டுடியோவில் ஒளிப்

"வாழப்பிறந்தவன்" எம். ஜி. ராமச்சந்திரனா? கே. ஆர். ராமசாமியா என்பது அருகில் நிற்கும் வசன கர்த்தா வே. லட்சுமணனுக்கும் டைரெக்டர் நாகூருக்கும்தான் தெரியும்!

பதிவாளர் சுப்பாராவால் படமாக்கப் பட்டன.

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு

ஆங்கில நாவல் ஒன்றை வெகு சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்த **'ராஜமகுட'**த்தின் தமிழ்ப் படத்தின் வசன கர்த்தா வான பி. எஸ். ராமய்யா என்னைக் கண்டதும் புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு, "ரொம்ப பவர்புல் (உணர்ச்சி மிக்க) கதை சார்; பி. என். ரெட்டிதான் என்னமா டைரெக்ட் செய்கிறார் தெரியுமா? வாருங்கள் உள்ளே போகலாம்" என்று சொல்லி ஸெட்டுக்குள் அழைத்துப் போனார்.

மகாராணி (கண்ணாம்பா) வின் தர்பார் காட்சி அது. குரு குலத்திலிருந்து திரும்பும் இளவரசனை (என். டி. ராமராவ்) ஒழித்துக் கட்ட ஆட்களை ஏற்பாடு செய்திருக்கும் வில்லன (எஸ். வி. ஸஹஸ்ரநாமம்) அது நிறைவேறி விடும் என்ற நிச்சயத்தில் மகாராணியிடம் "யுவராஜா கொல்லப் பட்டார்" என்று செய்தி அறிவிக்கத் தயாராக இருக்கிறான். ஆனால் அதே சமயம் இளவரசன் அங்கு வந்து சேர்ந்து வில்லனைத் திகைக்க வைக்கிறான்.

வாஹினி புரடக்ஷன்ஸின் **ராஜ மகுடம்** தமிழ் - தெலுங்குப் படங்களின் படப் பிடிப்பு வேலைகள் வாஹினி ஸ்டுடியோவில் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்ப் படத்தின் வசன கர்தாவும், தெலுங்குப் படத்தின் வசன

அஞ்சலிதேவியும் ராஜம்மாவும் அமர்ந்திருக்க சூழ்ந்து நிற்கின்றனர் 'இல்லறமே நல்லறம்' படத்தில் சம்மந்தப்பட்ட வசன கர்த்தா கே. வி. ஸ்ரீனிவாசன், ஒளிப்பதிவாளர் கமால் கோஷ், டைரெக்டர் புல்லய்யா நிர்வாகி ராமசாமி அய்யங்கார்.

கர்தாவும் —கதாசிரியருமான நர்ஸ ராஜுவும், படப்பிடிப்பின்போது கூட இருந்து உதவி வருகிறார்கள். பி. எஸ்.

ஆந்திரக் குமரி ஜமுனா தமிழ்க் கன்னிக்குப் பிரார்த்தனை செலுத்தினார் —ஜயந்தி பிச்சர்ஸ் முதல் தயாரிப்பில்.

ராமய்யா கதையின் சில பகுதிகளை எனக்குக் கூறினார். அவர் சொன்னது போல் கதை சிறப்பாக இருக்கும் என்றே எனக்கும் பட்டது.

விஜயா ஸ்டுடியோவில், ஒரு செட்டுக்கு வெளியே காற்றாட உட்கார்ந்தபடி வம்பளந்து கொண்டிருந்த ஹாஸ்ய நடிகர்களான ஏ. கருணாநிதியும், எம். இ. மாதவனும் என் பார்வையில் விழுந்தனர். கும்பகோணம் முனிஸிபல் ஆஸ்பத்திரியில் ஒரு எக்ஸ்ரே கருவியை நிறுவ ஏ. கருணாநிதி எடுத்துக்கொண்ட முயற்சி நினைவுக்கு வரவே அவரிடம் சென்று "நீங்கள் செய்த ஒரு நல்ல காரியம் அது" என்று அவரைப் பாராட்டினேன்.

"சென்னையில் இன்னும் ஹோட்டல் விலாஸம் தானா" என்று கேட்டேன்.

சென்னையில் ஒரு பங்களா வாங்க அவர் முயற்சித்து வருவதையும், விலை பிடித்தால் வீடு பிடிக்கவில்லை-வீடு பிடித்தால் விலை பிடிக்கவில்லை என்ற நிலையையும் தமாஷாகக் கூறினார். 'சீக்கிரமே கிரஹப் பிராப்திரஸ்து' என்று ஆசி கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டேன்.

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50-க்கு, 96" X 51" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரணதிருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல் பணம் வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR SHAWL HOUSE (G.M.)
AMRITSAR

"ரத்தினத் தீவின் ராஜகுமாரியிடமா போட்டி?" என்று கேட்பதுபோல்இல்லை!
ஜெமினியின் "வஞ்சிக்கோட்டை வாலிபனி"ல் வைஜயந்திமாலா.



எம்.ஏ.வி. பிக்சர்ஸ்
சம்பூர்ண
ராமாயணம்



எம்.ஏ.வீ. பிக்சர்ஸாரின்
மகோன்னத தயாரிப்பு
MAV

ஜெமினியின்

வஞ்சிக்கோட்டை வாலிபன்

இம்மாதம் 11ம் தேதி முதல் தமிழ் நாடெங்கும் திரையிடப் படுகிறது ஜெமினியின் இந்த மகோன்னதச் சித்திரம்.

ஜெமினி கணேசன், பத்மினி, வைஜயந்தி மாலா, கண்ணாம்பா தங்கவேலு, முத்துலட்சுமி, சுந்தரிபாய், வீரப்பா, டி. கே. சண்முகம் ஆக திரையுலகில் பிரசித்தமான நட்சத்திரங்கள் பலரும் நடித்துள்ளனர்.

காட்சி — 1

[உமையாள்புரம் பண்ணை கனகரத்தின முதலியாரிடம் நாட்டுப்பெண் சரளா கடவுள் பிரசாதத்தைக் கொடுக்கிறாள். கால் நடைப் போட்டிக்குப் போய்விட்டுக் கோபால் திரும்பி வருகிறான்.]

கோ : சரளா......வெற்றி நமக்குத்தான். இதோ பார் பரிசு ...... அப்பா அம்மா கிட்டேபோய் சொல்லிட்டுவா.

பாலா : அப்பா ......அம்மா...அண்ணி

[கப்புடன் உள்ளே ஓடுகிறாள். கோபால் கல்யாணியைப் பார்க்கப் போகிறான்.]

கோ : கல்யாணி, உன் பிள்ளைகளுக்குத்தான் பரிசு, ராமன் பீமனைக் கண்டு திணறிப் போயிட்டாங்க. நம்ப காளைங்களைப் போல இந்த நாட்டிலேயே இல்லே.

[கண்ணம்மா வருகிறாள்.]

கண் : கோபால்

கோ : அம்மா

கண் : இந்தப் பரிசு வாங்கணும்னு நீ பட்ட சிரமத்துக்காகக் கைமேல் பலன் கிடைச்சுட்டுதே.

கோ : எல்லாம் உங்க ஆசீர்வாதம் தான் அம்மா, ராமனாலே பண்ணைக்கே நல்ல பெயர் அம்மா.

காட்சி — 2

[சாப்பாட்டு அறை. கோபால் பலகாரம் அருந்திக் கொண்டிருக்கிறான். பாலாவும் அருகில் உட்கார்ந்து இருக்கிறாள். சரளா வருகிறாள்.]

ச : என்னங்க எல்லாம் அப்படியே இருக்கு, நல்லா இல்லியா?

கோ : ஆஹா. நீ செய்துள்ள பொழுது நல்லாயில்லாமே இருக்குமா?

தயாரிப்பு :	விக்ரம் புரடக்ஷன்ஸ்
கோபால் :	ஜெமினி கணேஷ்
சரளா :	சாவித்திரி
கண்ணம்மா :	கண்ணும்பா
பண்ணையார் :	துரைசாமி
பிரதாப் :	வி. ஆர். ராஜகோபால்
சங்கரலிங்கம் :	கே. சாரங்கபாணி
வசனம் :	உதயகுமார்
டைரக்ஷன் :	பி. எஸ். ரங்கா
முழு உரிமை :	சரோஜா பிக்சர்ஸ், சென்னை-17

நல்லாயில்லேன்னுலும் சொல்ல முடியுமா?

ச: இதையாவது சாப்பிடுங்க.

கோ: வேண்டவே வேண்டாம்.

[கோபால் சாப்பிட மறுத்தால் அத்தையிடம் சொல்வதாகக் கூறுகிருள் சரளா. சிரித்துக் கொண்டே சாப்பிட்டு விட்டு எழுந்திருக்கிருன் கோபால். இரண்டு காளைகளுக்கும் தீனி கொடுத்தாகி விட்டதா என்று கேட்டு விட்டு கோபால் போகிருன்.]

காட்சி — 3

[பிரதாப் புகை பிடித்துக் கொண்டிருக்கிருன். கோபால் அதைப் பார்க்கிருன்.]

கோ: இதென்ன வேலை.

பி: அண்ணு ஒண்ணுமில்லே. கடைக்காரன் பிச்சை அபிமானத்தாலே பீடி எப்படினு சொல்லச் சொன்னுன். பீடி விளம்பரத்திலே என் போட்டோ வேறே போடப் போருனும். காசில்லே எல்லாம் ஓசி அண்ணு, ஓசி.

கோ: அதனலே தானு ஐம்பது ருபா பாக்கின்னு காலையிலேருந்து கடைக்கும் வீட்டுக்கும் வீட்டுக்கும் கடைக்கும் படையெடுத்துக் கிட்டிருக்கான்!

பி: அதெ உங்கிட்டச் சொல்லிட்டானு அயோக்கிய நாய். அவனை கவனிச்சிக்கிறேன்.

கோ: ஆமாம், அவனை நீ கவனிச்சிகிறத்துக்கு முன்னே அப்பா கிட்டே சொல்லி உன்னைக் கவனிக்கச் சொல்றேன் வாடா.

[பிரதாப் தந்தையிடம் சொல்ல வேண்டாமென்று கெஞ்சுகிருன். கோபாலிடம் சட்டை தைத்துக் கொள்ள என்று சொல்லிப் பணம் வாங்கிக் கொள்கிருன்.]

காட்சி — 4

[வெற்றிலை பாக்குக் கடையில் பிரதாபும் அவன் நண்பன் அட்டையும் வந்து கலாட்டா செய்கிருர்கள். கடைக்காரனை மிரட்டியும் பீடி, சோடா, பீடா முதலியவைகளைக் கடையிலிருந்து எடுத்துக் கொள்கிருர்கள்.]

பி: பலே ஒரு சோடா, அப்பறம் பீடா, பின்னலே பீடி, இந்த மூணுலே

இருக்கு உலகம். மூணும் காட்டும் சொர்க்கம்.

காட்சி — 5

[சரளா கோபாலின் துணிகளை மூட்டை கட்டிக் கொண்டிருக்கிறாள்.]

சரளா: என்னங்க வரவர வீட்லே தங்கமாட்டேங்கறீங்க, எப்பப் பார் பிரயாணம் தான்,

கோ: என்ன செய்யறது. சரளா பாக்கி ஏராளமா அங்கங்கே நின்னு போயிருக்கு.

ச: இதுக்கெல்லாம் நீங்க போகணுமா? கணக்குப் பிள்ளையை அனுப்பினாப் போதாது.

கோ: ஓ நம்ப கணக்குப் பிள்ளை தானே அவரை அனுப்பினா பண வசூலுக்குப் பதிலா பழிதான் வசூல் பண்ணிக்கிட்டு வருவார். விவசாயிக விளெச்சல் இல்லே சாப்பாட்டுக்கே கஷ்டப் பட்றோம்னு சொன்னா பாக்கியைத் தீர்த்து விட்டு கஷ்டப்படுங்கரார். அப்பா...... என்ன கிராப்பு படியவே மாட்டேங்குதே.

ச: உங்க கிராப்பே உங்களுக்குக் கீழ்படியலேன்னா விவசாயிகள் எங்கே நீங்க சொல்ற பேச்சைக் கேட்கப் போறாங்க.

கோ: ஓஹோ.

ச: உட்காருங்க. நான் நல்லா சீவரேன்.

[சரளா கோபாலுக்குத் தலை சீவுகிறாள். கோபால் பாட ஆரம்பிக்கிறான்.]

கோ: உலகில் இன்பம் வேறுண்டோ உயிர்களுக்கோர் ஆனந்தம் வேறுண்டோ.

ச: சரிதான் பாடவேறே துணிஞ்சுட்டீங்களா?

கோ: உன்னை மனைவியா அடைஞ்ச நான் எதுக்கும் துணிஞ்சுடுவேன். பாடுவேன். ஆடுவேன்.

ச: போதும் போதும். ரொம்ப துணிச்சல்காரருன்னு உங்க கிராப்பே காட்டுது. கிராப் வாரத் தெரியலே. பேச்சைப் பாரு.

[கோபால் சிரிக்கிறான்.]

ச: எதுக்குச் சிரிக்கிறீங்க.

கோ: அழகான பெண்ணைக் கண்டா சிரிப்பு காரண மில்லாமலே வரும்.

உதயகுமார்

'நவஜீவனம்' என்ற தமிழ்ப் படம் வெளி வந்தபோது உணர்ச்சி மிகுந்த திரைச் சித்திரமாக அது அமைய 'உதயகுமார்' என்பவர் எழுதிய வசனம் காரணமாக இருந்தது என்று படம் பார்த்தவர்கள் பாராட்டினார்கள். சடகோபன் என்ற இயற்பெயரை உடைய இவர் இப்பொழுது பல தமிழ்ப் படங்களுக்கும் தெலுங்கிலிருந்து தமிழாக்கும் படங்களுக்கும் பொருத்தமான வசனங்களை எழுதி வருகின்றார். "குடும்ப கௌரவத்"தில் இவருடைய வசனம் மிக கௌரவமாக அமைந்திருக்கிறது.

ச: வரும். அவளுக்கு அப்ப கோபம் வரும். கன்னத்திலே விழும்.

கோ: அது கிடைக்காதான்னு தானே ஏங்கிட்டு இருக்கேன்.

ச: போதும் நிறுத்துங்க.

[கோபால் சங்கரலிங்கத்துடன் வண்டியில் கிளம்புகிறான்.]

காட்சி — 6

[கிராமச் சாவடி.]



ச: இந்தப் பஞ்சப் பாட்டுக்கு ஒண்ணும் பஞ்சமில்லே. நல்லா விளைஞ்ச போது அள்ளிக் கொடுத்துட்டிங்களா? பாக்கி தீராம நாங்க போறதா இல்லே.

கிராம: எங்ககிட்டே இருந்தா கொடுக்க மாட்டோங்களா, கொஞ்சம் தவணை கொடுங்க. இந்த போகம் விளைஞ்சு அறுவடையானதும் கொடுத்துட்ரோமுங்க.

சங்: குத்தகை எடுத்துட்டு என்னடா கையை பிசயரீங்க. அதெல்லாம் முடியாது. வீடு வாசல் எல்லாம் வித்தாவது கட்டித்தான் ஆகணும்.

கோ: கணக்குப் பிள்ளே. அவங்க சொல்றதையும் கொஞ்சம் காதுலே வாங்கிக் கோங்க. அவங்க கஷ்டத்தையும் கவனிக்கணும்.

சங்: உங்களுக்குத் தெரியாதுங்க. நீங்களும் அவங்களுக்குப் பரிவா பேசினு வசூல் செய்யறதுதான் எப்படி.

கோ: இல்லாதவங்களை வாட்டி வதைச்சா எங்கேருந்து கொடுப்பாங்க. பட்டினி கிடந்தாவது பாக்கியைக் கட்டுன்னு கேக்கறதுதான் நியாயமா?

சங்: உங்க இஷ்டம்.

கோ: நீங்க பயிரிட்டு பட்டினி கிடக்காமே பிள்ளை குட்டியோட சுகமா இருங்க. சௌகர்யம் போல குத்தகைப் பணத்தைக் கொடுங்க.

எல்: நீங்க நல்லா இருக்கணும்,

காட்சி — 7

[சங்கரலிங்கம் கோபாலின் வண்டியை மறித்துப் பணத்தைப் பறித்துக் கொள்ளும்படி சில குண்டர்களுடன் சதி செய்கிறான். கோபால் வழி மறித்த குண்டர்களுடன் சண்டையிடுகிறான். பண மூட்டையை குண்டர்களிடமிருந்து மீட்டு காளையின் கொம்பில் எறிகிறான். அதை இராமன் என்ற காளை கொம்பில் தொத்திக் கொண்டு ஓடி விடுகிறது. சங்கரலிங்கம் ஒன்றுமே அறியாதவன் போல பின்னால் ஓடி வந்து வண்டியில் ஏறிக் கொள்கிறான். கோபால் வீட்டுக்குத் திரும்பி வந்ததும்.]

கோ: கல்யாணி, உன் காளைகள் தான் எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்திருக்குது. இல்லே பணம் பிராணன் எல்லாம் பறி போயிருக்கும்.

சங்: என்ன கோபால். மாட்டோடு பேசறே, உன் பேச்செல்லாம். புரியுமா?

கோ: ஏன் புரியாமே, மனுஷர்களை விட நல்லாப் புரியும். சொன்னபடி கேக்கும். பதிலும் கொடுக்கும்.

காட்சி — 8

[ஜமீன்தார் வீடு. உடல் நலமற்றிருக்கும் அவரை டாக்டர் சோதனை செய்து கொண்டிருக்கிறார். கோபால் மூட்டையைத் தாயிடம் கொடுத்து விட்டு உள்ளே வருகிறான்.]

கிழ: பிரதாப் எங்கே.

கோ: இதோ இப்பவே அழைச்சிக்கிட்டு வர்றேன். இன்னும் வீட்டுக்கு வரல்லே.

கிழ: பரவால்லே உக்காரு. பிரதாப், அவனைப் பத்திதான் என் கவலையெல்லாம். எப்படியாவது திருத்தி நல்ல வழியிலே நீதான் கொண்டு வரணும்.

கோ: அதைப் பத்திக் கவலைப் படாதீங்க. தன்னாலே திருந்திடுவான். இளம் வயசு, பயம் தெரியாது. அவனை நல்ல வழியிலே கொண்டு வர்ரது என் பொறுப்பு.

கிழ: கண்ணம்மா நம்ம கோபாலுக்கு ஒன்மேலே இருக்கிற மதிப்பும் கௌரவமும் இந்தக் காலத்திலே எந்த மகனுக்கும் தன் தாய்மேலே இருக்காது. நீ பெத்த பிள்ளையா இல்லாத போனாலும் உன்னைக் கஷ்டப்படாமே எப்பவும் காப்பாத்தறவன் கோபால்தான். கோபாலையும் பிரதாப் மாதிரி உன் வயத்திலே பிறந்தவனாகவே பாவிச்சு நடந்துக்கோ.

கண்: எனக்குத் தெரியாதா என்ன? கோபாலை என்னைக்கும் நான் வித்தியாசமா நினைச்சதில்லே. இரண்டு பேரையும். இரண்டு கண்களாகத்தான் பாவிச்சிட்டு வர்ரேன்.

கிழ: கோபால், மூத்த பிள்ளையா பிறந்தாலே தொல்லை தான். எனக்கப்பறம் இந்தக் குடும்ப பாரம் உன் தலையிலே தான் விழும். பண்ணையை கவனிச்சிக்கற பொறுப்பு ......

கோ: அப்பா, இதெல்லாம் இப்ப எதுக்குப் பேசரீங்க. வீணா உடம்பை அலட்டிக்காதீங்க. நிம்மதியாத் தூங்குங்க.

கிழ: பைத்தியக்கார. நடக்க வேண்டியதை தடுக்க யாராலும் முடியாது. கோபால். ஒற்றுமைக்குப் பேர் போனது நம்ப குடும்பம். தலைமுறை தலைமுறையா வந்துள்ள நம் குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தற பொறுப்பு உன்னுடையது தான். விவசாயிகளுக்குக் கஷ்டம் கொடுக்காது அவங்க கஷ்டப் படாது பண்ணைப் பெருமையை நிலைநாட்டு.

கோ: அப்பா உங்க மனசுப்படியே நான் பாத்துக்கறேன். நீங்க கவலைப் படாதீங்க.

[சங்கரலிங்கம் இவைகளை ஒட்டுக் கேட்டிருந்து விட்டு நகர்ந்தான்.]

காட்சி — 9

[ஜமீன்தார் தனக்குப் பிறகு பண்ணையின் பொறுப்பை கோபா

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1-94 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-00.

இந்த அதிசயத் தைலததை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியுகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (K-1) JULLUNDER CITY

விடம் ஒப்படைக்க வேண்டும் என்று கருதுகிறார். அவரது கருத்தை சங்கரலிங்கம் கண்ணம்மாவிடம் தெரிவிக்கிறான்.]

சங: தங்கச்சி, ஜாடையா சரடு விட்டேன், பெரியவர் உள்ளது உள்ளபடி கக்கிட்டார். எதுக்கும் முன் ஜாக்கிரதையா இருப்பது நல்லதுதான். உங்கிட்டே ஒரு பேச்சுச் சொல்ல வந்தேன். பெரியவர் தனக்குப் பிற்காலம் எல்லாத்தையும் கோபால் கிட்டே கொடுக்கப் போறதாத் தெரியுது.

கண்: இதையா பெரிசா சொல்ல வந்துட்டே, அவர் செய்யறது நியாயம் தானே, மூத்தவன் தானே எல்லாத்தையும் கவனிச்சுக்கணும். கோபாலைப் போல தங்கமான பிள்ளை கிடையாது.

சங்: அது வாஸ்தவம்... ஆனா...

கண்: ஆனாவுமில்லே ஆவன்னாவுமில்லே. கோபாலைப் பத்தி என்ன சொன்னாலும் என் காதுலே ஏறாது.

சங்: இந்தப் பணம் இருக்கே, அதுக்கு எப்பேர்ப்பட்டவன் நல்ல குணத்தையும் மாத்தற அபார சக்தி உண்டு. தீவிர சீர்திருத்த வாதியெல்லாம் அதிகாரம் பதவி வந்ததும் ஒண்ணு நெம்பர் சுயநல வாதியாப் போறதை தினம் பாத்துகிட்டுத் தானே இருக்கோம்.

கண்: அதென்னமோ சரிதான். ஆனா என் கோபால் குணமே தனிதான். மாறவே மாட்டான். எனக்குத் துரோகமே செய்ய மாட்டான்.

சங்: ஒருவேளை மாறிட்டான். துரோகம் செய்துட்டான். அப்ப உங்க கதி? பண்ணையிலே கண்ணியத்தோடு வாழ்ந்துவந்த உனக்கு தெருத்திண்ணை தான். வெள்ளம் வர்ரதுக்கு முன்னாலே அணை பொட்ரது நல்லதில்லையா? உம் இன்னொண்ணு கோபால் உன் வயத்திலே பிறந்த பிள்ளையா? முதல் தாரத்து மகன். அவன் மேலே இவ்வளவு அன்பு கூடாது.

கண்; உனக்குப் பைத்தியம் தான் பிடிச்சிருக்கு இப்படி எல்லாம் பேசினே உன்னை வெளியே அனுப்பிடுவேன்.

[போகிறான்.]

காட்சி — 10

[சங்கரலிங்கம் பண்ணையார் சொன்னபடி உயில் எழுதாமல் மாற்றி எழுதிவிடுகிறான். உயிலை முழுவதும் படித்துக் காட்டாமல் பஞ்சாயத்தாரிடம் கையெழுத்து வாங்கி விடுகிறான்.]

காட்சி — 11

[பிரதாப் வீட்டிலிருந்து பணத்தைத் திருடிக்கொண்டு தன் நண்பனுடன் மோகனா வீட்டுக்குப் போகிறான்.]

பிர: உங்க நாட்டியம்...நாட்டியம்... ரொம்ப...ரொம்ப ... நல்லா இருந்தது.

மோகனா: சந்தோஷம்.

தாயார்: அதுக்கு உங்க பரிசு

பிர: பரிசா ?

அட்டை: கைமோதிரத்தை கழட்டிக் கொடுடா.

பிர: பரிசு தரேன். உங்க நடனத்துக்கு என்ன ... அட்டை வரலியே ... உங்க நாட்டியம் ... நாட்டியம்.

[மோதிரத்தை மோகனை கழட்டிக் கொண்டு போகிருள்.]

காட்சி — 12

[பிரதாப், வீட்டிலுள்ளவர்களிடம் பொய் சொல்லிப் பணம் வாங்கிக்கொண்டு மோகனை வீட்டிற்கு வருகிருன்.]

மோ: நீங்க பழைய காலத்து நகைகளைப் பாத்திருக்கீங்களா?

பிர: பாக்கரதாவது. எங்க பொக்கிஷத்திலே செட்டு செட்டா......

மோ: ஆ, நிஜமாகவா, ஒரு நாளைக்கு அதை எல்லாம் போட்டிகிட்டு உங்க முன்னலே நாட்டிய மாடணும்னு ஆசை.

பிர: அவ்வளவுதானே, இப்பவே எல்லாம் கொண்டுவந்து தர்றேன்

மோ: ஆமா. உங்க வீட்டிலே அப்பா அம்மா சும்மா இருப்பாங்களா?

பிர: அதைப்பத்தி எல்லாம் நீ கவலைபடாதே. யார் வந்து தடுத்தாலும் பிரதாபை நிறுத்த முடியாது. மோகனை நாளைக்கே பொக்கிஷத்தை உன் முன்னலே கொண்டு வைக்கிறேன்

மோ: முடியாதுங்கறேன்.

பிர: முடியும்.

[செல்கிருன்.]

காட்சி — 13

[பிரதாப் நடுஇரவில் தந்தையின் படுக்கையிலிருக்கும் சாவியை எடுத்துக் கொண்டு இரும்புப் பெட்டியிலிருக்கும் பணத்தை எடுக்கிருன். விழித்துக் கொண்ட பண்ணையார் திருடன் தன் மகன் என அறிந்து அதிர்ச்சி அடைகிருர். அவனை ஏசிப் பேசுகிருர். தடியால் அடித்து விட்டுக் களைப்பினல் கீழே மயக்கமாக விழ உயிர் போய்விடுகிறது.]

[கோபால் கண்ணீருடன் இருக்கும் தன் தாயைஆறுதல் கூறித்தேற்றுகிருன். பிரதாபை 5ல்வழிப் படுத்துவதாக உறுதி கூறுகிருன். மறுநாள் பிரதாப் வாயில் பீடியுடன் வருவதைக் கண்டு கோபால் அவனை வயலுக்கு ஏர் உழுவதற்கு அழைத்துச் செல்கிருன். அங்கு அவனை ஏமாற்றி விட்டு வந்து விடுகிருன். பிரதாப் வீட்டிற்கு வருகிருன்.]

நவீன ரக
பட்டாடைகள்

உயர்ந்த வேலைப் பாடுகள் அமைந்த பட்டுச் சேலைகள், ஜார்ஜெட், கிரேப் சேலைகள், சோளி பீஸ்கள், சேலை அகலமுள்ள பாவாடைகள், வேஷ்டிகள், முதலிய பட்டு & நூல் ஜவுளிகளுக்கு கீர்த்தி பெற்ற நாணயமான இடம்.

ராதா ஸில்க்
எம்போரியம்
பெரிய தெரு, கும்பகோணம்

பிர: அம்மா ... ... அம்மா!

கண்: என்னடா?

பிர: அண்ணு ... அண்ணு ...

கண்: அண்ணுவுக்கு என்னடா?

பிர: அண்ணுவுக்கு என்ன? நல்லாத் தான் இருக்கான். முடியாது முடியாதுன்னு சொல்லச் சொல்ல அடிச்சு உதைச்சு மாடுபோலே என்னை ஏர் உழச் சொல்லுகிறுன்.

கண்: ஏண்டா; நீ சொல்லலை. என்னலே முடியாதுன்னு

பிர: சொன்னேன். என்னலே முடியாதுன்னு சொன்னேன். அழக்கூட அழுதேன். நான் வேலை செய்ய மாட்டேன்னு சொன்ன அடிக்க வந்துட்டான். வேலை செய்து செய்து என் உடம்பு எல்லாம் சேராயிடுத்து. சட்டை எப்படி கிளிஞ்சி போயிடுத்து பாரம்மா.

கண்: இதென்ன அண்ண தெரியாதுன்ன எதுக்கு வற்புறுத்தணும். அவன் வேலை செய்துதான இந்த குடும்பம் நடக்கணும்.

சங்: அதைச் சொல்லி யார் பிழைக்கறது.

உங்களுக்கு ஒரு
அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் சினிமாவில் நடிக்க விரும்புகிறீர்களா? நாடக நடிகராக விருப்பமா?

உங்களிடம் சினிமா, நாடகம் இவைகளுக்கு ஏற்ற கதைகள் இருக்கின்றனவா?

விபரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

★

ஸினி இன்பர்மேஷன் ஸென்டர்.

14, நல்லதம்பி முதலி தெரு,

சென்னை - 5.

[கோபால் வருகிறுன். வந்து உண்மையைச் சொல்லுகிறுன். சரளா பாலாவுக்குச் சாதம் போடுகிறுள்.]

ச: தினம் வயிறு நிறைய தின்னு ஓடியாடி வளர்ந்து பெரியவளான அப்ப உனக்குக் கலியாணம் செய்யலாம். மாமியார் வீட்டுக்கு அனுப்பலாம்

பாலா: ஆமா அண்ணி எல்லாத்தையும் ஒரே நாளிலே தின்னுட்டா

[கோபால் வருகிறுன்]

கோ எல்லாம் ஒரே நாள்லே தின்ன மாமியார் கிட்டே, இல்லே டாக்டர் கிட்டேதான் அனுப்பணம். நல்லா இருக்கு பாலா. எனக்கோ அண்ணிக்கோ எதுவும் வைக்காமே எல்லாம் நீயே தின்னுட்டா எப்படி.

பா: அதில்லேண்ணு. அண்ணி எதுவுமே சாப்பிடலே. அம்மா கோபிக்கப் போருங்கன்னு அண்ணி பங்கையும் நானே சாப்பிடறேன்.

கோ: ஓஹோ, பிறருக்காக நீ சாப்பிடரயா? என்ன சரளா, சாப்பிடாததுக்கு காரணம்?

ச: பசி இல்லை

கோ: ஏன் பசி இல்லை.

ச: உடம்பு சரி இல்லை.

கோ: ஏன் எதனுலே உடம்பு சரியில்லே.

ச: நல்லா இருக்குங்க நீங்க கேக்கற கேள்விங்க. வக்கீலை தோற்கடிச்சுடும் போல இருக்கே. எத்தனையோ காரணம். இதெல்லாம் ஆம்பளைங்களுக்குச் சொல்வாங்களா?

[கோபாலுக்குப் பாலா விஷயத்தைச் சொல்லுகிறுள் கோபால் தகப்பனுராகப் போகிறுன் என்று. கோபால் சந்தோஷத்துடன் செல்கிறுன்.]

காட்சி — 14

[கிராம வாசிகள் சங்கரலிங்கத்திடம் வந்து பொங்கலுக்கு பண உதவி கேட்கின்றனர். சங்கரலிங்கம் மறுக்கிறுன். கோபால் வருகிறுன்.]

கோ: நிறுத்துங்கள், என்ன இது?

ஒரு: மன்னிக்கணும். எங்க பொறுமையும் மீறிட்டது. அவர் பேசிய பேச்சு. பண்டிகை செலவுக்குப் பணம் கடனு கேட்டா கண்டபடி திட்ராங்க.

கோ: ஆயிரம் இருக்கட்டும். கணக்குப் பிள்ளை ஏதாவது தப்பு செய்தார்னு எங்கிட்ட சொல்லுங்க, முதலில் அவரிடம் மன்னிப்புக் கேளுங்கள்.

எல்லோ: எங்களை மன்னிச்சுடுங்க. தெரியாம பேசிட்டோமுங்க.

கோ: கணக்குப் பிள்ளை, உழவர்கள் அடிமை அல்ல? அவர்களை அன்போடு நடத்தினுல் நமக்காக உயிரையும் தருவார்கள். பண்டிகைக்குத் தானே பணம் கேட்டார்கள், ஏன் கொடுக்கக் கூடாது.

சங்: த்சு, ஏற்கனவே அவர்கள் தர வேண்டிய பாக்கி ரொம்ப இருக்குங்க.

கோ: அதனல் என்ன? நாம் கொடுக்கா விட்டால் அவங்க வேறே எங்கே போவாங்க. பொங்கல் அவங்க திருநாள். அவங்க அதைக் கொண்டாடுவதை காணுவதே நம்ம கொண்டாட்டம். இந்தாங்க இரும்புப்பெட்டி சாவி, அவர்களுக்கு எவ்வளவு வேணுமோ வேண்டிய பணம் எடுத்துக் கொடுங்க.

[சாவியைத் தருகிருன். பணம் எடுத்துக் கொண்டு சங்கரலிங்கம் வரும் பொழுது கண்ணம்மா பார்த்துவிட்டு]

கண்: எதுக்கண்ணு அவ்வளவு பணம்?

சங்: அந்த வயற்றெரிச்சலே வேறே கிளப்பாதே தங்கச்சி. பண்ணையிலே பணம் குவிஞ்சு கிடக்குது. அதை வாரி இறைக்கத்தான், தனக்கு நல்ல பேர் சம்பாதிக்கத்தான்.

கண்: இதெல்லாம் நீ தவறுன்னு ஏன் சொல்லக் கூடாது.

சங்: சொல்லாம இருப்பேனு? சொன்னேன். நிறைய வாங்கிக் கட்டிக் கிட்டேன்.

[சரளா கேட்டுக் கொண்டே வருகிருள்.]

கண்: அவன் பணமா? வாரி இறைச்சி நல்ல பேரு சம்பாதிக்கறது ரொம்ப சுலபம் தான்.

ச: கணக்கு பிள்ளை. வீணு முடிச்சுப் போட்டு குடும்பத்தைக் கலைக்றதிலே உங்களுக்கு என்ன லாபம்? அவர் எண்ணம் என்னதான்னு உங்களுக்குத் தெரியுமா?

சங்: தெரியாது, தெரியாது. கண்டு பிடிக்கறது கஷ்டம்னு தானே சொன்னேன்.

ச: பொடிவெச்சிப் பேசி குடும்ப ஒற்றுமைக்கே வெடியா வைக்க

றீங்க. விவசாயிகளுக்குப் பண்டிகை செலவுக்காகப் பணம் கடன் கொடுத்தா பண்ணை அழிஞ்சிடுமா?

கண்: அழிஞ்சுதான் போகும் உள்ளத்தைச் சொன்னா நோளைக் கண்ணிக்கு கோபப்பாளமாம். இப்படி அண்ணா மேலே எறிஞ்சு விழரயே, உன் புருஷன் சொல்றது மட்டும் சரியா இருக்கா.?

[கோபால் வருகிறான்.]

கோ: இனிமே உங்க சம்மதம் இல்லாமே எதுவுமே செய்ய மாட்டோன். இந்தாங்க இரும்புப் பெட்டிச் சாவி.

கண்: சாவி எனக்கெதுக்கு?

கோ: பரவாயில்லே எடுத்துக்குங்க.

சங்: எடுத்துக்க தங்கச்சி, நீ வாங்கிக் காதபோனா அவர் ரொம்ப வருத்தப் படுவாரு

[சங்கரலிங்கம் சைகை செய்ய கண்ணம்மா சாவியைப் பெற்றுக் கொள்ளுகிறாள். கோபால் போகிறான். விவசாயிகளுக்கு ஒரு சேட்டிடம் கடன் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறான்.]

காட்சி — 16

[சரளா சில சுமங்கலிகளை உபசரிக்கிறாள். அதைக் கண்ணம்மா கண்டுவிட்டு]

கண்: பிரதி வெள்ளிக்கிழமையும் இப்படி அள்ளிக் கொடுத்தா காவடி தான் எடுக்கணும்.

ச: அத்தை, வெள்ளிக்கிழமை சுமங்கலிக்கு மஞ்சள் குங்குமம் கொடுப்பது குடும்ப கௌரவம்.

கண்: அப்படி வேணும்னா உங்கப்பன் வீட்டிலிருந்து கொண்டு வந்து கொடுக்கறதுதானே. [வீட்டு வாயிலில் மாட்டுக்கு அலங்காரம் செய்திருப்பதைக் கண்டு விட்டு] ஐயோ, இதென்ன அநியாயம் வீட்லே இருக்கற நகைகளெல்லாம் மாட்டுமேலே போடறதா.

ச: இல்லே அத்தே, மாட்டுப் பொங்கலாச்சேன்னு ஏதோ சந்தோஷத்திலே.........

கண்: போதும் போதும் அலங்காரத்திற்கும் சந்தோஷத்திற்கும் ஓரளவு வேண்டாம்?

ச: கல்யாணி நம்ப வீட்டு மஹா லட்சுமி.

கண்: சரி சரி ஒண்ணும் பதில் பேசாதே. நகையெல்லாம் எடுத்து உள்ளே வை.

காட்சி — 17

[கல்யாணி என்ற பசுவை கசாப்புக் கடைக்காரனுக்கு விற்றுவிடுகிறார்கள், கணக்குப் பிள்ளையும் கண்ணம்மாவும். சரளா செய்தி கேட்டதும்]

ச: அத்தை; லட்சுமியைப் போல வீட்டுக்கே ஒளியா விளங்கும் கல்யாணியை, அன்பே உருவான கல்யாணியை விற்க உங்க மனசு தான் எப்படி துணிஞ்சுது. அத்தை அத்தை உங்களைக் கெஞ்சி கேக்கறேன். கல்யாணியை விற்காதீங்க.

[கல்யாணியை இழுத்துக் கொண்டு போகும் பொழுது.]

ச: கல்யாணியை விடச் சொல்லுங்க, இழுத்துக் கிட்டுப் போறாங்க, அது கதர்றது உங்க காதுலே விழலியா. அதைக் காபாத்துங்க அத்தை....அத்தை....அத்தை.

[சரளா காலில் விழுகிறாள், மாடு கதறுகிறது. பிறகு கோபாலிடம் செய்தியைச் சொல்ல ஓடுகிறாள். செய்தி அறிந்து கோபால் கசாப்புக் கடைக்கு ஓடுகிறான்.]

கோ: இது எங்க கல்யாணி ஐயா. தவறா வித்துட்டாங்க. பணத்தைத் திருப்பி தந்துட்டேரேன் அனுப்பிடுங்க. இந்தப் பசுதாங்க என்னைப் பாலூட்டி வளர்த்தது. பெத்த தாய் இல்லாத எனக்கு பெரிய தாய் இந்தக் கல்யாணிதான்.

[கல்யாணியை அணைத்துக் கொள்ளும் கோபாலைக் கடைக்காரன் இழுத்துத் தள்ளுகிறான்.]

கோ: முடியாது, என் தாய் கல்யாணியை கொடியவர்களுக்குப் பலியாக விடமாட்டேன். என்னை

வெட்டுங்கள், ஆனல் என் கல்யாணியை விடமாட்டேன்.

கசா : இதென்னட பெரிய தொந்தரவாப் போச்சு.

இன் : போகட்டுமண்ணே. அனுப்பிடுவோம்.

கசா : சரி, பணத்தை எடு.

கோ : வீட்டுக்கு வாங்க தர்றேன.

[கல்யாணியையும் ஓட்டிக் கொண்டு போகிருர்கள். கணக்குப் பிள்ளையிடம் ஐம்பது ரூபாய் கேட்கிருன் கோபால். அச்செய்தியை கண்ணம்மா அறிந்து விற்ற பசுவை ஏன் வீட்டுக்கு கொண்டு வந்தாய் என்று சீறுகிருள். பணம் தர மறுக்கிருள். சரளா அங்கே வந்து தன் கைவளையைக் கழற்றிக் கொடுத்து]

ச : இதைக் கொடுத்து கல்யாணியைக் காப்பாத்துங்க.

கோ : சரளா !

[சரளா கசாப்புக் கடைக்காரன் பக்கம் திரும்பி]

ச : இதை எடுத்துக்குங்க, நீங்க எதிர்பாக்கறதுக்கு மேலேயே கிடைக்கும். கல்யாணியை விட்டுடுங்க.

[தயங்கும் கசாப்புக்காரனிடம்]

ச : பரவாயில்லே எடுத்துக்குங்க.

கசா : வேண்டாம்மா வேண்டாம் குடும்பப் பொண்ணு வளையை கொடுக்கக் கூடாது. கும்பிடரேனுங்க

[கல்யாணியை விட்டுவிட்டுப் போகிருர்கள்.]

கண் : கோபால் உனக்கென்ன துணிச்சல். நான் வேண்டாம்ன காரியத்தை வேணும்னு அடம் பிடிச்சு செய்து அலட்சியப் படுத்தறயா ? இந்த வீட்டுக்கு அதிகாரி நீயா, நானு ?

கோ : அம்மா என்ன நீங்க சொல்றீங்க. நீங்க இப்படி பேசறதிலே என்ன விபரீதம் நடக்கும்னு தெரியுமா ?

ச : ஆமாம் அத்தை. எங்கமேலே ஏன் இவ்வளவு கோபம் ? ஏதாவது

எப்பொழுதும் இந்த லேபிலை கவனித்து வாங்குங்கள்

ஆம் !

ஆம்ஸ்

சோடா, கலர் பானங்கள் சோர்வை நீக்கி உற்சாகம் தருகின்றன

சினிமா ஸ்டூடியோக்களிலும் திருமண விழாக்களிலும் பிக்னிக், டீ பார்ட்டிகளிலும் ஆம்ஸ் பானங்கள் முதல் இடம் பெறுகின்றன

ஆம்ஸ் ஹவுஸ்
34, பாண்டி பஜார்
தி.நகர், சென்னை-17



மற்ற படங்களைப் போல் ஆபரணங்களும் பட்டு ஆடைகளும் இல்லாவிட்டாலும் பத்மினியின் நடிப்பு எப்போதும் போல இருக்கும் — ராமாயணத்தில்.

தவறு செஞ்சிருந்தா மன்னிச்சுடுங்க.

சங் : நல்லாயிருக்கு, செருப்பாலே அடிச்சுட்டு மன்னிச்சுடுன்னு என்ன சொகுசா சொல்றுங்க.

கோ : கணக்குப் பிள்ளை, வாயை மூடுங்க.

சங் : என்ன கோபால் மிறட்டறே வாயைத் திறக்கரத்துக்கு முன்னே சீறறியே,

கோ : பேசாதே. இவ்வளவு தூரம் வந்தது உங்களால்தான். எங்க ஒற்றுமை கெட்டு குட்டிச் சுவராப் போனது உங்களால் தான்.

[கோபால் கணக்குப்பிள்ளையை அறைகிறான். கோபாலை கண்ணம்மா அறைகிருள்.]

கண் : என் எதிர்லே எங்க அண்ணனை அடிக்க எப்படி இவ்வளவு தூரம் வந்ததோ. பாகம் பிரிச்சுதான் ஆகணும். இனி ஒரு நிமிஷம் பொறுக்க முடியாது. பஞ்சாயத்தாரை உடனே அழைச்சுக்கிட்டு வா.

காட்சி — 18

[சங்கரலிங்கம் உயிலில் சூழ்ச்சி செய்து விடுகிறான். விவரம் அறிந்த கிராமவாசிகள் ஆத்திரப் படுகிறார்கள் ஆனல் கோபால்]

கோ : அம்மா நான் ஏதாவது செய்திருந்தா என்னை மன்னிச் சுடுங்க. இந்த உயில் பாகப் பிரிவினை எல்லாம் வேண்டாம்மா. இதனல் அப்பா ஆத்மா சாந்தி அடையாது.

கண் : அப்பா பெயரைச் சொல்லி என் மனசை மாத்த முடியாது, கோபால்.

கோ : அப்படியானல் எனக்கு எதுவுமே வேண்டாம். நான் ஆண்டாலென்ன, என் தம்பி ஆண்டால் என்ன. எல்லாம் பிரதாபே வைத்துக் கொள்ளட்டும்.

கண் : ஏன், ஊரில் கண்டபடி ஏசவா? உயில்படி எப்படி நடக்கணுமோ அப்படி நடக்கவேண்டியது தான்

கோ : அம்மா ...

[கோபால் சரளா வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். பாலா தன் துணிகணிகளுடன் நிற்கிருள்.]

பாலா : அண்ணு, அண்ணி

சரளா : பாலா நீ எங்கே வர்ரே?

பா : உங்க கூடத்தான் அண்ணி.

ச : தப்பு பாலா, அம்மா கூடத் தான் இருக்கணும். உள்ளே போ.

பா : முடியாது. அண்ணி அண்ணு உங்களைவிட்டு நான் இருக்கவே மாட்டேன்.

காட்சி — 19

[பண்ணை வீட்டில் கண்ணம்மாவும் கணக்குப் பிள்ளையும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிரதாப் வருகிறான். கணக்குப் பிள்ளையின் கையிலிருக்கும் பணத்தை எடுத்துக் கொண்டு விடுகிறான்.]

சங் : பிரதாப். இந்தா பணத்தை இங்கே கொடு.

பிர : ஊஹூம்.

கண் : கொடுடா

பிர : நான் குடுக்க மாட்டேன்.

கண் : எதுக்காகக் கொடுக்க மாட்டே. தினம் கை கொண்ட பணத்தை எடுத்துக்கிட்டுப் போறியே, என்ன செய்யறே? யாருக்குக் கொடுக்கறே?

பிர : நான் யாருக்குக் கொடுக்கறேன்னு மாமாவுக்குத் தெரியும்!

சங் : எனக்கென்ன தெரியும்?

பிர : மாமா உனக்குத்தெரியும்னு எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்னு உனக்குத் தெரியும்!

கண் : பிரதாப். என்ன அண்ணா அவன் பேசரது எனக்கு புரியல்லே

சங் : அட எனக்கென்ன தெரியும் நான்னு அவனுக்குத் தொக்குமாதிரி.

கண் : இருந்த இரண்டாயிர ரூபாயைக் கூட எடுத்துக்கிட்டுப் போயிட்டானே. இப்ப என்ன செய்யறது? இதுக்கு ஏதேனும் ஒரு வழி சொல்லு.

சங் : வழி யோசிச்சுதான் வச்சிருக்கேன். ஆனா உன் அனுமதிக்காகக் காத்துக்கிட்டிருக்கேன்.

[பண்ணையை அடமானம் வைத்துப் பணம் வாங்கிக் கொண்டு சென்னைக்குப் புறப்படும் சமயத்தில் பிரதாப் வருகிறான்.]

பிர : யாரைக் கேட்டு இந்த ஏற்பாடு?

கண் : எல்லாம் உன் நடத்தையைப் பார்த்துத்தான். பண்ணை சொத்தை உன் குடிக்கும் கும்மாளத்திற்கும் வாரி இறைச்சா ஊரைவிட்டு ஓடாமே என்ன செய்யறது?

பிர : என்னாலே இல்லே அம்மா. அண்ணாவை வீட்டை விட்டே விரட்டினீங்களே அந்த சாபம் உங்களை இந்த ஊரைவிட்டே விரட்டுது. உங்களோட நான் வர முடியாது.

கண் : வராமெ இங்கே எங்கேடா இருப்பே?

பிர : எனக்கென்னம்மா? ராஜா போல இருப்பேன். அடமானம் வெச்சு வாங்கின பணத்திலே, அதிகமில்லே, பாதி மட்டும் கொடு. ஆனந்தமா ஜாலியா இருக்கேன்!

கண் : வாயை மூடு. வெக்கமில்லாமே உளர்றியே. வீடு வாசல் எல்லாம் விட்டு போறோமேன்னு உனக்குக் கொஞ்சமாவது இருக்கா!

ருசிமிக்க

பல தினுசு ஊறுகாய்கள், சாம்பார் பௌடர், ரசம் பௌடர் முதலியன.

Manufacturers

SRI VENKATA LODGE CONDIMENTS,

KUMBAKONAM . . . . . S. INDIA

GP

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்

மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவராலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும் அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்யம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலியாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3-94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**
(R-1) HOSHIARPUR, (Pb)

இவ்வளவு தூரத்திற்குக் காரணம் நீதானே?....... இந்த ஊர்லே நீ இருக்கக்கூடாது வந்துதான் ஆகணும்.

[சங்கரலிங்கம் பிரதாபைத் தனியே அழைத்துச் சென்று]

சங்: பட்டணத்திலே தினுசு தினுசா விதமான பட்டுச் சேலைகள் என்ன தளுக்கு. குலுக்கு, மினுக்கு, ஜிலு ஜிலுப்பு! எல்லாம் விட்டுட்டுப் பட்டிக் காட்டு மோகன எதுக்கடா

பிர: அப்படியா.

சங்: ஆமா. என் சொல் படி கேள்.

பிர: வரேன் மாமா.

[போகிறார்கள்.]

காட்சி — 20

[கோபால் வீட்டில்]

ச: என்னங்க, ஏன் இப்படி உட்கார்ந்திருக்கீங்க?

கோ: வாழ்க்கையில் எவ்வளவு இடைஞ்சல்கள், எவ்வளவு எதிர்ப்புகள் சரளா. ஏழை வாழ்வது அந்த ஆண்டவனுக்கே பொறுக்காதுன்னு நினைக்கிறேன்.

ச: நான் ஒண்ணு சொல்றேன். நீங்க கேக்கரீங்களா?

கோ: என்ன.

ச: கேக்கரேன்னு..... சொல்ரேன்.

கோ: நீ எது சொல்லி நான் கேக்கல்லே சரளா.

ச: அப்ப இருங்க வர்ரேன்.

[சரளா உள்ளே போய் நூலும் மஞ்சளும் கொண்டு வருகிறாள்.]

இந்தாங்க, இதை உங்க கையாலே கட்டுங்க.

கோ: சரளா என்ன இது?

ச: மாங்கல்யம்னு இது தாங்க. இந்த மஞ்சள் தான். கெட்டித்தங்கத்திலே இதைப் போட்டுக்கரது

அழகுக்கில்லே. ஆடம்பரத்துக்கில்லே. இந்தமாதிரி கஷ்டத்திலே புருஷனுக்கு உபயோகப்படணும்னு தான் கட்டிக்கரது. இந்தாங்க எடுத்துக் கிட்டுப் போங்க. [வெடி மருந்து வெடிக்கிறது. கிணற்றில் தண்ணீர் ஊறிப் பெருகி வருகிறது.]

கிழவன்: ஐயா பட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடச்சுட்டுது.

இன்னெ: ஐயா, அம்மா பெண் குழந்தை பெத்துட்டாங்க.

கிழவன்: ஒரே சமயத்திலே ரெண்டு நல்ல சேதி. இனி நம்ப ஐயாவுக்கு யோகம்தான்.

காட்சி — 21

[பட்டிணத்தில் கண்ணம்மாவின் பணம் எல்லாம் காலியாகிறது. சங்கரலிங்கம் சூழ்ச்சிகள் செய்து பணத்தையெல்லாம் சூரையாடுகிருன். ஒருநாள்]

கண்; அண்ணு உன் மனசுலே என்ன தான் நினைக்கரே. பால்காரன் மளிகைக்காரனெல்லாம் பணத்துக்காக உயிர் எடுக்கிருன். குடும்பச் செலவுக்குக் கூட காலணு வராதபோனு எப்படி? நாடகத்திலே பணம் கர்ணம் போடும்னு சொன்னே.

சங்: சொன்னது பொய்யா? கர்ணம் என்ன கஜகர்ணம் போட்டாலும் நம்ப கைக்கு வர்லியே!

கண்: சரி சரி நாடகமோ இல்லே உன் கபட நாடகம் நடத்தின, அழகுபோதும். லாபமும்வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். போட்ட பணத்தை திருப்பிக் கொண்டா.

[தபால்காரன் வருகிருன்.]

கண்: என்ன அது?

சங்: அதிர்ஷ்டம் தேடி வருதுது. பண்ணை வீடெல்லாம் ஏலம் போட்றேன்னு நோட்டிசு.

கண்: என்ன ஏலமா?

சங்: ஆமா. சேட்டுகிட்டே அடமானம் வெச்சு கடன் வாங்கினுேமே காலணு தரலியே. அவன் ஏலம் போடாமே சும்மா இருப்பானு.

கண்: முடியாது. எப்படியாவது தடுத்தாகணும். எல்லாத்தையும் இழந்தது நம்ப குடும்ப கௌரவம்.

சங்: அது எப்பவோ போயாச்சு.

கண்: இப்பதான் புரிஞ்சது உன் கெட்ட எண்ணம். என் மனசுலே நஞ்சைக் கலந்து எல்லாருக்கும் பொல்லாதவளாக்கிட்டே. பண்ணைப் பணத்தைக் கொள்ளையடிச்சது போதாதுன்னு பட்டணத்துக்குக் கொண்டு வந்து நடுத்தெருவிலே நிக்க வெச்சுட்டியே பாவி! உன் பேச்செக் கேட்டு என மேலே உயிரை வைத்திருந்த என் பிள்ளை கோபாலுக்கு அநியாயம் செய்தேன். அதுதான் இப்ப அனுபவிக்கிறேன்.

[சங்கரலிங்கம் 'கேடி' என்ற நாடகக் கூட்டாளியைக் கொலை செய்து விட்டுப் பிரதாபைக் கொலை செய்த அறையில் தள்ளி கதவைச்

ஆனந்தம் அளிப்பது
சாமிஸ் காபி
REGD. No. 14004I.
சாமிஸ் காபி MFG. CO. 262, நேதாஜி ரோட் மதராஸ்—1.

சாத்தி விடுகிறான். போலீசுக்குப் போன் செய்துவிட்டு உமையாள் புரத்துக்கு ஓடிவிடுகிறான். கோபால் செய்தி அறிந்து சென்னைக்கு வருகிறான். கேடியின் வாக்குமூலத்தின் படி உண்மைக் குற்றவாளி சங்கரலிங்கம் என்று தெரிகிறது. கண்ணம்மாவையும் பிரதாபையும் அழைத்துக் கொண்டு திரும்புகிறான் கோபால்.]

காட்சி — 22

[பண்ணை வீடு ஏலம் விடப்படுகிறது. கிராம மக்கள் ஒன்று கூடி கோபாலின் பெயரில் பண்ணையை ஏலத்தில் எடுத்து விடுகிறார்கள். அங்கே ஏலம் கேட்க வந்த சங்கரலிங்கம் ஏமாற்ற மடைந்து மெல்ல நழுவுகிறான். திரும்பிக் குதிரை வண்டியில் போகும் பொழுது எதிரே வண்டியில் வந்த பாலா பார்த்துவிட்டு கோபாலிடம் சொல்லுகிறாள். பிரதாபும், கோபாலும் சங்கரலிங்கத்தைத் துரத்திக் கொண்டு செல்லுகிறார்கள்.]

கோ : கணக்குப்பிள்ளை, நிறுத்து நிறுத்து.

[வண்டியை குறுக்கே ஓட்டி சங்கரலிங்கத்தை மறித்து விடுகிறார்கள்.]

[சங்கரலிங்கம் ஓடும் பொழுது போலீஸ் வந்து பிடித்துக் கொள்கிறது.]

காட்சி — 23

பாலா : அண்ணி.

கண் : சரளா உன் பெருந் தன்மையைப் புரிஞ்சுக்காம கொடுமை படுத்திட்டேன்.

ச : அப்படி யெல்லாம் சொல்லாதீங்க அத்தை. இனிமே யார் சொன்னாலும் நம்ப குடும்ப ஒற்றுமையை கலைக்க முடியாது.

கண் : [குழந்தையைக் கொஞ்சி] லக்ஷ்மி உன்னாலே எங்க வாழ்க்கையே வளமாயிட்டது. என் தங்க கட்டி நீ.

[ஒரு கிழவன் வந்து தாங்கள் எல்லோரும் ஒருங்கு கூடி பண்ணையை கோபால் பெயரில் ஏலம் எடுத்திருப்பதாகக் கூறுகிறான். வீட்டுக்கு வரும்படி அழைக்கிறான்.]

கோ : அது தவறு. இவையெல்லாம் உங்களுக்குத்தான் சொந்தம். பாடுபட்டு பயிரிடும் விவசாயிகளுக்குத்தான் நிலத்தின் பூரண உரிமையும் இருக்க வேண்டும். இனி கூட்டுறவுப் பண்ணை நடத்துவோம். கூடிக் களித்து வாழ்வோம்.

(சுபம்)

ஜிங்கார்
மாடல்: பிரின்ஸ்
டிஸ்ட்ரிப்யூட்டர்கள்
ஜெ-ஓ-போன் கம்பெனி.
13, தங்கசாலைத் தெரு, சென்னை-3.

Printed by K. Ganapathiraman at the Vadapalani Press, Madras-26 and Published by K. Radhakrishnan, 6 Conronsmith Road, Madras-6 for M/s. Nataraja Publications. Managing Editor. K. Radhakrishnan.

விரைவில் உருவாகிறது!
தென்னகத்துத்திரை வானில்
மின்னவரும் வண்ணத்தாரகை
பாண்டித் தேவன்
மோராக்~ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் தயாரிப்பு
திரைக்கதை•டைரக்ஷன்
K. சுப்ரமண்யம்
வசனம்
முகவை இராஜமாணிக்கம்
பூரண உரிமையாளர்கள்...
ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ்-15, முதல் மெயின் ரோடு, காந்திநகர்-சென்னை-20.

GUNDOOSI Regd. No. M. 6971 April 1958

இலங்கையில் கிடைக்கும் இடம்: A. V. R. A. LTD., Colombo.

ரேடியோ ஸிலோன் 41-72 மீட்டரில் 'இசை விருந்து'—
வெள்ளிக்கிழமை தோறும், மாலை 6-30 முதல் 6-45 வரை.